# SERMONS FOR LENT

# தபசுகாலப்பிரசங்கம்

---

யாழ்ப்பாணம், பெரியமாதாவின் கோவிலிலே
தபசுகாலத்திற் செய்யப்பட்ட
எட்டுப் பிரசங்கங்கள் அடங்கியது

---

2571
GNR

சா. ஞானப்பிரகாச சுவாமி
பதிப்பித்தது

NALLUR SWAMI GNANAPRAGASAR LIBRARY
'Thodarbaham'
657/1, Hospital Rd.
Jaffna
No. 252
O. M. I.

---

யாழ்ப்பாணம்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை
1915

005478

*Imprimatur* :

✠ H. JOULAIN, O. M. I.
Bishop of Jaffna.

Jaffna, 25th Decr. 1915.

# முகவுரை

இப்போது பதிப்பிக்கப்படுகிற பிரசங்கங்கள் எட்டும் முதன்முதல் யாழ்ப்பாணம் பெரியமாதாவின்கோவிலிலே செய்யப்பட்டபோது கிறீஸ்தவர்கள் அவைகளால் வெகு ஆத்துமபிரயோசனத்தை அடைந்ததையும், அவர்களுட் பலர் அப்பிரசங்கங்கள் அச்சில் அமைக்கப்படுமானால் பிறரும் தாங்கள் அடைந்தது போலப் பிரயோசனம் அடைவார்களென்று கருதியதையும் கவனித்தோம், அதினாலேதான் அப்பிரசங்கங்களை சிறிது விரித்தும் தொகுத்தும் அச்சிட்டுப் பரப்ப நினைந்தோம்.

தபசுகாலப்பிரசங்கம் எனும் இப்புத்தகம் ஆண்டவர் பாடுபட்ட காலத்துக்கு மாத்திரமல்ல எல்லாக் காலங்களுக்கும் ஏற்றது. ஆகையால் கிறீஸ்தவர்கள் தங்கள் வீடுகளிலே இதன் ஒவ்வோர் பிரதியை வைத்திருந்து இடையிடையே வாசித்து, பாவத்தின்மேல் வெறுப்பையும் புண்ணியங்களைச் சம்பாதிப்பதில் விருப்பையும் ஆண்டவருடைய திருப்பாடுகளின் பேரில் உருக்கமான பத்தியையும் தங்களிடத்திலே உண்டாக்கிக் காப்பாற்றிக்கொள்வார்களாக.

வண. குருமாருடைய உபயோகத்துக்காக இப்புத்தகத்தின் வேறொருபதிப்பு ஆயத்தமாகிவருகிறது- அதிலே, இதில் வழங்கியிருக்கும் சகல தமிழ்ச்சொற்களுக்கும் இங்கிலீஷ்பாஷையிலே விபரமும் பிரசங்கிப்போருக்குரிய வேறுசில விஷயங்களும்வரும். வண. குருமாரின்பொருட்டாகவே இந்தப்பதிப்பிலேயும் பிரசங்கத்தின் பிரிவுகள் இங்கிலீஷில் காட்டப்பட்டிருக்கின்றன.

சா. ஞா.

## பொருள் அட்டவணை

---


| பிரசங்கம் | விஷயம் | பக் |
|---|---|---|
| விபூதித்திருநாள் | தவத்தின் அவசியம் | 1 |
| தபசுகால முதல்ஞாயிறு .. | நாட்பூசை காணுதல் | ...17 |
| ,, இரண்டாம் ஞாயிறு | சகோதர அன்பு | ... 31 |
| ,, மூன்றாம் ஞாயிறு... | வேதாபிமானம் | ... 49 |
| ,, நாலாம் ஞாயிறு ... | முகத்தாட்சணியம் | ... 70 |
| ,, ஐந்தாம் ஞாயிறு ... | பாவத்தின் கொடுமை | ... 90 |
| ,, ஆறாம் ஞாயிறு ... | நன்மைவாங்க ஆயத்தம் | ...107 |
| பெரியவெள்ளிக்கிழமை ... | ஆண்டவருடைய மனோ பீடைகள் | ... 127 |


---

# SERMONS FOR LENT

# தபசுகாலப்பிரசங்கம்

## விபூதித்திருநாள்

### On the Necessity of Penance

### தவத்தின் அவசியம்

Facite fructum dignum pœnitentiæ.
தவத்துக்கேற்றகனிகளைக்கொடுங்கள். (அர்ச். மத். 3; 8.)

நம்முடைய திவ்விய மீட்பராகிய யேசுநாதசுவாமிக்கு முன்னோடியாய் அனுப்பப்பட்ட ஸ்நாபக யுவானியார், வனாந்தரத்திலேயோர்தான் நதிக் கரையிலே பச்சாத்தாப ஞானஸ்நானங் கொடுத்துக் கொண்டிருந்தார். பழைய ஏற்பாட்டின் ஆசாரங்களைக் கைக்கொள்ளுவதிலே பற்றுதலுள்ள யூதசனங்களெல்லாம். எருசலேமிலிருந்தும் யோர்தானின் சுற்றுப் புறங்களிலிருந்தும் கும்பல்கும்பலாய்ப் புறப்பட்டு ஸ்நாபகரிடத்தில் வந்

து, அவர் கையால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களுள்ளே வெளித்தோற்றமான ஒழுக்கங்களைக் காத்து நடப்பதிலே மிகவும் நுணுக்கமான பரிசேயர்கள் பலர் உலகத்துக்குரிய யோக்கியத்தை மாத்திரம்பெரிதாய்மதித்த சதுசேயர்கள் பலர் தேவாலயத்தின் பிரதான ஆசாரியரால் அனுப்பப்பட்ட வேதசாஸ்திரிகள் பலர். இவர்களெல்லாம் பழைய வேதத்தின் சடங்காசாரங்களைத் திட்பநுட்பமாய் அனுசரிப்பது இரட்சணியத்துக்குப் போதுமென்று நம்பியிருந்தவர்கள். யுவானியாரோ, மெய்யான மனந்திரும்புதலும், அதற்கு அடையாளமான தவமுமில்லாமல் தேவமுனிவுக்குத் தப்பிக்கொள்ளக்கூடாதென்று இவர்களுக்குத் தெளிவாய்ப்பிரசங்கித்து: விரியன்பாம்பின் சந்ததியே, வரப்போகிற தேவகோபாக்கினிக்குத் தப்பிக்கொள்ளும் வழியை உங்களுக்குக் காட்டினவன் யார்? தவத்துக்கேற்ற கனிகளைக்கொடுங்கள்: நீங்கள் தவஞ் செய்யாவிட்டால், இதோ கோடரியானது மரத்தடியில் வைத்திருக்கிறது; கனிகொடா மரமெல்லாம் வெட்டி அக்கினியிலே போடப்படும் என்று வசனித்துவருவார்.

The Text circumstantially introduced

உலகத்தை ஈடேற்ற எழுந்தருளிய திவ்விய குருவாகிய யேசுநாதசுவாமி பழைய ஏற்பாட்டை அழித்துவிடவல்ல, நிறைவேற்றவே வந்தவர் ஆகையால், பாவத்தின் நிழல்கூட இல்லாதவராகிய அவரும் சனத்தோடு சனமாய், கும்பலிலே ஒரு ஆளாய்ப் போய் ஸ்நாபகர் கையால் ஞானஸ்நானம் பெற்றார். பெற்றபின் ஸ்நாபக யுவானியாருடைய போதகத்தின் உண்மையை நமக்குக் காட்டும் பொருட்டும், தாமே நமக்குத் தவத்தின் அவசியத்தைத் தமது முன்மா



திரிகையினாற் படிப்பிக்கும்பொருட்டும் வனாந்தரத்திற் போயிருந்து நாற்பது நாளாக அன்னபானம் இன்றிக் கடின தபசு செய்தருளினார். நமது கர்த்தருடைய இந்த நாற்பது நாள் உபவாசத்தின் ஞாபகமாகவே திருச்சபையானது இப்போது நிகழுகிற தபசு காலத்தை எற்படுத்தியிருக்கிறதென்பது, பிரியமான கிறீஸ்தவர்களே, நீங்கள் அறியாத காரியமல்ல. இந்தக் காலத்திலே திருச்சபையானது அர்ச். ஸ்நாபக யுவானியாருடைய வார்த்தைகளையே தானும் எடுத்தாண்டு, தவம்பண்ணாதிருக்கிற சகலரையும் நோக்கி: "தவத்துக்கேற்ற கனிகளைக் கொடுங்கள்" என்று பிரசங்கிக்கிறது.

Division

அர்ச். யுவானியார்காலத்திற் போலவே இக்காலத்திலும் அநேகர், தாங்கள் எத்தனை பாவங்களைச் செய்திருந்தும், எவ்வளவு அநித்திய தண்டனைக் கடனைத் தோள்மேற் சுமந்திருந்தும், தங்களுக்குப் பிரியமான பத்திக் கிருத்தியங்களையும், நோவாத சில திருச்சபை ஆசாரங்களையும் அனுசரித்துக்கொண்டால் அவைகளால் இரட்சணியம் அடைந்துவிடலாம் என்று நம்பி மோசம்போகிறார்கள். ஆனால், சத்திய திருச்சபையோ, தவமின்றி இரட்சணியமடையக்கூடாதென்று என்றும்போலவே இன்றும் போதித்துக் கொண்டுவருகின்றதும் அன்றி, வருஷந்தோறும் இந்த நாற்பது நாட்காலத்தைத் தபசுகாலமாக அனுசரித்துக்கொண்டும் வருகின்றது. திருச்சபையானது விசுவாசிகளுடைய நெற்றியிற் சாம்பர் பூசித் தவஞ் செய்யுங்கள் என்று ஏவிவிடுகின்ற இந்த நாளிலே, தவத்தின் அவசியத்தை நாம் நன்றாய் உணர்ந்துகொள்ளப் பிரயாசப்படுவதே உசிதம் அல்லவா? ஆதலால் இந்த நல்ல மாதா இடையறாமற் போதித்துக்கொண்

டுவருகிற இத் தவத்தின் தன்மை என்ன? சகலரும் தவம் பண்ணுவது அவசியமா? நாம் எப்படித் தவஞ் செய்யவேண்டும்? எனும் இவைகளை ஆராய்வோம். தயவு செய்து நல்ல கவனத்தோடும் பத்தியோடும் கேட்டுக்கொள்ளுங்கள்.

## I

True idea of Penance

முன்பு, தவமாவது என்னவென்பதை நன்றாய் விளங்கிக்கொள்ளவேண்டும். வேதசாஸ்திரியாகிய அர்ச். அக்கினு தோமையார் சொல்வதாவது: தான்செய்த பாவங்கள் சருவேசுரனுக்கு ஏராத துரோகமென்று கண்டு துக்கிக்கிற ஆத்துமமானது, அத்துரோகத்துக்காகத் தன்னைத்தானே தண்டிக்கவேண்டுமென்று விரும்பி, ஒருவிதத்திலே தன்னிற் பழிவாங்குதலே தவமாம் என்கிறார். இது மெய்யான மனந்திரும்புதலுக்குரிய ஒருகுணம். சருவேசுரன் பக்கமாக மெய்யாகவே, முழுமனதோடும் திரும்பிவிட்டவன், தான் முன் கட்டிக்கொண்ட பாவங்களை அளவில்லாமற் பகைப்பான். "என்னைப் படைத்தவரான நேசபிதாவுக்கு விரோதமாகத்தான் பாவத்தைச் செய்தேனே" என்ற நினைவினால் அவன் மனமானது துடி துடித்துப் பதைபதைத்துக்கொண்டிருக்கும். ஆனதினாற் தான் செய்த துரோகங்களுக்காகத் தன்னிலே தானே பழிவாங்கவேண்டும் என்ற ஆசை பிறக்கும். சருவேசுரன் அளவில்லாத பரிசுத்தர். ஆனபடியால், அவர்பக்கமாய் முழுமனதோடு திரும்பிவிட்டவன், அவர் பாவத்தைப் பகைக்கிறதுபோலவே தானும் தன்னால் இயன்றமட்டும் அதைப் பகைக்கத் தொடங்குவான். அவர் அளவில்லாத நீதியுள்ளவர். ஆனபடியால்,



அவர் நீதிக்கோபத்தோடு எழுந்து தன்னைத் தண்டிக்குமுன்னரே தானே தன்னைத் தண்டித்துக்கொள்ளத் தேடுவான் இசிறவேல் சனமே, "எனக்கும் என்னுடைய திராட்சக் கொடிக்குமிடையில் நீங்கள் தானே நடுத் தீர்த்துக்கொள்ளுங்கள்" என்று இசையாஸ் தீர்க்கதரிசியின் ஆகமத்திலே * சொல்லியிருக்கிறபடி, மனந்திரும்பியவன், தானே சருவேசுரனுக்கும் அவருடைய திராட்சக்கொடியாகிய தன் ஆத்துமத்துக்குமிடையில் நீதியோடு, கண்டிப்போடு நடுத் தீர்த்துக்கொள்ளுவான். தன்னுடைய மனதுக்கு இசைவாயல்ல, சருவேசுரனுடைய நீதிக்குச் சரியாக; பாடுகளுக்கு அஞ்சும் தன்னுடைய கோழைத்தனத்தைப் பார்த்தல்ல, சருவேசுரனுடைய அகோரமான தீர்வைகளுக்கு இணங்க நடுத்தீர்த்துக்கொள்ளுவான்.

Sin as viewed by ourselves

ஆ! கிறீஸ்தவர்களே, சருவேசுரனுடைய கோணாத நீதியை, பயங்கரமான தீர்வைகளை நாம் ஊன்றித் தியானிக்கிறதேயில்லை. அப்படிப்பட்ட தியானமானது நமக்கு வெகு கசப்பு, வெகு அருவருப்பு பாவத்தோடிருக்கிற நாம் மட்டுக்கடங்காத பரிசுத்தராகிய அவரும் பாவத்தைச் சட்டை பண்ணாரென்று எண்ணிக்கொள்ளுகிறோம். "ஆண்டவர் இரக்கமுள்ளவர் அல்லவா? அவர் பொறுத்துக்கொள்ளுவார்" என்று சொல்லிக்கொள்ளுகிறோம். ஆனால் அவரும் நம்மைப்போல பலவீனரா? கோழைத்தனமுள்ளவரா? அல்லது தண்டிக்க வல்லமையில்லாதவரா? இல்லையில்லை. பொறுக்கப்பட்ட பாவத்துக்

* இசையாஸ் 5; 3.

குத்தானும் அவர் இடுகிற ஆக்கினையைக் காணும்போது நாமெல்லாம் பயத்தினால் தம்பித்துப்போய் நிற்க வேண்டியதாயிருக்கிறதே. நமது ஆதிப்பிதாவாகிய ஆதாம் செய்த பாவம் பொறுக்கப்பட்டதல்லவா? ஆனாலும், தலையானது செய்த அந்தப் பாவத்துக்காக அங்கங்களாகிய சகல மனிதருக்கும் இடப்பட்டிருக்கிற அபராதத்தை அறிவீர்களே! மனுக்குலத்துக்கு எத்தனை துன்ப துயரங்கள், எத்தனை கஷ்டநஷ்டங்கள், எத்தனை ஆருட்டமான மரணம்! ஒரு மனுஷனின் பாவத்தினால் உலகம் முழுதிலும் மரணம் பிரவேசித்திருக்கிறதே.* ஆதாம் செய்த ஓரேபாவத்துக்கு இடப்பட்ட ஆக்கினையை அவர்கள் பிள்ளைகளாகிய நாமெல்லோரும் இன்றைவரைக்கும் பட்டு அனுபவித்துக்கொண்டு வருகிறோமே. ஆதலால் தேவ நடுத்தீர்வைகளுக்கு அஞ்சாதிருக்கத்தக்கவன் யார்? ஆகையாற்தான், மெய்யாக மனந்திரும்பியவன், தன்பாவங்கள் எத்தனை பாரதூரமோ, அத்தனை கனமாய்த் தன்னை வதைத்துக்கொள்ள விரும்புவான்.

*and as viewed by God*

இவ்வாறாகத் தன்பேரிலே ஓர் பரிசுத்த பழிவாங்குதலைச் செய்துகொண்டுவருகிற கிறீஸ்தவனுடைய தவச் சீவியமானது சென்ற காலத்தின் நஷ்டங்களைப்பரிகரிப்பதோடு, வருங்காலத்திலே பரிசுத்ததனம் என்னும் சம்பத்தைச் சேர்ப்பதற்கும் வழியாகும். அர்ச். சின்னப்பர் புதிதாய் மனந்திரும்பியிருந்தோராகிய ரோமைச் சபையாருக்கு எழுதி: சகோதரர்களே, நீங்கள் இதற்குமுன் உங்கள் அவயவங்க-

*Two effects of Penance*

* ரோமர் 5; 17.



ளைப் பாவ அசுத்தத்துக்கும் அக்கிரமமான துர்க்கிரியைகளுக்கும் பணிவிடைசெய்யப் பாவித்திருக்கிறீர்களே, இனிமேல் அந்த அவயவங்களையே நீதியையும் பரிசுத்தத்தையும் அடைந்து கொள்ளுவதற்கு வழியாகப் பாவித்துக்கொள்ளுங்கள் என்றார்.* இந்த உத்தமமான போதகத்தின்படி, மெய்யாக மனந்திரும்பிய கிறீஸ்தவன், முன்னே பாவத்துக்கு உதவியாயிருந்த தன் கண்களை, செவிகளை, வாயை, மூக்கை, சரீரத்தை இனித்தேவ தொண்டுக்கு உரியவைகளாகும்படியாக ஒறுத்து அச்சம்பண்ணிக் கீழ்ப்படுத்திக்கொண்டுவருவான். உள்ளபடி, அவன் முந்தித் தவறி விழுந்திருந்த படுகுழி எவ்வளவு ஆழமானது! அவன் விட்டு விலகிய செங்குத்தான மலைப்பாதை எவ்வளவு அபாயமானது! இனியும் அவன் நித்திய நரகக் கிடங்குக்கு வழியாகிய அப்படுகுழியில் விழத்தக்க ஒரு காரணத்தைத் தனக்குள்ளே வைத்துக்கொள்ளுவானா? இனியும் அவன் அந்தச் செங்குத்தான மலைப்பாதையில் அடிவைப்பானா? வையான் வையான். ஆனால், தன் சரீரமாகிய சத்துருவும், பஞ்ச புலன்களாகிய அதன் சதிமானக் கூட்டாளிகளுமே தன்னை இதற்குமுன் மடிப்புச் செய்தவர்கள் என்று அறிந்திருக்கிறபடியால், இந்தத் துரோகிகளைத் தங்கள் தங்கள் எல்லைக்குள் அடக்கிக் கீழ்ப்படுத்தி வைத்துக்கொள்ளுவான். இவ்வகையான வருங்காலத்தை நோக்கிய தவமும் மெய்யான மனந்திரும்புதலுக்குரிய குணமேயாம்.

நம்முட் பலர், மனந்திரும்பினோம், பாவசங்கீர்த்தனம்பண்ணிவிட்டோம் என்று சொல்லிக்கொண்

* ரோமர் 6; 17.

டாலும், உள்ளபடி மனந்திரும்பாதவர்களாயிருக்கிறோம் என்பது சீக்கிரத்தில் தெரியவருகின்றது அல்லவா? இதற்கு நியாயம் என்ன? நாம் பாவசங்கீர்த்தனம்பண்ணியும் தவம்பண்ணாதவர்களாய் இருப்பதுதான் நியாயம். ஒரு பாவப்பழக்கத்தை விட்டோம் என்று எண்ணிக்கொண்டு, வேறொன்றிற் போய் இறங்கிவிடுகிறோம். உதாரணமாய், வெளிக்குப் பகையை விட்டோம் என்று இருந்தாலும் உட்பகையை வளர்த்துக்கொள்ளுவோர் எத்தனைபேர்!

*Penance a sign of real Conversion*

மோகபாவத்தை விட்டோமென்று சொல்லிக்கொண்டு போசனப்பிரியத்திலே, குடிவெறியிலே கிடந்து தவழுவோர் எத்தனைபேர்! அசுத்த நடையை விட்டுவிட்டோம் என்று நினைத்துக்கொண்டு, கெட்டபார்வைகள், கெட்டசிந்தனைகளிலே காலம் போக்குகிறவர்கள் எத்தனைபேர்! சகோதரர்களே, மோசம்போகாதிருங்கள், தவமில்லாமல் மெய்யான மனந்திரும்புதல் இல்லை. தவமில்லாமல் புண்ணிய வளர்ச்சியும் இல்லை. விசேஷமாய், நெடுங்காலத் துர்ப்பழக்கங்களோடு இருக்கிறவர்கள், எத்தனை செபங்களைப் பண்ணினாலும், எத்தனை கண்ணீர்களை வடித்து அழுதாலும், எத்தனை தரம் பாவசங்கீர்த்தனம் பண்ணினாலும்—அவர்கள் தங்கள் சரீரத்தை ஒறுத்து நடத்தாவிட்டால், பஞ்ச புலன்களின்மேல் சாக்கிரதையான காவல் பண்ணாவிட்டால், மனம் போனபோக்கெல்லாம் போவதை விட்டுக் கிறீஸ்துநாதருடைய சிலுவையைச் சுமந்துகொள்ளாவிட்டால்,—ஒரு வார்த்தையிலே சொல்லுகில், தவம்பண்ணாவிட்டால்—அவர்கள் ஒருபோதும் மனந்திரும்பினவர்களேயல்ல. தவந்தான் மெய்யான மனந்திரும்புதலுக்கு அடை



யாளம். தவந்தான் ஒருவன் உள்ளபடியே பாவத்தைப் பகைக்கிறான் என்பதற்கு அறிகுறி. தவந்தான் அவன் பரிசுத்தனாய்ச் சீவிக்க உண்மையான, காத்திரமான தீர்மானம் பண்ணிக்கொண்டான் என்பதை உள்ளங்கையில் நெல்லிக்கனியைப் போலக் காட்டும் அத்தாட்சி.

தவத்தின் தன்மை இது என்று அறியாமல் புரோட்டெஸ்தாந்தர் முதலிய பதிதர்: இனிப் பாவஞ் செய்யாமல் விட்டுவிடுவதே தவம்,

*False notions on Penance*

பாவத்துக்காக மனதிலே துக்கப்படுவது மாத்திரமே தவம் என்று தப்பிதமாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் வேதத்திலே சொல்லப்படுகிற தவமானது, முன் செய்த பாவங்களுக்காகத் தன்னைத் தண்டித்துக்கொள்வதிலேயும், இனிப் பாவஞ்செய்யத் தன்னை ஏவாதபடி சரீரத்தை ஒறுத்து அடக்கிக் கீழ்ப்படுத்திவைத்துக்கொள்வதிலேயும் அடங்குமென்று இதுவரையில் நாம் சொன்னவைகளால் உங்களுக்குத் தெளிவாய்ப்போயிருக்குமென்று நம்புகிறேன்.

## II

ஆனால், சகலருக்கும் தவம் அவசியந்தானா? பிரியமான கிறீஸ்தவர்களே, அற்பமாசும் அணுகாதவரும்,

*Necessity of Penance established from the Gospels*

அளவில்லாத பரிசுத்த சருவேசுரனுமாகிய யேசுநாத சுவாமி தாமும் தவஞ்செய்யத் திருவுளமாயிருந்திருக்கையில், பாவிகளாகிய நமக்கு அது அவசியமில்லை என்று சொல்ல யார் துணிவார்? நமது திவ்விய குருவானவர் தாம் செய்தபிரசங்க வாக்கியங்களால் மாத்திரமல்ல, நடந்துகாட்டிய திவ்

வியமாதிரிகையாலும் நமக்குப்போதித்திருக்கிறாரென்று அர்ச்சியசிஷ்டர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள். இதோ முன்மாதிரிகையைக் கண்டோம்; அவர் தாமே தவஞ்செய்தார். இனி, இதோ அவர் திருவுளம்பற்றிய வார்த்தைகளிலும் சிலவற்றை எடுத்துச் சொல்லுகிறேன், கேளுங்கள். கர்த்தர் செய்த முதற்பிரசங்கம் என்ன? முதன் முதல் அவர் தமது சீஷரோடு புறப்பட்டுப் பட்டணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் பிரசங்கம் செய்யப் போனபோது "தவஞ்செய்யுங்கள் தவஞ்செய்யுங்கள்; ஏனெனில், பரலோகராச்சியம் சமீபமாயிற்று," என்று கூறித்திரிந்தார் என்று அர்ச். மத்தேயு எழுதிவைத்திருக்கிறார்.* தவஞ்செய்யாததற்காகவே, கொறோசேயின், பெத்சாயிதா என்னும் பட்டணங்களை எங்களாண்டவர் பெருந் துயரத்தோடு கடிந்து சபித்தார் என்று அர்ச் மத்தேயு சொல்லுகிறார்.† கொறோசேயினே உனக்கு ஐயோ கேடு, பெத்சாயிதாவே உனக்கு ஐயோ கேடு, ஏனெனில் உங்களிடத்தில் செய்யப்பட்ட அற்புதங்கள் முற்காலம் தீர் சீதோன் எனும் பட்டணங்களில் செய்யப்பட்டிருக்குமேயாகில், அவர்கள் இரட்டு உடுத்துச் சாம்பலும் தரித்துத் தவஞ்செய்திருப்பார்களே. பாருங்கள் இரட்டு உடுத்துச் சாம்பலுந் தரித்துத் தவஞ்செய்யாததுதான் அப்பட்டணத்தாருக்குக் கிடைத்த தேவ தீர்வைக்கு நியாயம் என்கிறார் நம்முடைய அரிய கர்த்தர். வேறு பல தடவைகளிலும் கர்த்தர் தம்முடைய சீஷரையும் பிறரையும் நோக்கி: நீங்களும் தவம்செய்யாதிருந்தால் கெட்டே போவீர்கள், கெட்டே போவீர்கள் என்று சொல்லியருளினார் என்று சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். ‡

* மத்தேயு 4; 17. † மத்தேயு 11; 21. ‡ லூக்கா 13; 3.



ஒருவேளை: நம்முடைய இரட்சகர் பாடுபடமுன் தான் இந்தப் பிரசங்கம் செய்யப்பட்டது. அவர் எங்களுக்காகப் பாடுபட்டதோடு இனி நாங்கள் எங்களை அதிகமாய் ஒறுக்கத் தேவையில்லை யென்று சொல்லலாமா? ஒருபோதும் சொல்லக் கூடாது. ஏனெனில், தாம் பாடுபட்டுப் பரலோகத்துக்கு ஆரோகணமான பின்பே தமது சீஷர்கள் ஒருசந்தியாயிருப்பார்கள் என்று சொன்னார்: "மணவாளன் தங்களோடு இருக்குமட்டும் அவன் தோழர்கள் துக்கித்திருக்கக்கூடுமோ? ஒருநாள் மணவாளன் எடுத்துக்கொள்ளப்படும் காலம் வரும்; அப்போதே அவர்கள் ஒருசந்தியாயிருப்பார்கள்"* ஆம். யேசுநாதசுவாமி திருவாய் மலர்ந்தபடியே அவரது ஆரோகணத்தின் பின்னும் அப்போஸ்தலர்கள் தவத்தைப் போதித்துக்கொண்டுவந்ததைக் காண்கிறோம். ஆரோகணத்துக்குப்பின் பத்தாம் நாளில் திருச்சபைத் தலைவராகிய அர்ச். இராயப்பர் பண்ணிய முதற்பிரசங்கத்திலே தவஞ்செய்யும் கடமையைத்தான் வலியுறுத்திப் பேசுகிறார். "தவஞ்செய்யுங்கள் உங்கள் பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று தலைமை அப்போஸ்தலர் பிரசங்கித்தார்.† ஓர்வேளை ஆண்டவரைக் கொன்றவர்களாகிய யூதசாதியாருக்கு மாத்திரம் அப்போஸ்தலர் இப்படிப் பிரசங்கித்தார் என்று சொல்லலாமா? இல்லையில்லை. "சருவேசுரன் இப்போது சகல மனிதருக்கும் எங்கெங்கும் தவஞ்செய்யவேண்டுமென்று அறிவிக்கிறார்" என்பதாக அப்போஸ்தலர்கள் பிரசங்கித்துக்கொண்டுவந்ததை அப்

2 from the teaching of the Apostles

* மத்தேயு 9; 15.
† அப். நடபடி 2; 38.

போஸ்தலர் நடபடி என்னும் ஆகமம் தெளிவாய்ச் சொல்லுகின்றது.*

அப்போஸ்தலர்கள் தாங்கள் போதித்தபடி நடந்துகொண்டும் வந்தார்கள். அப்போஸ்தலரென்றால் முற்றாய் மனந்திரும்பிய மனிதர் அல்லவா? யேசுநாத சுவாமிக்காக எல்லாவற்றையுந் துறந்துவிட்டு யூதருடைய பகைப்புக்குப், அஞ்ஞானிகளுடைய நகைப்புக்கும் இலக்காகி, காடுண்டோ மலையுண்டோ, கரையுண்டோ, கடலுண்டோ எங்கும்போய் உலைந்து சுவிசேஷத்தைப் போதிக்க ஏற்பட்டவர்கள் அவர்கள் அல்லவா? தேவ வரப்பிரசாதத்திலே திடப்பட்ட சுத்தவாளர் அவர்களல்லவா? ஆனாலும் அவர்களும் கடின தவம் செய்துகொண்டுவந்தார்கள். அர்ச். சின்னப்பர் சொல்லுகிறதைக் கேளுங்கள்: "எங்கள் சரீரங்களில் எப்போதும் யேசுக்கிறீஸ்துநாதருடைய பாடுகளைத் தரித்திருக்கிறோம். இதனால் யேசுக்கிறீஸ்துநாதருடையசீவியம் எங்கள்சரீரங்களிலும் காணப்படுகிறது" என்கிறார்.† இன்னும் ஓரிடத்தில் "கிறீஸ்துநாதருடைய பாடுகளிலே குறைவாயுள்ளவைகளை (அதாவது நானும் அனுபவிக்கவேண்டும் என்றிருக்கிறவைகளை) என் மாமிசத்திலே நிறைவேற்றிக்கொண்டுவருகிறேன்" என்கிறார் ‡

and their practice

இந்தப் போதகத்தைச் செய்த திருப்பிரசங்கிகள் மாத்திரமா, அவர்கள் போதகத்தைச் சுமுத்திரையாய் அனுசரித்த ஆதிக் கிறீஸ்தவர்களும் தவத்தையே பிரதானமாய்ப் போற்றினார்கள் என்று காண்கிறோம். அவர்கள் அடிக்கடி ஒருசந்தியாயிருந்தார்கள். நெடுநேரம் விழித்திருந்து

3 from the example of Early Christians

* அப். நட. 17; 30. † 2 கொரிந். 4: 10 ‡ கொலோ 1; 24



செபஞ்செய்தார்கள். மயிர்ச் சட்டையை அணிந்தார்கள், முள் ஒட்டியாணத்தைத் தரித்தார்கள். இப்படிப்பட்ட தவஞ்செய்த இவர்கள் யார்? சன்னியாசிகளா? கன்னியாஸ்திரிகளா? இல்லை இல்லை; அக்காலத்திலே சன்னியாசச்சபைகள், கன்னியாஸ்திரிக் கூட்டங்கள் ஒன்றும் உண்டாயிருக்கவில்லை. உங்களைப் போல உலகத்திலேசஞ்சரித்துக்கொண்டுவந்த கிறீஸ்தவர்களே இப்படிப்பட்ட தபசுகளைச் செய்வோரானார்கள். இதுவும் ஆச்சரியமா? கிறீஸ்தவர்கள் என்றால் யார்? கிறீஸ்துநாதருடையவர்கள். கிறீஸ்துநாதருடையவர்கள் என்றால் யார்? அர்ச் சின்னப்பர் சொல்லுகிறபடி தங்கள் சரீரத்தை அதன்சகல ஆசாபாசங்களோடும் சிலுவையிலே அறைந்துபோட்டவர்கள்தான் கிறீஸ்துநாதருடையவர்கள்.* உள்ளபடியே, சரீரத்தின் இச்சைகளை அடக்கி, இந்த உலகம் ஒரு சண்ணீர்க் கணவாயேயல்லாமல் தங்கள் சுயதேசமல்ல என்று கண்டுபிடித்துக்கொண்டு, உலகத்திலிருந்தாலும் உலகத்தாரல்லாமல் அதை வெறுத்து நடக்கிற தவத்திகளின் கூட்டந்தான் கிறீஸ்தவர்கள் சபை. சிலுவையைச் சுமந்துகொண்டுபோய் அதில் அறையுண்டவருடைய சகோதரர்தாம் கிறீஸ்தவர்கள். ஆகையினாலே கர்த்தரும் "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தன்னைத்தானே வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு வருவானாக."† "பரலோக ராச்சியம் பலவந்தப்படுகின்றது. பலவந்தக்காரர் அதைப் பறித்து எடுக்கிறார்கள்" ‡ "ஓ சீவியத்துக்குச் செல்லுகிற பாதை எவ்வளவு ஒடுக்கமும், வாசல் எவ்வளவு இடுக்கமுமாயிருக்கிறது"¶ என்று

* கலாத். 5; 24
† மத். 16; 24
‡ மத். 11 : 12
¶ மத். 7 ; 14

திருவுளம்பற்றுகிறார். ஆமாம், தவஞ்செய்யாதவர்கள் கிறீஸ்தவர்களல்ல, அதாவது கிறீஸ்துநாதருடையவர்கள் அல்ல. ஆகையால் கிறீஸ்தவர்களாகிறவர்கள், ஏதோ ஒருவிதத்தில் தவஞ்செய்யவேண்டியவர்களே என்பது சத்தியத்திலும் சத்தியம்; வெளிப்படையிலும் வெளிப்படை.

## III

Church laws on Penance much relaxed at present

இனி, தவஞ்செய்யவேண்டிய விதத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லி முடிப்போம். முதலாவது திருச்சபைக் கட்டளையினால் நமக்குக் கடமையான தவக் கிருத்தியங்கள் எவையெவையோ, அவைகளை நாம் கட்டாயமாய் அனுசரிக்கவேண்டியது. திருச்சபையானது இரக்கமும் விவேகமுமுள்ள ஒரு மாதாவைப்போல, கோழைத்தனம் மேலிட்ட இக்காலத்தில் இருக்கும் நமக்கு எவ்வளவோ லேசான தவக்கிருத்தியங்களைமட்டும் கற்பிக்கின்றது. முற்காலத்திலே கிறீஸ்தவர்கள் அநேகநாள் ஒருசந்தியாக இருப்பார்கள். அநேகநாட் சுத்தபோசனங் காப்பார்கள். அதுவும் மிகவும் கடினமான ஒருசந்தி; கடினமான சுத்தபோசனம். தற்காலமோ தபசுகாலத்திலே வெள்ளிக்கிழமை ஒருசந்தியும், வாரத்தின் மூன்றுநாட்களிலே மாத்திரம் மாமிசவிலக்கமும் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒருசந்தியும் இயலாதவர்களுக்காக எவ்வளவோ லேசாக்கப்பட்டிருக்கிறது. காலையில் தண்ணீர்வகையையும் சொற்ப கெட்டிபோசனத்தைத்தானும், மாலையில் ஓர் சிற்றுணவையும் செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது. ஆகையால் ஒரு



சந்தி காக்க வயதுள்ளவர்கள் யாருக்கேனும், முற்காலத்திலேபோலக் கடின ஒருசந்தி காக்கக்கூடாவிட்டால், அதற்காக அவர்கள் அதை விட்டுவிடப்படாது. திருச்சபையானது செய்திருக்கின்ற இளக்காரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, காலையில் ஏதும் சொற்ப உணவையும் மாலையில்சிற்றுணவையும் உட்கொண்டாவது ஒருசந்தி காக்கவேண்டும். தவத்தின் அவசியத்தையும், திருச்சபைக் கட்டளைகளின் கனத்தையும் நீங்கள் யோசித்துப்பார்த்தால், உத்தரவின்றி இந்த ஒருசந்திக் கடனை ஒருபோதும் அலட்சியஞ்செய்யவேமாட்டீர்கள்.

Examples of voluntary Penance

தபசுகாலத்திலே கடமையான இவைகள் போதுமென்றிராமல், திருச்சபையின் கருத்துக்கிசைய வேறு தவக்கிரியைகளையும் செய்யத்தகும். இந்நாட்கள் துக்கநாட்களல்லவா? இந்தநாட்களுக்கேராத உண்டாட்டுக் களியாட்டுகளையும், வேடிக்கை விநோதங்களையும், காட்சிகளையும், பராக்குகளையும் பஞ்சேந்திரியங்களுக்குக் கொடாமல் மறுக்கக்கடவோம். அன்னபானங்களை ஒறுக்கிறது மாத்திரம் அல்ல, கண்களுக்கும் செவிகளுக்கும் அவசியமில்லாதவைகளைக் கொடாமல் மறுக்கிறதும் தவந்தானேயாகும். இந்நாட்கள் செபஞ்செய்யும் நாட்களுமாம். ஆகையால் திவ்வியபூசைகாணுதல், சிலுவைப்பாதை முயற்சி செய்தல் முதலிய பத்திக்கிருத்தியங்களையும் பசாம் வாசித்தல் முதலிய தியானங்களையும் கோவிலிலும் வீட்டிலும் செய்யக்கடவோம்.

திருச்சபைக் கட்டளையினால் இந்தநாட்களிலே செய்யவேண்டிய தவத்தைவிட, தேவகற்பனையினால்

Instances of self-denial

நாம் எப்போதும் செய்யவேண்டிய தவமும் ஒன்று உண்டு. அதாவது ஒவ்வொரு கிறீஸ்தவனும் தன்னைத்தானே வெறுத்து தன் சிலுவையைச் சுமந்துகொண்டு நடக்கவேண்டியதாகிய தவமாம். விசேஷமாய்ப் பாவகாரணங்களாயுள்ள இன்பங்களை எப்போதும் விலக்கக் கடமையுண்டு. பாவப்பழக்கங்களிற் சிக்கிக்கொண்டவர்கள், மற்றோரிலும்பார்க்க அதிக தவம்பண்ணவும், அவசியமானால், ஊண் உறக்கத்தைக் குறைத்துச் சரீரத்தைத் தண்டிக்கவும் கடமைப்பட்டவர்கள். ஆயினும் இவர்கள் தங்கள் சுய எண்ணத்தின்படி மாத்திரம் நடந்துகொள்ளாமல் ஆத்துமகுருவின் ஆலோசனைபோடுதான் இத் தவக் கிருத்தியங்களைச் செய்யத்தகும்.

கிறீஸ்தவர்களே, உங்களுக்காகக் கட்டப்பட்டு, அடிக்கப்பட்டு, காறி உமிழப்பட்டு, சிலுவையைச் சுமந்து, சிலுவையிலேறிமரித்து உங்களுக்கு மோட்ச ராச்சியத்தைத் திறந்துவிட்டவருடைய மெய்யான சீஷர்களாகவிருக்க விரும்புகிறீர்களா? விரும்பினால் நீங்களெல்லோரும் ஒவ்வொருவருக்கும் இயன்றமட்டும் தவஞ்செய்யக்கடவீர்கள். அப்போது, ஆண்டவர் நடந்தபாதையிலேயே நீங்களும் நடக்கிறவர்களாகி, அவருடைய பேரின்ப திருமுக தரிசனத்தையும் அடைந்துகொள்வீர்கள் ஆமென்.

## தபசுகால முதல் ஞாயிறு

## On Hearing Week-day Mass

## நாட்பூசை காணுதல்

Vidi Agnum stantem tanquam occisum.

தேவசெம்மறிப்புருவையானவர் கொல்லப்பட்ட பாவனையாய் நிற்கக் கண்டேன்.
(அருளப். காட்சி 5;6)

கரைகாணாத அன்பின் சமுத்திரமாயிருக்கிற சருவேசுரன் பாவத்தால் கெட்டுப்போய்க் கிடந்த மனுச் சந்ததியை மீட்கத் திருச்சித்தங்கொண்டு, தம்மோடு ஏக சுபாவம் உடையவரும் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்கிறவருமாகிய திருச் சுதனை இப் பூவுலகத்திலே மீட்பராக அனுப்பச் சித்தமானார். இந்தத் திருச்சுதன் மனுஷனாகி இவ்வுலகத்தில் முப்பத்துமூன்று வருஷஞ் சீவித்து, கடைசியாய், நமக்காக மனோ வாக்குக்கு எட்டாத வாதைகளைப் பட்டுச் சீவனையும் விட்டார். ஆனால், கிறீஸ்தவர்களே, பிதாவின் ஏக பேறான, நித்தியராகிய சுதனானவர் தாமும் அளவில்லாதவரானபடியால், அவர் மனுமக்களை நேசிக்கத் தொடங்கியபோது அளவில்லாமலே நேசிப்பவரானார். அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறபடி இவ்வுலகத்தில் இருக்கிற தம்முடையவர்களை நேசிக்கத் தொடங்கி அவர்களைக் கடைசி பரியந்தம் நேசிக்

God's unspeakabie love in instituting the Holy Sacrifice

இறைவரானார்.* அதெப்படியெனில், அவர் உலகத்தின் பாவத்தைப் போக்குகிற தேவ செம்மறிப்புருவையாக மரிக்கிறதற்கு முந்திய நாளாகிய பெரிய வியாழக்கிழமை, எங்களுக்காகக் கையளிக்கப்படப்போகிற தமது திருமானிடச் சரீரத்தையுஞ் சிந்தப்படப்போகிற திரு இரத்தத்தையும் நமது ஆத்துமாக்களுக்கு ஓர் பரிசுத்த ஜீவனமாகத் தந்ததுமல்லாமல், அந்தத் திருச் சரீரத்தையுந் திரு இரத்தத்தையுங்கொண்டு பண்ணுகிற திவ்விய பூசைப்பலியையும் அப்போதுதானே ஏற்படுத்தியருளினார். தேவநற்கருணையிலே அவர் நம்முடைய அன்றாடக அப்பமாக வந்தார். திவ்விய பூசைப் பலியிலே, தாம் முன் சிலுவையில் ஒருதரம் நிறைவேற்றின திருப்பலியை ஓயாமல் புதுப்பித்து, கொல்லப்பட்ட செம்மறிப்புருவைபோல, பிதாவுக்குத் தம்மை ஓயாமலே ஒப்புக்கொடுக்கவும், எங்கள் அக்கிரமங்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கவும், தம்முடைய திருமரணத்தின் ஞாபகத்தை ஓயாமல் நமக்கு நினைப்பூட்டவும் திருவுளமானார். அந்தத் திரு மரணத்தை முக்கியமான விதமாய் நாம் ஞாபகப்படுத்திக் கொண்டாடுகிற பரிசுத்த காலமாகிய இத் தபசு நாட்களிலே, யேசுநாதசுவாமியுடைய அளவற்ற அன்பின் அடையாளமாகிய திவ்விய பூசைப்பலியைக் குறித்துச் சில வார்த்தைகளைச் சொல்லுவது நலமல்லவா? திவ்விய பூசையின் மகத்துவத்தை, அதின் இயல்பை, நீங்கள் சரியாய்க் கண்டுகொண்டால், பூசை காணக் கடமையான ஞாயிறு கடன் திருநாட்களில் மாத்திரமல்ல,

Division

வேறு நாட்களிலும் அதைக் காண வெகு ஆசை மூளுவீர்களல்லவா? ஆகையால் இப்போது நாம் சற்றுநேரம் திவ்விய பூசையின் மகத்துவத்தைச் சிந்திப்போம். சிந்தித்து இயன்றமட்டும் நாட்பூசை காண நம்மைத் தூண்டிக்கொள்ளுவோம்.

* அருளப். 13 ; 1



I

திவ்விய பூசையின் மகத்துவமானது நான் இப் பிரசங்கத்தின் முகப்பிலே எடுத்துச்சொன்ன வசனத்தினாலே போதியளவு நன்றாக விளங்கும். அர்ச். சுவிசேஷக அருளப்பர் ஞானப்பரவசமாகிப் பரலோகத்திலும் பூலோகத்திலும் அதிக ஆச்சரியமான தேவ அற்புதங்களைக் காட்சியாகக் கண்டுகொண்டிருக்கையிலே, சருவேசுரனுடைய பலிப்பீடத்தின் முன்பாக தேவ செம்மறிப்புருவையானவர் கொல்லப்பட்ட பாவனையாக நிற்கக் கண்டார். இந்தக் காட்சியைச் சபைப்பிதாக்களும் வேதசாஸ்திரிகளும் வியாக்கியானம்பண்ணி, இது திவ்விய பூசையிலே நடக்கிற அதிசயத்திற்கு ஓர் குறிப்பே என்கிறார்கள். நமக்காக ஒருதரம் சிலுவையிலே பலியாக்கப்பட்ட தேவ செம்மறிப்புருவையாகிய யேசுநாதசுவாமி, திவ்விய பூசைப் பலிப்பீடத்திலே மெய்யாகவே கொல்லப்படாவிட்டாலும், கொல்லப்பட்ட பாவனையாகத் தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்துக்கொண்டுவருகிறார். உள்ளபடியே, தேவபிதாவானவர் உலகத்தின் பாவங்களைப் போக்கத் தம்மைத்தாமே பலியாய்ச் செலுத்துகிற தேவகுருவாகிய யேசுநாதசுவாமியை இவ்வுலகத்தில் அனுப்பியபோது, அவர் தமது பலியைக் கல்வாரி மேட்டிலே முற்றாக முடித்துவிடும்படியாக அனுப்பவில்லை. ஆனால் அங்கே இரத்தஞ்சொரிந்து தொடங்கிய பலியை இரத்தஞ்சொரியாவண்ணம் உலகமுடியுமட்டும் தொடர்ந்து நடத்திக்கொண்டு வரவேண்டுமென்று சித்தமானார். தாவீது இராசாவின் வாயினால்

The bearing of the Text pointed out

ஏலவே சொல்லப்பட்ட வாக்கியத்தைக் கேளுங்கள்: "ஆண்டவர் சத்தியஞ்செய்து திருவுளம்பற்றினார். அவர் இனி அதைக் குறித்து மனம் வருந்தவும் மாட்டார். அதாவது: நீர் மெல்க்கிசேதேக்குவுடைய முறையின்படியே நித்தியமாகக் குருப்பிரசாதியாயிருக்கிறீர்." * இந்த வாக்கியமும், யேசுநாதசுவாமி தாம் ஒருமுறை கல்வாரிமேட்டிலே செலுத்திய இரத்தப் பலியை இப்போது, மெல்க்கிசேதேக்குவின் முறைப்படி, அதாவது: இரத்தஞ் சிந்தாதவிதமாயும் அப்பத்தின் இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் ஒப்புக்கொடுத்துக்கொண்டுவருவதையே குறிக்கின்றது.

*Calvary and the Altar essentially the same*

ஆகையால் கல்வாரியிலே செலுத்தப்பட்ட இரத்தப்பலியிலேயும் பூசைப்பலியிலேயும் பலிப்பொருளும் பலியிடுகிறவரும் ஒருவர்தாமே. சிலுவையிலே யேசுநாதசுவாமியுடைய திருச்சரீரமும் திரு இரத்தமும் உலகத்தின் பாவங்களைப் போக்கும் திவ்விய கிரயமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அப்படியே, பூசைப்பீடத்தின் மேலும் யேசுநாதசுவாமியுடைய திருச்சரீரமும் திரு இரத்தமுமே நமது பாவங்களைப் போக்கும் கிரயமாக ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. உள்ளபடியே எங்கள் திவ்விய மீட்பருடைய திருச்சரீரத்தையும் திரு இரத்தத்தையும்போல தேவபிதாவுக்கு உவப்பான காணிக்கை வானத்திலேயாவது பூமியிலேயாவதுவேறில்லை. ஆகையாற்றான் வேதாகமத்தில் எழுதியிருக்கிறதாவது: மிருகப் பலிகளையும் நைவேத்தியங்களையும் பிதாவே நீர் விரும்பினீரல்ல. எனக்கோ ஒரு சரீரத்தை உருப்படுத்தினீர். புத்தகத்தின் தலை எட்டில் எழுதியிருக்கிறபடி, இதோ நான்

* சங்கீதம் 109 ; 4



தேவ சித்தத்தை நிறைவேற்ற வருகிறேன். அதாவது: என் சரீரத்தைப் பலியிடுகிறேன். * இந்தத் திவ்விய சரீரந்தானே திவ்விய பூசையில் நாள்தோறும் ஒப்புக்கொடுக்கப்பட்டுவருகிறது.

*Our Lord and the priest*

இனி, சிலுவையில் ஏறிப் பலிசெலுத்தினவரும், பூசைவேளையிலே மறைந்துநின்று பலிசெலுத்துகிறவரும் ஒருவர்தாம் என்றதையுங் கவனித்துக்கொள்ளுங்கள். யேசுநாதசுவாமி தாமே பூசைப்பலியைச் செலுத்துகிறார். குருவானவரோ, அவருடைய தானாபதியாக மாத்திரம் நின்று கைங்கரியஞ்செய்கிறார் என்பது வேதசத்தியம். பூசையிலே கைங்கரியஞ் செய்கிற குருவானவர் மெய்யாகவே குருப்பட்டம் உள்ளவர் என்பதும் தம்முடைய உத்தியோகத்தைப் பூசையிலே செலுத்துகிறார் என்பதும் மெய்தான். ஆனால் குருவானவர் யேசுநாதருடைய திவ்விய குருத்துவத்திலே பங்குபற்றினவரும், காணப்படாமல் நிற்கிற அவருக்குக் காணப்படும் தானாபதியாய் இருக்கிறவருமே அல்லாமல், பூசைப்பலியைப் பிரதானமாய் ஒப்புக்கொடுக்கிறவருமல்ல, யேசுநாதசுவாமியினின்றும் புறம்பான குருத்துவ வல்லமை உடையவருமல்ல. ஆனபடியாற்றான் தேவநற்கருணை உண்டாக்குகிறபோது குருவானவர், இது யேசுநாதருடைய சரீரமென்று சொல்லி உண்டாக்காமல், இது என் சரீரமென்று யேசுநாதருடைய வாக்காகவே சொல்லி உண்டாக்குகிறார். அப்பத்தையும் இரசத்தையும் தேவ திருச்சரீரமும் திரு இரத்தமும் ஆக்கத் தேவ வல்லமையினால் அல்லாமல் கூடாது. ஆதலால் குருவானவர் தானாபதியாய் நின்று கைங்கரியஞ் செய்யும்போது,

* எபிரேயர் 10; 5—7, சங். 39; 8.

யேசுநாதசுவாமியே காணப்படாமல் நின்று பூசைப் பலியை ஒப்புக்கொடுத்தருளுகிறார். ஆனபடியாற்றான் அர்ச். கிறிசோஸ்தொம் அருளப்பர் சொல்லுவது: குருவானவர் பூசை சொல்லிக்கொண்டு நிற்கிறதை நீ காணும்போது குருவானவர்தாம் அத் திருப்பலியை ஒப்புக்கொடுக்கிறார் என்று எண்ணாமல், கிறீஸ்துநாதருடைய திருக் கரங்களே காணப்படாத விதமாய் விரிக்கப்பட்டிருக்கிறதை விசுவாசக் கண்ணாற் பார்த்துக்கொள் என்கிறார்.

பிரியமான கிறீஸ்தவர்களே, இப்போது சற்று நேரம் மனதினாலே பிரயாணம்பண்ணி என்னோடுகூடக் கல்வாரி மேட்டுக்கு வாருங்கள்.

A picture of Calvary

இதோ எருசலேம் பட்டணத்தின் மதிலுக்கு வெளியே உள்ள அந்தத் தலையோட்டு மலையின்மேல் நிற்கிறோம். எங்கள் இரட்சணியமாகிய யேசுநாதர் பதினைந்தடி நீளப் பாரச்சிலுவையைச் சுமந்துகொண்டு தமது இரத்தத்திற் தோய்ந்தவராய், திருக்காயங்கள் நிறைந்தவராய், துஷ்டசேவகரால் தள்ளி நடத்தப்பட்டு அம்மேட்டின் உச்சியில் வந்துசேருகிறார். இதோ அவரைச் சிலுவையிலே கிடத்தித் திருப் பாத கரங்களிலே ஆணி அறைகிறார்கள். அறைந்தபின் ஆணிமுனைகளை மடக்கிச் சிலுவையை உயர்த்தி அதை நடுவதற்குக் கிண்டிய குழிக்குள் விழத்தட்டி நிறுத்துகிறார்கள். நம்முடைய ஆண்டவர் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே மூன்றுமணித்தியாலமாகத் தொங்கி நமக்காகப் பிதாவைப் பிரார்த்தித்தருளுகிறார். வானங்கள் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருக்கின்றன. பூமி ஓடி இருளுகின்றது. கணக்கில்லாத சம்மனசுகள் அளவில்லாப் பிரமிப்போடு ஆராதித்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஆண்டவர் எமது பாவங்களுக்காகப் பட



வேண்டிய பாடெல்லாம்பட்டு உத்தரித்தபின் எல்லாம் முடிந்ததென்றுசொல்லித் தமது திரு ஆத்துமத்தைப் பிதாவின் கரங்களில் ஒப்புவித்துச் சீவனைவிடுகிறார். தேவமாதாவும் புண்ணிய ஸ்திரிகளும் துக்க சாகரத்தில் அமிழ்ந்துகிறார்கள். சற்றுநேரத்துக்கெல்லாம் பூமியெங்கும் அந்தகாரம் வியாபித்துவிட்டது. அவருடைய அந்தரங்க சீஷர்களில் இருவர் வந்து திருச்சரீரத்தைச் சிலுவையால் இறக்கி கல்லறையில அடக்கம்பண்ணுகிறார்கள். அங்கே சம்மனசுகளின் சேனை அத்திருவுடலைச் சூழ்ந்து ஆராதித்துக்கொண்டிருக்கின்றது. எவ்வளவு மன அருட்சியான காட்சி! கிறீஸ்தவர்களே நீங்கள் இவைகளையெல்லாம் கண்ணாலே கண்டிருந்தால் எவ்வளவாக மனதுருகி, இனி அந்த இடத்தைவிட்டுப்போகவும் மாட்டாதிருப்பீர்கள்.

இப்போது என்னோடுகூட வேறோர் இடத்துக்கு வாருங்கள். நாங்கள் இனி, ஒரு சத்தியவேத கோவிலுக்குப் போவோம்.

and of the Altar

இதோ ஒரு குருவானவர் பூசை சொல்லிக்கொண்டு நிற்கிறார். கிறீஸ்தவர்களே உங்கள் சரீரக் கண்களையல்ல விசுவாசக் கண்களைத் திறந்து பாருங்கள். எழுந்தேற்ற மணி அடிக்கிறது. பூசகர் குனிந்து நின்று அப்பத்தின் மேலும் இரசத்தின் மேலும் தேவ வசீகர வார்த்தைகளை உச்சரிக்கிறார். நீங்கள் உடனே முகம் குப்புற விழுந்து ஆராதிக்கிறீர்கள். ஏனெனில் இதோ பீடத்தின்மேலே யேசுநாதசுவாமியுடைய திருச்சரீரமும் திரு இரத்தமும் எழுந்தருளி வந்துவிட்டன. சிலுவையிலே தம்மை ஒப்புக்கொடுத்தவர் இதோ பீடத்தின்மேல் தம்மை ஒப்புக்கொடுத்துக்கொண்டிருக்கிறார். இதோ அந்தத் திருச்சரீரமும் திரு இரத்தமும் குருவானவரால் வானத்

துக்கும் பூமிக்கும் நடுவே உயர்த்தப்படுகிறது. வானோர் ஆச்சரிய வசத்தராய் வாய் புதைத்து ஆராதித்து நிற்கிறார்கள். பாதாளத்தார் நடுநடுங்குகிறார்கள். யேசுநாதசுவாமி சிலுவையின்மேல் இருந்து மன்றாடியது போலவே பீடத்தின்மேல் இருந்தும் மன்றாடுகிறார். எங்கள் பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கிறார். இத் திருப்பலியின் முடிவிலே அந்தத் திருச்சரீரம் ஒன்றில் புதுக்கல்லறைக்குச் சமானமான ஓர் ஆத்துமத்திலே உட்கொள்ளப்படுகின்றது. அல்லது சம்மனசோரின் சேனை புடைசூழ சற்பிரசாத பேழை என்னும் கல்லறையில் வைத்துக் காக்கப்படுகின்றது.

A consoling difference

கல்வாரிப் பீடத்திலே நீங்கள் மனதின் கண்ணாற் கண்டதற்கும், பூசைப்பீடத்திலே விசுவாசக்கண்ணாற் கண்டதற்கும் வித்தியாசம் என்ன? பிரதானமான வித்தியாசம் ஒன்றும் இல்லை. இரண்டிடத்திலும் பலியிடுகிறவரும் ஒருவர். பலிப்பொருளும் ஒன்று. பலிக்கிருத்தியத்தோடு சேர்ந்த வரலாறுகளிலே ஏதாவது வித்தியாசம் உண்டென்றால், நமது ஆண்டவர் சிலுவைப்பீடத்திலே இரத்தஞ்சிந்தி மரித்ததுபோல பூசைப்பீடத்திலே மரிக்கிறதில்லை என்பது ஒரு வித்தியாசந்தான். ஆனால் ஒருதரம் மாமிசத்தில் மரித்து உயிர்த்தெழுந்தவராகிய நமது மீட்பர், இனி மரியாதவராய் எமக்காகப் பலியாவது எவ்வளவு ஆறுதல்! பூசையிலே மரணமில்லாமையாகிய ஆறுதல் நமக்கு இருந்தாலும், முன் ஒருமுறை ஆண்டவர் நமக்காக மரித்ததின் ஞாபகம் இலலாமற்போகாது. தேவ வசீகரத்தில் அப்பத்தின் குணங்களும் இரசத்தின் குணங்களும் புறம்பாக வைக்கப்படுவதினால், அவருடைய திரு



இரத்தஞ்சிந்துதல் நினைப்பூட்டப்பட்டு, தேவசெம்மறிப்புருவையானவர் சற்பிரசாதக் குணங்களுட் தம்மை மறைப்பதினாலே கொலையுண்ட பாவனையாகவே காணப்படுகிறார். மேலும் சிலுவைப்பலிக்கும் பூசைப்பலிக்கும் ஏதும் பிரதானமல்லாத வித்தியாசம் உண்டென்றால், அந்த வித்தியாசமானது அதிலே இல்லாத தேவ தாழ்ச்சி இதிலே காணப்படுவது ஒன்றுதான் என்று சொல்லலாம். அர்ச். அக்கினு தோமையார் சொல்லியதுபோல "சிலுவையிலே தேவசுபாவம் மாத்திரம் மறைந்திருந்தது. இதிலேயோ தேவ சுபாவத்தோடு கூட மனுஷ சுபாவமும் மறைந்திருக்கிறது" இதினாலே ஆண்டவர் இன்னும் அதிகமான அதிசயத்துக்கும் சிநேகத்துக்குமே உரியவராகிறார். மேலும் சிலுவைப் பலிக்கும் பூசைப்பலிக்கும் இடையில் ஏதும் பிரதானமல்லாத வித்தியாசம் உண்டென்றால், அது ஒரு இடத்திலே ஒரு முறை மாத்திரம் நடந்திருக்கையிலே, இது எல்லாக் காலத்திலும் பூமியின் எந்தெந்தத் தேசத்திலும் நடக்கின்றது என்பதேயாம். இதினாலே அதிக தேவ அற்புதங்கள் தாம் காணப்படுகின்றன. மேலும் ஏதும் பிரதானமல்லாத வித்தியாசம் உண்டென்றால், சிலுவைப்பலி சகல லோகத்துக்கும் பொதுவாக ஒப்புக்கொடுக்கப்பட்ட இடத்திலே, பூசைப்பலியோ, தனித்தனியே அவரவருடைய இரட்சணிய வேலையை நடத்திமுடிப்பதற்காக ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. இதினால் நாம் ஒவ்வொருவரும் அர்ச். சின்னப்பருடைய வார்த்தைகளிலே: கிறீஸ்துநாதர் என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறாரே * என்று சொல்லக்கூடியவர்களாகிறோம்.

* கலாத். 2; 20.

இப்படிப் பூசைப் பலியானது சிலுவைப் பலியோடு ஒன்றாய் இருக்கும்போது அதின் மகத்துவத்தை எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? ஆகையாற்தான் சிலுவையிலே கிறீஸ்துநாதர் அடைந்த மரணம் எவ்வளவு பெறுபேறு உள்ளதோ, பூசைப்பலியும் அவ்வளவு பெறுபேறு உள்ளதென்று அர்ச். கிறிசோஸ்தொம் அருளப்பர் வசனித்திருக்கிறார். ஓ! திவ்விய பூசையின் மகத்துவத்தை, அருமையை, விலைமதிக்கரிய விலையை நாம் ஒருபோதும் இவ்வுலகத்தில் சரியாய் அறியவேமாட்டோம். அர்ச். பொனவெந்தூர் உரைத்தபடி "திவ்விய பூசையானது சருவேசுரன் மனிதருக்குக் காட்டியருளிய சகல சிநேகத்தினும், செய்தருளிய சகல நன்மைகளினும் சங்க்ஷேபமாயிருக்கின்றது." அர்ச். பிரான்சீஸ்கு சலேசியார் சொல்லியபடி "இந்தப் பரம இரகசியமானது தேவசிநேகத்தின் ஆழ்ந்த சமுத்திரம் முழுமையையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கின்றது" அர்ச். லேயோனுட்டுடைய வருணனையின்படி, உலகத்துக்குச் சூரியன் எப்படியோ, திருச்சபைக்குத் திவ்விய பூசையும் அப்படியேயாம். சூரியன் உலகத்துக்கு மழையையும் விளைவையும் கொடுக்கிறதுபோல, திவ்விய பூசை திருச்சபைக்குச் சகல வரப்பிரசாதங்களையும் கொடுக்கிறது பூசையிலே சருவேசுரன் தாமே எமக்காக எழுந்தருளியிருந்து மன்றாடி, எமக்கு வேண்டிய சகல நன்மைகளையும் பொழிந்தருளுகிறார். யேசுநாதசுவாமி அதிலே நமது பாவங்களுக்குத்தக்க உத்தரிப்பைச் செலுத்தி நமக்காகப் பரிந்துபேசுகிறார். உலகத்தின் அக்கிரமங்களினால் ஓயாமல் கோபம் மூட்டப்படுகிற தேவ மகத்துவமானது இத்திருப்

The greatness of Holy Mass



பலியாலேதான் சாந்தியாகி உலகத்தைத் தண்டியாமல் விட்டுக்கொண்டிருக்கிறதென்று அர்ச்சியசிஷ்டர்கள் சொல்லுகிறார்கள். சருவேசுரன் இக்காலத்திலே உலகத்தை ஆளும் முறையை மாற்றிப்போட்டவர் போலக் காணப்படுகிறாரே. முற்காலம் ஒரே பாவத்துக்காக அவர் எவ்வளவு கொடூர ஆக்கினைகளை விதித்ததாக வாசிக்கிறோம். பெஞ்சமின் கோத்திரத்தாருட் சிலர் செய்த ஒரே வியபிசாரப் பாவத்துக்காக இருபத்தையாயிரம் பேர் வாளால் அரிந்து கொல்லப்படச் சருவேசுரன் கட்டளையிடுகிறார்.* தாவீது இராசாவுடைய ஒரு வீண் மகிமையான எண்ணத்துக்காக எழுபதினாயிரம்பேர் கொள்ளை நோயாலிறக்கிறார்கள்.† பெத்சமித் எனும் ஊரவர்கள் வாக்குத்தத்தப் பேழைக்குள்ளே அனுசாரமாய்ப் பார்த்தபடியால் அவர்களில் ஐம்பதினாயிரம்பேர் மாளுகிறார்கள்.‡ ஆனால் இப்போது கிறீஸ்தவர்களுள்ளே தானும் எத்தனையோ எத்தனையோ விபசாரங்கள், சோரத்தனங்கள், வன்மங்கள், பகைகள், தேவதூஷணங்கள், அனுசாரங்கள் நடந்தபோதிலும் சருவேசுரன் உடனே தண்டியாமல் இருப்பதற்குக் காரணமென்ன? உலகமெங்கும் எக்காலத்திலும் ஒப்புக்கொடுக்கப்பட்டுவருகிற பூசைப்பலியே காரணமென்று அர்ச்சியசிஷ்டர்கள் வசனிக்கிறார்கள்.

## II

திவ்விய பூசையானது இப்படிப்பட்ட மகத்துவம் உள்ளதாயும், நமக்குச் சகல நன்மைக்கும் வழியாயும், நம்முடைய இரட்சணியத்துக்கு அவசியமானதாயும் இருக்கிறபடியினாற்தான் திருச்சபையர்னது, சகல கிறீஸ்தவர்களும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திரு

* நியா. 20; 35 † 2 இராசாக். 24-15 ‡ 1 இராசாக். 6, 19

நாட்களிலும் பூசை காணவேணுமென்று கட்டளையிட்டிருக்கின்றது. இக் கட்டளை எமக்கு எவ்வளவு இன்பமாய் இருக்கவேண்டியது! சருவேசுரனை முகமுகமாய்க் காண்பதற்கும் நமது இரட்சணிய அலுவலை யேசுநாதசுவாமியோடுகூட நடத்துவதற்கும், அவர் நமக்காகச் செய்யும் வேண்டுதலோடு நாமும் நமது வேண்டுதலை ஒருமிப்பதற்கும் எவ்வளவ அவரோடு நாம் ஓடிவரவேண்டியது! ஆனால், ஐயோ, விசுவாசக்குறைவே! ஐயோ, மெய்யான நன்மைகளைத் தேட அறியாமையே! எத்தனைபேர் கடன்பூசை காண்பதற்கும் அதிசயமான வேண்டாவெறுப்புக்காட்டுகிறார்கள்! கடன் கழிக்கிறதற்காகவே வந்து ஒற்றைக் காலிலே நின்று ஒரு அரை மணித்தியாலந்தானும் பொறுத்திருக்க மாட்டாமல் பூசைமுடிந்தது முடியா முன்னே ஓடிப்போய்விடுகிறார்கள். ஆனால் இவர்களைப் பற்றிக் குறை சொல்லியென்ன, விசுவாசமுள்ள நீங்கள் கடன் பூசையை ஆசையோடு காண்பதுமல்லாமல், இயன்ற மட்டும் வேறுநாட்களிலும் பூசைகாணப் பிரயாசப்படவேண்டுமென்று ஏவி முடிப்பேன்.

*Duty of hearing Mass*

பிரியமான கிறீஸ்தவர்களே! திருச்சபையிலே உள்ள பத்திக்கிருத்தியங்களுள்ளேயெல்லாம், நாட்பூசை காண்பதைப்போல உத்தமமான பத்திக்கிருத்தியம் வேறில்லை. அநேகர் யாத்திரைகள் பண்ணுவதிலும் நேர்த்திக்கடன்கள் செய்துதீர்ப்பதிலும், பிரார்த்தனைகள் நவநாட்கள் செய்வதிலும் வெகுநேரமும் மிகுசெலவும் போக்குகிறார்கள். நாட்பூசை காணுவதைப்பற்றியோ நினையாமற்போகிறார்கள். பூசைகாணுவதைப்போல உத்தமமான செபம் வேறென்ன? பூசையில் நம்மைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதைக் காட்டிலும் பெரிய காணிக்கையுண்டா? நாட்பூசைக்குப் போவதைக் காட்டிலும் பெரிய யாத்திரை ஒன்றைக் காட்டுங்கள் பார்ப்போம்? நாட்பூசை காணும் பத்தி திருச்சபையுடைய பத்தி, அர்ச்சியசிஷ்டர்களுடைய பத்தி சம்மனசுகளுடைய பத்தி, சருவேசுரன் அங்கீகரித்துக்கொள்ளுகிற மகா உத்தம, மகாபேறுள்ள பத்தி. நாட்பூசை காண்பதினால் நமது நாள் முழுதும் பரிசுத்தமாய்ப்போம். அதினால் நமக்கு நாள்முழுதும் தேவாசீர்வாதம் கிடைக்கும். அதினால் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் வேண்டிய சகல நன்மைகளும் உண்டாவதாகுமே.

*Hearing Mass the greatest act of devotion*



ஆனால் சிலர்மனதில் இப்போது எழக்கூடிய ஒரு ஆட்சேபமிருக்கிறது. அதாவது: எங்களுக்கு நாட்பூசை காண மெத்த ஆவலுண்டுதான், நேரமில்லையே என்பார்கள். அப்படியல்ல, ஆவலுண்டானால் நேரமுமுண்டு. உள்ளபடி சொல்லவேணடுமானால், நேரமில்லையென்பதும் மனமில்லையென்பதும் ஒன்றுதான். சிலர்: மெத்த அலுவல் அலுவல் என்கிறார்கள். அவ்வளவு அலுவலை அவர்கள் செய்கிறதையுங் காணோம். வேறுசிலர் உள்ளபடியே ஓயாத அலுவற்காரர். ஆயினும், இவர்களே நாட்பூசைகாணவும் நேரங்கண்டுகொள்ளுகிறார்கள். இதெப்படி? அலுவலுள்ளவர்களுக்கு நேரமிருக்கிறது. அலுவலில்லாதவர்களுக்குத்தான் நேரமும் இல்லை. நேரமில்லாமற் போவதற்கு முதற்காரணம் பொதுவாக, வெள்ளென எழும்புவதற்குள்ள சோம்புத்தனந்தான். காரியத்தை உள்ளபடி சொல்லிவிட எனக்கு இடங்கொடுங்கள்.

*An objection against week-day Mass*

முற்காலத்திலே சனங்களுள்ளே இருந்த அநேக நல் வழக்கங்களை இக்காலம் விட்டுவிட்டோம். முற்காலம் ஆகச்சிறுபிள்ளைகள் போக, மற்றவர்கள் எல்லாம் கோழிக்குரல் கரிக்குருவிக்குரலோடு எழுந்து, சிலர் வீட்டிலேயிருந்து செபமாலை முதலிய செபங்களைச் சொல்லுவார்கள். சிலர் கோவிலிலே பூசையில்லாவிடினும் கோவிலைப் போய்த் தரிசித்துக்கொண்டுவருவார்கள். அதன்பின் வீட்டலுவல்களெல்லாம் சட்டவட்டமாய்ப் பார்த்துக்கொள்ளுவார்கள். ஆனால், தற்காலம் வீண்கதைகளிலே, ஆவலாதிகளிலே, குற்றமான களியாட்டுக்களிலே, உண்டாட்டுக்களிலே நேரம்போக்கிவிட்டு இராப்பதினொருமணிக்குப்படுத்துக் காலை எட்டுமணிக்கு எழும்புகிறோம். பூசை காண நேரமேது?

கிறீஸ்தவர்களே, இது தபசுகாலமல்லவா? இக்காலத்திலே நீங்கள் இதைச் சோதித்துப் பாருங்கள். காலையிலே சற்றே நித்திரையை ஒறுத்துக்கொண்டு எழுந்து இயன்றமட்டும் பூசைகாணுங்கள். ஏறக்குறைய எல்லா ஊர்களிலும் தற்காலம் நாட்பூசைகாண வசதியிருக்கிறது. சிலவிடங்களில் உங்கள் வீட்டுப்படலைகளுக்கு அருகிலேயே கோவில்கள் இருக்கின்றன.

ஆம், தபசுகாலத்திலே என்கிலும் இயன்றமட்டும் அடிக்கடி பூசை காணக்கடவோம். நமது இரட்சணிய வேலையை நடத்தக்கடவோம். சருவேசுரன் நமக்கு ஆயத்தம்பண்ணியிருக்கும் மோட்சமுடியை அடைவதற்குப்போகக் காலஞ்செல்லாது. இந்தப் பாக்கியத்தை அளவில்லாதவர் எம் அனைவருக்கும் தந்தருளுவார்க

ஆமென்.

தபசுகால இரண்டாம் ஞாயிறு

## On Fraternal Charity

## சகோதர அன்பு

In hoc cognoscent omnes quia discipuli mei estis si dilectionem habueritis ad invicem

நீங்கள் ஒருவர் ஒருவரை நேசித்தால், இதினால் நீங்கள் என்சீஷர் என்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். (அருளப். 13; 35.)

யேசுநாதசுவாமி பூலோகத்தில் எழுந்தருளி வந்தபோது பிறர்சினேகம் என்பது மனுஷருக்குள்ளே அறியப்படாத ஒரு புண்ணியமாயிருந்தது. ஒவ்வொருவனும் தன்னையே தேடுதலாகிய துர்க்குணம் ஆதாமின் பாவத்தினால் உலகத்திலே உண்டான கேடுகளுள் எல்லாம் விசேஷித்தது. ஒவ்வொரு மனுஷனும் தன் தன் நயத்திலும் சுகத்திலுமே எப்போதும் கண்ணாய் இருந்தமையால், சகல மனுஷரும் தன் சகோதரர் என்றதை முற்றாக மறந்துபோயிருந்தான். ஒவ்வொருவனும் தன் அயலானை வேண்டியபோது வஞ்சகம், சூது, களவு, கொலை முதலிய பாதகங்களாலேயும் கெடுத்துத் தன் நயத்தை நிலைநிறுத்திக்கொண்டுவருவான். ஒருசனம் மற்றச் சனங்களை விரோதித்து ஒடுக்கித் துன்பப்

The world essentially selfish.

படுத்திக்கொண்டிருக்கும். ஒருசாதி மற்றச்சாதிகளைத் தனக்குக் கீழ்ப்படுத்திப்போடவும் கீழ்ப்படுத்தியவர்களை மிருகங்களைப்போற் பாவித்து வேலைகொள்ளவும் தலைப்படும். அயலார் தங்கள் அயலானைக்கெடுத்துவிட்டுந் தாங்களே வாழ்ந்துகொள்ளப் பிரயாசப்படுவார்கள். இப்படியே, எங்கள் திவ்விய குருவாகிய யேசுநாதசுவாமியின் வருகைக்கு முன்னே உலகம் முழுதும் பிறர்சினேகமில்லாமல் மெய்யான ஐக்கியமில்லாமல் பழம்பழிச் சர்ப்பமாகிய பிசாசின் ஆணைக்குட்கிடந்து பெருமூச்சு எறிந்துகொண்டிருந்தது.

Our Lord's law of love

செகமீட்பரானவர் இப்பூவுலகில் வந்து மனுக்குலத்தைப் பிசாசின் தாசிகத்தில்நின்று மீட்டபோது, ஆதியிலே சருவேசுரன் மனுஷருள் இருக்கவேண்டுமென்று சித்தமான சகோதர பாந்தவத்தை, அந்நியோந்நிய சினேகத்தையே தம்முடைய விசுவாசிகளுக்கு விசேஷ லட்சணம் ஆக்கினார். அன்றுதொட்டுப் பொய்யனான சாத்தானின் வழிப்பட்ட உலகமானது சருவேசுரன் சகலருக்கும் பிதாவென்றதையும், சகலரும் சகோதரரென்றதையும் மறந்து தன்னுட் பிரிவுபட்டுக்கிடக்கின்றது. யேசுநாதசுவாமியின் மீட்பை அடைந்தவர்களோ, தாங்கள் ஒரே பிதாவின் மக்களென்றும், ஆதலால் சகோதரரென்றும் அவதானித்துக்கொண்டு, ஒருவரையொருவர் சினேகித்துத் தம்முள் ஒன்றித்திருக்கவேண்டுமென்று கர்த்தர் கற்பித்தார். இதுதான் அவர்கள் தம்முடைய சீஷரென்றதற்கு அடையாளமும் என்றார். நீங்கள் ஒருவரையொருவர் சிநேகிப்பீர்களேயாகில் இதனால் நீங்கள் என்னுடைய சீஷரென்று எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். ஆகையால் கிறீஸ்தவர்களுள் அந்நியோந்நியமாகிய பிறர்



சிநேகம் இருப்பது இன்றியமையாத ஒரு அவசியம் என்பதற்குச் சந்தேகமே இல்லை. பிறர்சினேகத்தினாலே தானே தம்முடைய சீஷர்கள் அறியப்படவேண்டும் என்று யேசுநாதசுவாமி சித்தமானார். பிறர்சினேகம் உள்ளவர்களே கிறீஸ்தவர்கள், இல்லாதவர்கள் கிறீஸ்தவர்கள் என்னும் பெயருக்குப் பாத்திரவான்களல்ல.

a distinctive sign for His followers

கிறீஸ்தவன் ஒருவன் எவ்வளவு தருமங்களைச் செய்தாலும், வேதத்துக்காகச் சீவனைவிட்டாலும், இன்னும் எவ்வளவு அரிய புண்ணியக் கிரியைகளை முடித்தாலும் அவனிடத்தில் பிறர்சிநேகம் இல்லாமற்போனால் அவைகள் ஒன்றுமல்ல என்றது அர்ச். சின்னப்பருடைய திருவாசகமுமாம்.* நமக்கு இவ்வளவு இன்றியமையாத ஒருபுண்ணியத்தை அனுசரிக்கவேண்டிய விதத்தைக் குறித்து இந்தத் தபசுகாலத்திலே தியானிப்பதைப் போல நன்மையான காரியம் வேறென்ன உண்டு? கிறீஸ்தவர்களே, இரட்சணியத்தை அடைவதற்குத் தேவசிநேகம் எவ்வளவு அவசியமோ, பிறர்சினேகமும் அவ்வளவு அவசியமென்று நீங்கள் சகலரும் அறிவீர்கள். பத்துக்கற்பனைகளும் இந்த இரண்டு சினேகத்திலேயுமே அடங்கும் என்று ஞானோபதேசத்திற் படித்திருக்கிறீர்கள். ஆயினும், பிறர்சினேகத்தை அனுசரிக்கும் விதத்தைப்பற்றிச் சில தப்பான எண்ணங்கள் அநேகர் மனதிலே வேரூன்றியிருக்கின்றன. இத்தப்பெண்ணங்களை இன்றைக்குக் களைந்து, உங்கள் மனங்களிலே பிறர்சினேகத்தின் மெய்யான சாயலை ஊன்றிவிடக்கூடுமானால் நான் எவ்வளவோ பாக்கியசாலியாய் இருப்பேன்.

* 1 கொரி. 13

Two points

ஆகையால், தேவ உதவியை நம்பிக்கொண்டு, இப்போது இவ்விஷயத்தை இரண்டு பிரிவாக்கிப் பேசப்போகிறேன். முதலாம் பிரிவிலே, பிறர்சிநேகத்தை அனுசரிப்பதற்குப் பல தருணங்களிலே தனது நயஞ் சுகங்களை வெறுத்துவிடுவது அவசியம் என்று காண்போம். 2-ம் பிரிவிலே, பிறர்சிநேகத்தை அனுசரிப்பதற்கு எப்போதும் பிறருடைய நயஞ் சுகங்களைக் கவனித்து நடப்பது கடமையாகும் என்று காண்போம். நான் சொல்லப்போகிறதெல்லாம் இந்த இரண்டு பிரிவிலுமே அடங்கும். பிரியமான கிறீஸ்தவர்களே! இவ்விஷயம் மிகவும் முக்கியமானதும் உங்கள் இரட்சணியத்துக்கு அவசியமானதுமாய் இருக்கிறபடியால், உங்களால் இயன்ற சகல கவனத்தோடும் இப்பிரசங்கத்தைக் கேட்க வேணுமென்று உங்களைப் பிரார்த்திக்கிறேன்.

## I

Charity would require one to often forego one's own interests

முதன்முதல், பிறர்சிநேகத்தை அனுசரிப்பதற்குப் பல தருணங்களிலே தன் நயத்தையும் சுகத்தையும் வெறுத்துவிடுவது அவசியம் என்கிறேன். ஏனெனில், பிறர்சிநேகமாவது என்ன? பிறருடைய இருதயங்களும் நம்முடைய இருதயமும் ஒன்றாய், பிறரும் நாமும் ஒருமனதுடையவர்களாயிருப்பதே பிறர்சிநேகம். இருதய ஒற்றுமை இல்லாவிடில் சிநேகமில்லை. ஆதிக்கிறீஸ்தவர்களின் கூட்டம் முழுதும் ஒரே இருதயமும் ஒரே ஆத்துமமும் உள்ளதாயிருந்ததென்று அப்போஸ்தலர் நடபடி ஆகமத்திலே எழுதப்பட்டிருக்கிறது.* அவர்கள் அந்நி

* அப். நட 4; 32



யோந்நிய சிநேகமுள்ளவர்களாய் இருந்தார்கள் என்பதே இதன்கருத்து. இனி, என்னுடைய இருதயம் பிறருடைய இருதயங்களோடு ஒன்றாயிருக்கவேண்டுமானால், நான் சகலத்திலும் என் நயத்தையும் சுகத்தையும் தேடுகிறவனாயிருக்கக்கூடாது. என் நயத்தை, சுகத்தைமாத்திரம் தேடிக்கொண்டு வந்தால், எனக்கு நன்மைசெய்கிறவர்களிலேயே—அதுவும் அவர்கள் நன்மைசெய்யுந்தனையும் மாத்திரம்—பற்றுதல் இருக்கும். அவர்களை மறுதலிக்கிறதினால், மறந்துவிடுகிறதினால் எனக்கு ஒரு சிறு நயம் உண்டாகக்கூடுமானாலும், உடனே அவர்களை மறுதலித்துவிடுவேன், மறந்துவிடுவேன். தன் நயத்தைச் சகலத்திலும் தேடுகிறவன் தனக்குள்ளே எப்போதும் அடைபடுகிறான். அவனுடைய இருதயவாசல் இறுக்கமாய்ப் பூட்டப்பட்டிருக்கிறது. ஆகையால், அவன் பிறரோடு அந்நியோந்நியமாய்ச் சகவாசம் செய்வதுமில்லை. பிறர் அவனோடு சகவாசம் செய்ய ஏவப்படுவதுமில்லை. இப்படிப்பட்டவனிடத்தில் பிறர்சிநேகம் இருப்பது எப்படி? ஆகையால், தன் நயஞ் சுகங்களை எங்கும் தேடுகிறதற்கும் பிறர்சிநேகத்துக்கும் ஒருபோதும் பொருத்தமில்லை என்று சொல்லக்கடவோம்.

The same proved from the Scriptures

தன் நயத்தையும் சுகத்தையும் பிறர்பொருட்டாக வெறுத்துவிடுவதிலேயே விசேஷமாய்ப் பிறர்சிநேகத்தின் அநுசரிப்பு அடங்கும் என்பது வேதசத்தியமாயும் இருக்கின்றது. "பிறர்சிநேகம் தன்னுடையவைகளைத் தேடித்திரியாது" என்று அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார்.* இந்தச் சத்தியத்தை உணராமலே எத்தனையோ கிறீஸ்தவர்கள்

* 1 கொரி. 13; 5

மோசம்போகிறார்கள். அநேகர், பிறருக்கு ஒரு மயிரளவு இளகிக்கொடாமலும், தங்களுடையவைகளை ஒரு சுடுகளவாவது பிறருக்கு நயமாகக் கைபற்றியவிடாமலும், எல்லாத்திலும் தங்கள் சித்தமே நடக்கவேண்டுமென்ற பிடிவாதத்தோடும் இருந்துகொண்டு, தாங்கள் எப்படியும் பிறர்சினேகத்தை அநுசரிக்கிறோம் என்றே எண்ணிக்கொள்ளுகிறார்கள். இவர்கள் தங்கள் புத்தியான நடக்கையைப்பற்றித் தங்களைப் புகழ்ந்து பேசிக்கொள்வதுமுண்டு.—நாங்கள் இன்னாரோடு, இன்ன வீட்டாரோடு பேசுகிறது பறைகிறது இல்லை. எங்களுக்கும் அவர்களுச்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை. நாங்களும் எங்கள்பாடு. அவர்கள் தாங்களும் தங்கள்பாடு. நாங்களும் அவர்களுடைய தொறக்கிலே போவதில்லை. அவர்களும் எங்கள் தொறக்கிலே வரவேண்டியதில்லை. இதுதான் அவர்களோடு சமாதானத்தைக் காத்துக்கொள்ளுகிறதற்கு வழி என்பார்கள். இது நல்ல நியாயம்போலத் தொனிக்கிறது. ஆனால் அர்ச், கிறிசோஸ்தோம் அருளப்பர் இப்படிப்பட்டவர்களை நோக்கிச் சொல்லுவதாவது: இது சமாதானத்தைக் காத்துக்கொள்ள வழி என்கிறீர்களா? இல்லை. இதுதான் பிரிவினையைக் காத்துக்கொள்ளவழி. இதுதான் பழிவாங்கும் குணத்தை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வழி. உங்கள் சத்துருக்களுக்குச் செய்யக்கூடிய தீங்கையெல்லாம் செய்யாமல் அவர்களைச் சும்மாவிடுவதுதான் பிறர்சினேகம்; வெளிப்படையாய் அவர்களைப் பழிவாங்காமல் விடுவதுதான் பிறர்சினேகம் என்று எண்ணுகிறீர்கள். ஆனால் பிறர்சினேகமானது பிறரைச் சும்மா விடுவதிலேயல்ல அவர்களைச் சினேகிப்பதிலே அல்லவோ அடங்கும்? அவர்களைக் கூடியமட்டும் பழி



வாங்காமல் இருப்பதிலே அல்ல, அவர்களுக்கு ஆபத்துவேளைகளில் என்கிலும் செய்யக்கூடிய நன்மைகளைச் செய்வதிலே அல்லவோ அடங்கும்?

How scandalous enmities are created and fostered

காரியத்தைத் தேற விசாரித்துப் பார்ப்போம். சில குடும்பங்களிலே, மிக நெருக்கமான உறவின்முறையாருள்ளே வருஷாவருஷமாய்ப் பிரிவினை இருக்கிறதைக் காண்கிறோம். ஒரே சாதியார், நெருங்கிய பந்துக்கள், ஒரே இடத்தில் வசிக்கிறவர்கள் சிலர் நெடுங்காலமாய் ஒருவரோடு ஒருவர் பேசாமலும், ஒருவர் ஒருவருடைய நன்மைதின்மைகளிலேதானும் சந்தோஷம் கொண்டாடி ஆறுதல் சொல்லப்போகாமலும் இருப்பார்கள். இப்படி நடப்பதுதான் கிறீஸ்தவர்களுக்குரிய சமாதானத்துக்குச் சூழ்ச்சமான வழியா? வழியென்றே இவர்கள் எண்ணிக்கொள்ளுகிறார்கள். ஆனால், இவர்கள் தங்களுக்கு அறிமுகமான பிறசமயிகளோடுதானும், அந்நியரோடுதானும் நடந்துகொள்ளாதவிதமாய்த் தங்கள் சொந்த இனத்தவர்களோடு, சகோதரர்களோடு, கூடவசிப்போரோடு நடந்துகொள்ளுவதற்குக் காரணமென்னவென்று விசாரித்துப் பார்ப்போம். ஒரு பகுதியார் சொல்லுவார்கள்: இன்னார் எனக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை. அப்படி நிறைவேற்றாமல் விட்டதற்கு என்ன வெல்லக்கூடாத தடையிருந்ததோ அதைப்பற்றி விசாரிக்க எனக்குக் கவ்வையில்லை. ஆனபடியால் அந்த ஆளோடு எனக்கு இனி ஒரு சங்காத்தமுமில்லை. அல்லது, இன்னார் என்னுடைய நன்மை தின்மைக்கு வரவில்லை. அல்லது, என் மரியாதையைக் காத்து நடக்கவில்லை. அல்லது, எனக்குப்

பெரிய நட்டம் வருவித்தது. அந்த ஆள் எப்படிப்பட்ட வில்லங்கத்தினால், ஆற்றுத்தனத்தினால் இப்படிச் செய்ததோ அதைப்பற்றி நான் விசாரிக்க வேண்டியதில்லை. இனி என் சீவன் போகுமட்டும் அந்த ஆளோடு எனக்கோ கொண்டாட்டமில்லை.

இனி, மற்றப் பகுதியாரை விசாரித்துப் பார்த்தால், இவைகளிலும் அதிக காரசாரமான நியாயங்களைக் கேட்போம். நான் வாக்குக் கொடுத்தது மெய்தான். ஆனால், அவர்கள் பேசிய பேச்சின்படி நில்லாதபடியால் நானும் என் வாக்கை நிறைவேற்றவில்லை. அல்லது, அவர்கள், முன்னே என்னுடைய குடும்பத்திலே நிகழ்ந்த ஒரு நன்மைக்கு வராதிருந்தபடியால் நானும் அவர்கள் நன்மைக்குப் போகவில்லை. - அல்லது, எனக்கு அவர்கள் எவ்வளவோ மரியாதைக் குறைச்சல்பண்ணினபடியால் நானும் அப்படிச்செய்தேன். அல்லது, என் பொருளை எடுத்துக்கொண்டு தராமல்விட்டபடியால் நானும் அவர்களுக்கு நட்டஞ் செய்தேன் என்று இப்படிச் சொல்லுவார்கள். காலம் போகப்போக இருபகுதியிலும் குற்றச்சாட்டுகள் கூடிக்கொண்டேவரும். இந்தப் புகைச்சல்கள் எரிச்சல்கள், கோபங்கள் தாபங்கள் எல்லாவற்றையும் மறைத்துக்கொள்ளும்படியாகவே: எங்களுக்கும் அவர்களுக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை, அவர்களோடு சற்றும் கோபமில்லை என்பார்கள்.

கிறீஸ்தவர்களே, இது அல்ல பிறர்சிநேகம். இருபகுதியாரும் தங்களுடையவைகளைத் தேடுகிறார்கள். பிறர்சிநேகமோ தன்னுடையவைகளைத் தேடாது. இவர்கள் ஒருவருக்கொருவர் சற்றேனும் விட்டுக்கொடாமலிருக்கிறார்கள். பிறர்சிநேகமோ சமாதானத்தின் பொருட்டுத் தனக்கு உரியவைகளையும்



விட்டுவிடும். அவசியமானபோதெல்லாம், தன் சொந்த நயஞ் சுகங்களை வெறுத்துவிடும். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த நயஞ் சுகங்களிலேயே கண்ணாய் இருக்கிறார்கள். பிறர்சிநேகமோ தன்னுடையவைகளை நினையாது. இருபகுதியாரும் சற்றும் நுகையவிடாமல் ஒருமூச்சாக இழுத்தபடியால் சிநேகம் என்னும் கயிறு தெறித்துப்போயிற்று. இனி, பிறர்சிநேகம் ஒருசற்றுமில்லை. தங்கள் மனச்சாட்சிக் கண்டனத்தைச் சாந்திபண்ணிக்கொள்ளும்படியாக மாத்திரமே இவர்கள் தங்களுக்குக் கோபமில்லை, கோபமில்லை என்கிறார்கள்.

True nature of Christian Chartiy

கிறீஸ்தவர்களே, இப்படிப்பட்ட போலிப் பிறர்சிநேகத்தை மெய்யான பிறர்சிநேகம் என்று நம்பி மோசம்போகவேண்டாம். சமாதானத்தின் பொருட்டுத் தன் நயஞ் சுகங்களை வெறுத்துவிட ஆயத்தமாய் இராதவனிடத்தில் கடுகளவேனும் பிறர்சிநேகமில்லை.

It has been enjoined on us by a "new Commandment"

கிறீஸ்துநாதர் கற்பித்த பிறர்சிநேகமானது தன் நயஞ்சுகங்களை வெறுப்பதோடு கூடிய ஒரு புண்ணியம். ஒவ்வொருவரும் தன்தன் நயஞ் சுகங்களைத் தேடுகிறதாகிய சிநேகம் உலகத்திலே எப்போதாவது இல்லாமற் போகவில்லை. யேசுநாதசுவாமி வருமுன்னேயும் அது இருந்தது; அவர் எழுந்தருளிவந்த காலத்திலும் காணப்பட்டது; இப்போது மிகவும் நீசமான அக்கியானச் சாதிகளுள்ளே தானும் இருக்கிறது. தனக்கு நன்மை செய்கிறவர்களை, தனக்கு உவப்பானவர்களை, உதவியானவர்களை நேசிக்கிறது அதிசயமல்ல. மிருகங்களுள்ளே தானும் இதற்கொத்த சுபாவப்பற்றுதல்

ஒன்று உண்டு. ஆனால், யேசுநாதசுவாமி தமது சீஷருக்குக் கற்பித்த பிறர்சிநேகம் உலகத்திலே வேறு எந்தச் சமயத்தவர்களுள்ளாவது இல்லாத ஒரு விசேஷ சிநேகம். "இதனால் சகலரும் உங்களை எனது சீஷரென்று அறிந்துகொள்ளுவார்கள்" என்றார். அவர் கற்பித்த பிறர்சிநேகம் உலகத்திலே முன் ஒருபோதும் இல்லாத சிநேகம் "ஓர் புதுக்கற்பனையை உங்களுக்குத் தருகிறேன். அதாவது: நான் உங்களைச் சிநேகித்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் சிநேகியுங்கள்." * ஆ! கிறீஸ்தவர்களே, கர்த்தர் வசனித்த இந்தத் திருவாக்கை உங்கள் நெஞ்சிலே இருத்தித் தியானித்துக்கொள்ளுங்கள். ஆண்டவர் தந்த புதுக்கற்பனையின் தன்மை இதிலே அடங்கியிருக்கிறது. 'நான் உங்களைச் சிநேகித்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் சிநேகியுங்கள்." அவர் எங்களை எப்படி நேசித்தார்? அவருடைய பிறர்சிநேகம் எப்படிப்பட்டது? அது சற்றென்கிலும் தன் நயம் பாராதது, தன் சுகத்தைத் தேடாதது நீங்கள் அறியீர்களா? யேசுநாதசுவாமி எங்களை எப்படி நேசித்தார்! எதுவரைக்கும் நேசித்தார் என்று நான் எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? அவர், அளவில்லாத மகிமையின் தேவனாயிருக்க மனுஷருடைய சமாதானத்தின் பொருட்டுத் தமது மகிமையை வெறுத்து ஒரு அடிமை வேஷமாய், மானிடகோலராய் வந்தாரே † அளவில்லாத செல்வபாக்கியங்கள் உள்ளவராயிருக்க, எங்களைச் சருவேசுரனோடு உறவாக்கும் பொருட்டுத் தமது செல்வங்களைத் துறந்து மிகத் தரித்திரரானாரே. நித்திய ஆனந்தபாக்கியத்தை விட்டுத் துக்கம் நிறைந்த மனிதனானாரே. மட்டில்லாத பரிசுத்த சொரூபியாயிருக்க,

* அருளப். 13;34 † எபி. 12; 2 பிலிப். 2; 8



எங்கள் பெலவீனத்துக்கு இரங்கிப் பாவியின் நீசகோலத்தை எடுக்கவும், தமது தேவகீர்த்திக்குப் பங்கமாக, பேய் பிடித்தவன், பெருந்தீனிக்காரன் என்று சொல்லப்படவும் திருவுளமானாரே. குற்றவாளிகளாகிய நாங்கள் அவரை முந்தித் தேடிப்போக வேண்டியிருக்க, அவர் முந்தி எங்களைத் தேடிவந்தாரே. இப்படிப்பட்ட தமது பிறர்சிநேகத்தைத்தான் எங்கள் பிறர்சிநேகத்துக்கும் மாதிரிகையாக ஏற்படுத்தியருளுகிறார். நாம் உங்களைச் சிநேகித்ததுபோல உலகத்தில் முன் ஒருபோது கேட்கப்படாத இந்தப் புதுச் சிநேகத்தைத்தான் எங்களுக்கும் கற்பிக்கிறார். ஓர் புதுக்கற்பனையை உங்களுக்குத் தருகிறேன்.

Our Lord's Charity the model of Christian Charity

ஆகையால் கிறீஸ்தவர்களே, நீங்கள் உங்கள் நயத்தைச் சற்றேனும் கைபறியவிடாமல், உங்கள் சுகத்துக்கு ஒரு சிறுகுறையும் வராமல், உங்கள் மகிமை, கீர்த்தி, பொருள், பண்டம் பிடிவாதம் இவைகள் ஒன்றுக்கும் பழுதில்லாமல் கிறீஸ்துநாதர் கற்பித்த பிறர் சிநேகத்தை அனுசரித்துப் போடலாம் என்று எண்ணுகிறீர்கள்? அப்படிச் செய்யக் கூடுமானால், யேசுநாதசுவாமி தம்முடைய பிறர்சிநேகத்தைத்தானே எங்களுடைய பிறர்சிநேகத்துக்கு மாதிரியாக எடுத்துச் சொல்ல வேண்டியதென்ன? அதற்காக ஓர் புதுக் கற்பனையைத் தரவேண்டியதென்ன? அக்கியானிகளும் இப்படிப்பட்ட பிறர்சிநேகம் உள்ளவர்களாயிருக்கிறார்களே. இதைக் கிறீஸ்துநாதருடைய சீஷருக்கு ஓர் விசேஷ அடையாளமென்று எப்படிச் சொல்லலாம்? ஆதித் திருச்சபையிலே கிறீஸ்தவர்கள் எல்லாரும் ஓரே இருதயமும் ஓரே ஆத்தும

மும் உள்ளவர்களாய்ச் சீவித்து வந்தபோது அக்கியானிகள் அவர்களைப்பார்த்து "இவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வளவாய்ச் சிநேகிக்கிறார்கள் பாருங்கள்" என்றுசொல்லி வருவார்கள் என்பதாக தெற்றுல்லியன் என்கிற சபைப்பிதா எழுதிவைத்தார். இக்காலத்திலேயும் அக்கியானிகள் அதே வார்த்தைகளைச் சொல்லக்கூடும். ஆனால் பரிகாசமாய் இவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வளவாய்ச் சிநேகிக்கிறார்கள் பாருங்கள். இவர்கள் தங்களைக் கிறீஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டாலும், எங்களுள்ளே இல்லாத ஒரு விசேஷ அந்நியோந்நிய அன்பு, ஐக்கியம் இவர்களுள்ளே உண்டா? இவர்களுள்ளே எங்களுட்போலவே சச்சரவுகளும், வழக்குகளும், விரோதங்களும், வைராக்கியங்களும் காணப்படுகின்றன. இவர்களும் தங்களுக்கு வேண்டியவர்களை மாத்திரமே நேசிக்கிறார்கள். பணத்தையும், உதவியையும் இன்னும் தங்களுக்குப் பிரியமான வேறு நயங்களையும் விரும்புகிறார்களன்றிப் பிறரை நேசிக்கிறதாய்க் காணோமே என்று அக்கியானிகள் சொல்லக்கூடியதாய் இருக்கிறது. ஆகையால், சகோதரனே, நீ உனக்கு நன்மை செய்கிறவர்களோடும் உனக்கு உபகாரம் பண்ணுகிறவர்களோடும் உனக்கு உதவியானவர்களோடும் மாத்திரம் கொண்டாடிக்கொண்டு, மற்றவர்கள் இருக்கிறார்களோ என்றும் கவனியாமலிருந்தால், அவர்களுக்கு நீ ஒன்றிலும் இளகாமல், பிடித்தபிடியைக் கொஞ்சமேனும் நெகிழவிடாமல், ஒரு நன்மையுஞ் செய்யாமல், அவர்கள்செய்யுங் குற்றங்களையே போற்றிக்கொண்டு, அவர்கள் குறைகளையே பாராட்டிக்கொண்டு, ஒருபோதும் அவர்களுக்கு உபசாரமில்லாமல், எப்போதும் அவர்களோடு கோபிக்க ஆயத்தமாயும்,



அவர்கள் செய்த நன்மைகளை நினையாமல் தீமைகளையே சீவனுள்ளவரையும் மனதில் பேணிக்கொண்டும் வருவாயானால்,—நீ இவ்வித நடைதான் புத்தியான நடை, சமாதானமாய் இருப்பதற்குச் சூழ்ச்சமான பாதையென்று சொல்லப் பிரியமானால் சொல்லிக்கொள். ஆனால் யேசுநாதசுவாமியைப் பின்பற்றுகிறது இப்படியல்ல. அவர், தாம் உன்னை நேசித்ததுபோல நீ பிறரை நேசிக்கவேண்டுமென்று காத்திருக்கிறார். இது ஒரு சுவிசேஷ புத்திமதியல்ல, சாங்கோபாங்கத்துக்கு அடுத்த ஆலோசனையல்ல. சகலருக்கும் பொதுவான கற்பனை. இது நமது கற்பனை என்று திருவுளம்பற்றினார். இந்தக் கற்பனைக்கு இசைய, நீ அவர் உன்னை நேசித்ததுபோல உன் பிறத்தியாரையும் நேசியாமல்விட்டால், உன்னுடைய சூழ்ச்சமான புத்தியின்படியல்ல, தாம் உனக்குக்காட்டிய முன்மாதிரியின்படியே உன்னை நடுத்தீர்ப்பார் என்றதை மறந்துபோகாதே.

This teaching is not of this world

ஆனால், பிறர் சிநேகத்தை அனுசரிப்பதற்கு உள்ளபடியே நாம் எமக்கு உரியவைகளை உரித்தாடாமல் விடவேண்டுமோ? இது மெத்தக் கடுமையான போதகமாய் இருக்கிறதே என்பீர்களாக்கும். இது என் உபதேசமல்ல, இந்த உபதேசத்தைப்பற்றிச் சற்றேனும் சந்தேகமில்லை. இது எமது சிநேகத்தின்பொருட்டுத் தம்முடைய சீவனையுந் தந்த அவருடைய உபதேசமேயன்றி மனுஷனுடைய உபதேசமல்ல. மனுச்சுபாவத்துக்கு அருமையான இவ்வுபதேசத்தை மனுஷன் தானாக ஏற்படுத்தியிருக்கவேமாட்டான். அர்ச். அருளப்பர் தமது முதலாம் நிருபத்தின் 3-ம் அதிகாரத்திலே சொல்

லியிருக்கிறதைக் கேளுங்கள், "சருவேசுரன் நமக்காகத் தமது சீவனைவிட்டதிலே அவருடைய சிநேகத்தைக் கண்டுகொண்டோம். நாங்களும் சகோதரருக்காகச் சீவனைவிடவேண்டும்" என்கிறார். சீவனைவிடவேண்டும். ஆம், பிறர் சிநேகத்துக்காகச் சீவனைவிடவேண்டிய தருணங்களுமுண்டு. கொள்ளைநோய் காலத்தில் ஒரு தாய் அல்லது சகோதரம் தன்பிள்ளைகளின்பொருட்டுச் சகோதரத்தின் பொருட்டுச் சீவமோசமான ஆபத்துக்குத் தன்னைக் கையளிக்கவேண்டி வராதா? பின்னும் பிறர் சிநேகத்துக்காக எங்கள் கீர்த்தியைக் கைவிடவேண்டிய தருணங்களுமுண்டு. எனக்கு என் சகோதரன் எவ்வளவு அவமானத்தை வருவித்தாலும், நான் தின்மைக்குத் தின்மை செய்யக்கூடாது என்று தேவகட்டளை இருக்கிறபடியால் என் கீர்த்திக்குவந்த பழுதையும் சகித்துக்கொள்ள வேண்டி இருக்கிறதல்லவா? மேலும் பிறர்சிநேகத்துக்காகப் பொருள் பண்டங்களைக் கைவிடவேண்டிய தருணங்களுமுண்டு. இதைத் திவ்விய கர்த்தர் தாமே திருவுளம்பற்றினார். "உன் அங்கியை எடுத்துக் கொள்பவனிடத்தில் அதைக் கேட்க வேண்டாம்' என்று அர்ச். லூக்கா சுவிசேஷத்தில் 6-ம் அதிகாரத்தில் திருவுளம்பற்றியிருக்கிறார். என் பொருளை ஒருவன் எடுத்துக்கொண்டால் கோட்டிலே நான் அதை அறவாக்கப்படாதோ என்பீர்கள். அறவாக்கலாம் ஆனால், அதினால் உன் சகோதரனோடு உனக்குள்ள பிறர்சிநேகம் கெடுமென்று அறிந்தால், உன் அங்கியிலும் பார்க்கப் பிறர்சிநேகம் பெரிதானபடியால், அங்கியை விட்டுவிட வேண்டும் என்பது தேவகட்டளை. இதனால் வழக்காடுவோர் எல்லாரையும் நான் ஒருங்கே கண்டிருக்கிறேன் என்று விளங்



கிக்கொள்ள வேண்டாம். ஆனாலும், அதிகப்பற்றாக வழக்குகளினால் எதிரியின் பொருளெல்லாம் அழிந்து அவன் நிர்ப்பாக்கியன் ஆகிறபடியால், அவ் வழக்குகள் அநீதியுள்ளவைகளாய்க் கிறீஸ்தவர்களுக்கு இருக்கவேண்டிய இரக்கத்துக்கு விரோதமானவைகளாய் வருகின்றன என்றதைச் சொல்லாமல் விடலாமா? அவ் வழக்குகளினால் மனத்தாங்கல்களும் பகைகளும் அதிகரிக்கிறபடியால், அவைகள் பிறர்சிநேகத்துக்கு நேரே விரோதமானவைகளாய் இருக்கின்றன என்பதை நீங்களே அறியீர்களா?

ஆகையால், நாம் பிறர்சிநேகத்தை அனுசரிக்க விரும்பினால் பல தருணங்களிலே நமது சுயநயஞ் சுகங்களை விட்டுவிட வேண்டுமென்பது வெளிப்படை.

## II

Charity requires one to lay oneself out to seek others' interests

அம்மாத்திரமல்ல, நாம் பிறருடைய நயஞ் சுகங்களைக் கவனித்து நடப்பதும் அவசியம். நம்முடைய சொந்த நயங்களை விட்டுவிடவேண்டும் என்று சொல்லியபின், பிறருடைய நயஞ் சுகங்களைக் கவனித்து நடக்கவேண்டும் என்றும் சொன்னால் இது விபரீதம் அல்லவோ? என்பீர்கள் ஆக்கும். இல்லை. பிறர் சிநேகத்துக்கு இந்த இரண்டும் ஒருங்கே அவசியம். பிறருக்காக நம்முடைய உரிமைகளை விட்டுவிட ஆயத்தமாயிருப்பதும், பிறருடைய நன்மையை எப்போதும் விரும்பி நடப்பதுந் தான் பிறர்சிநேகத்தின் லட்சணம். நம்முடைய பெரிய பெரிய நன்மைகளையும் நாம் பிறருக்காகக் கைவிட மனதாய் இருக்கவேண்டும். ஆனால் பிறருக்கு உரிய

மிகச்சிறிய நன்மைகளையும் அவர்களுக்குக் கர்த்துக் கொடுக்க வேண்டும். பிறர்சிநேகத்திலே இந்த இரண்டு அங்கமும் அடங்கியிருப்பது மிகவும் இயல்பான ஒரு காரியம். அதெப்படி? நமக்கு ஒரு ஆளிலே பிரீதி இருந்தால், ஒரு ஆளை நாம் சினேகிதனாகப் பாவித்தால், அந்தச் சினேகிதனுடைய பேருக்காவது பொருளுக்காவது ஒரு அற்ப பழுதென்றாலும் வர விடுவோமா? அவனோடு பேசும்போது எவ்வளவு மரியாதையாய்ப் பேசுவோம்! அவனுக்கு எவ்வளவு சிறுச்சிறு உதவிகளைப் பண்ணிவருவோம்! அவனைத் தெய்வத்துக்கு இரண்டாவதாக அல்லவோ பூசிப்போம்! உத்தமமான பிறர்சினேகத்திலும் இந்தக் கரிசனை இருக்கவேண்டியது. யேசுநாதசுவாமி கற்பித்தருளிய பிறர்சினேகமானது இந்த லௌகீக சினேகத்துக்குக் கீழ்ப்பட்டது ஆகவேண்டியதில்லை.

Common failings under this head

ஆனால் உங்கள் சகோதரருடைய கீர்த்தியை நீங்கள் சற்றேனும் பொருள் பண்ணாமல் அவர்கள் மதிப்பை அழிக்கக்கூடிய கதைகளைப் பேசிக்கொண்டிருந்தால். அவர்கள் பொருளுக்கு நட்டமாகக் கூடிய காரியங்களைத் தேடிச் செய்துகொண்டுவந்தால், அவர்கள் முன்னிலையிலும் அவர்களுக்கு மதிப்பில்லாமல் அவர்களுடைய உணர்ச்சிகளைப் பறுவாய்பண்ணாமல் சுடுசொற்களைச் சொல்லி மரியாதை இன்றி நடத்திக்கொண்டுவந்தால் அவர்கள்பேரிலே உங்களுக்குப் பிறர்சினேகம் உண்டென்று எப்படிச் சொல்லலாம்? ஆகையால், நாம் பிறர்சினேகத்தை அனுசரிக்க விரும்பினால், நமது புறத்தியாருடைய அற்ப உரிமைகளையும் நாம் அவமதிக்கப்படாது. வெளித்தோற்றத்துக்கு அற்ப காரியங்களாய் இருக்கிற



வைகளைப்பற்றியும் நாம் கவனமாயிருக்கவேண்டும். ஏனெனில், பலமுறையும் நமக்கு அற்பமாகத் தோற்றுவது பிறருடைய மனதை அதிகமாக வருத்தி, அவர்களுக்கு அதிக நட்டத்தை வருவித்துப் பிறர்சினேகத்துக்கு விரோதமான பெரிய பாவத்துக்கு வழியாகக்கூடும். அது எப்படி? சகோதரனே, நீ உன் அயலானைப் பற்றிக் கேலியாகச் சில வார்த்தைகளைச் சொல்லுகிறாய். அவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு அது ஓர் முசிப்பாற்றி மாத்திரமாய் இருக்கிறது ஆனால் அக்கேலி வார்த்தைகள் உன் அயலானின் காதில் விழுகிறது. அதினால் சிலவேளை அவன் உன்னோடு பகைக்கத் தொடங்கி, உனக்கும் அவனுக்கும் சச்சரவு உண்டாகிக் கடைசியாய்ச் சீவியகாலமெல்லாம் நிலைக்கிற ஓர் வைராக்கியமும் பிறக்கிறது பார், ஒரு சிற்ப காரியம் எவ்வளவு பெரியகேட்டுக்கு வழியாய்ப்போகிறது! அல்லது வேறொரு உதாரணம்: நீ உன் அயலானுக்கு இலேசாய்ச் செய்யக்கூடிய ஒரு உதவியைச செய்யாமல் மறுக்கிறாய். அல்லது, அவனுடைய மனத் துன்பத்தைக் கவனியாமல் அவன் முகங் கோடத்தக்க ஒன்றைச் செய்கிறாய். இந்த அற்ப தயவுதாட்சிணியக் குறைவு அவன் மனதை வேறுபடுத்தத் தொடங்கி, உன்னோடு தீராப்பகை விளையும் வித்தாகிறது. பிறர்சினேகத்துக்குப் பழுது வருவது, பலமுறையும், பெரிய ஏச்சு வார்த்தைகளால் அல்ல; பெரிய கஷ்ட நஷ்டங்களை வருவிப்பதினால் அல்ல. ஒரு கேலி வார்த்தையினால், தெருவிலே சொல்லக் கேட்டுத் திண்ணையிலே திரும்பச்சொல்லிய ஒரு ஆவலாதியினால் ஆட்களுக்குள்ளே குடும்பங்களுக்குள்ளே பெரும் பகை மூண்டு, பிறர்சினேகத்தின் பந்தனங்கள் தெறித்து, அக்கியானிகளும் பார்த்

து நையாண்டிபண்ணத்தக்க தாறுமாறுகள், சண்டைகள், வியாச்சியங்கள் உண்டானதை அறிவோம்.

என்ன செய்யலாம்! மனுஷ சுபாவம் அப்படிப்பட்டது! நாம் எமது கீர்த்தி முதலியவைகளைப்பற்றி எப்படிச் சுணையுள்ளவர்களாய் இருக்கிறோமோ, அப்படியே பிறரும் சுணையுள்ளவர்கள். எவ்வளவோ சிறு காரியங்களிலேயும், ஒரு அர்ப வார்த்தையினாலோ பகிடியினாலோ அவர்களுக்கு மனநோவு உண்டாகக்கூடும்; பிறர்சினேகத்துக்குப் பங்கம் வரக்கூடும். ஆகையால், பிறருடைய இச் சிறு உரிமைகளைப் பற்றியும் நாம் மிகவும் சாக்கிரதையாகவே நடக்கவேண்டியது.

Peroration

ஆகையால், யேசுக்கிறீஸ்துநாதருடைய முன்மாதிரிகைப்படி நாம் பிறர்சினேகம் உள்ளவர்களாய் இருக்கத் தக்கதாகச் சகல வஞ்சகத்தையும் சூதையும் விட்டுவிட விரும்பினால், நமது கீர்த்தி பொருள்களை மாத்திரமல்ல, அவசியமானபோது, சீவனையுங் கொடுத்துப் பிறர்சினேகத்தையே காத்துக்கொள்ளுவோமாக. நமது பெரிய உரிமைகளைத்தானும் வேண்டியபோது பாராட்டாமல் விட்டு, பிறருடைய அற்ப உரிமைகளையும் பாராட்டி மதித்துக்கொண்டு வருவோமாக. ஏனெனில் இப்படிப்பட்ட லட்சணங்களை உடையதாகிய பிறர்சினேகம் நம்மிடத்தில் இல்லாதிருக்குமானால், யேசுநாதசுவாமியுடைய சீஷர் என்னும் பெயருக்கும் பாத்திரமில்லாதவர்களாய்ப் போவோம். ஆனால் நமது உடல் பொருள் ஆவி இம் மூன்றையும் இழந்துபோகினும் பிறர்சினேகத்தையோ கைவிடாதவர்களாய்ச் சகோதர பந்தனமாய் இங்குவாழுவோமானால், நிச்சயமாய்ப் பரலோகத்திலும் நித்திய பேரின்ப சமாதானத்தைச் சுகிப்போம். ஆமென்.

தபசுகால மூன்றும் ஞாயிறு

## On Zeal for our Holy Faith

## வேதாபிமானம்

Audientes autem gentes gavisi sunt & glorificabant verbum Dei.

சனங்கள் ஆண்டவருடைய வாக்கியம் போதிக்கப்படக் கேட்டு அகமகிழ்ந்து அதை மகிமைப் படுத்தினார்கள். (அப். நட. 13;)

பிரியமான கிறீஸ்தவர்களே, நம்முடைய திவ்விய குருவாகிய யேசுக்கிறீஸ்துநாதர் தம்மைப் பின்பற்றி விசுவசிக்கிறவர்களுக்குள்ளே, உலகத்திலே வேறு மார்க்கங்களிலே இல்லாததும், தன் நயம் பாராததுமான பிறர்சினேகம் விளங்கவேண்டும் என்றும், இந்தப் பிறர்சினேகத்தைக் கொண்டே உலகமானது தம்முடைய சீஷரைப் பிரித்து அறிந்துகொள்ள வேண்டும் என்றும் சித்தமானார் என்பதாகச் சென்ற கிழமைப் பிரசங்கத்திலே தெளிவித்தேன். இனி, யேசுநாதசுவாமியுடைய திரு வேதத்தின் மட்டிலே அவருடைய சீஷர்கள் நிறைவேற்றவேண்டிய பிரதானமான கடமை ஒன்றைப் பற்றி யோசிப்போம். அந்தக் கடமையானது நான் இப்போது அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தினின்று எடுத்துரைத்த வாக்கியத்திலே குறிக்கப்பட்டிருக்கிறது. நமது கர்த்தருடைய திருவேதத்தை அப்போஸ்தலர்கள் சனங்களுக்குப் போதித்தபோது அவர்கள் "அதைக் கேட்டு அகமகிழ்ந்து, அத் திருப்போதகத்தை மகிமைப்படுத்தினார்

கள்." திருச்சபையின் மூலமாய் அப்போதகத்தைக் கேட்கும் பாக்கியத்தைப் பெற்ற நாமும் அதை மகிமைப்படுத்தக் கடமைப்பட்டவர்கள். யேசுநாத சுவாமி தம்முடைய திரு வேதத்தை உலகத்திலே பிரசித்தமாக்கினபோது அத் திருவேதத்தைக் கைக்கொண்டவர்கள் அதற்குக் காட்டும் மகிமையே அது மேலும் மேலும் உலகத்திற் பரம்புவதற்கு வழியாக வேண்டும் என்று திருச்சித்தமானார். ஆயினும், கிறீஸ்தவர்களுள் அநேகர் பிறர்சிநேகத்தின் இன்றியமையா அவசியத்தைப் பற்றி யோசியாமலிருக்கிறது போலவே, தங்களுக்கு சத்திய வேதத்தின் பேரில் இருக்கவேண்டிய அபிமானத்தைப் பற்றியும் அநேகர் யோசியாமலும், சரியாய் அறியாமலும் இருக்கிறார்கள். வேதத்தின் மகிமையைத் தாங்கள் தேடாமலிருப்பதினால் அதை உண்டுபண்ணியவருக்கு எவ்வளவு துரோகிகளாய்ப் போகிறார்கள் என்றதையும் உணராமலிருக்கிறார்கள். ஆகையால், திருச்சபையானது நம்முடைய மீட்பின் இரகசியத்தைக்கொண்டாடுகிற இக் காலத்திலே பேசத்தக்கவைகளுள் அத் திருமீட்பை அடைந்துகொண்ட சத்தியவேதக்காரராகியநமக்குச் சத்தியவேதத்தைமகிமைப்படுத்துவதிலே இருக்கவேண்டிய அபிமானமும் ஒன்று என்று எண்ணுகிறேன்.

Many have no idea of zeal

சத்திய வேதமே உலகத்திலே ஏக மெய்யான வேதம். ஆதலால், அதை நாம் விசுவசிக்கிறோம் என்று சகலரும் அறியக் காட்டுவதினால், அதை மகிமைப்படுத்த வேண்டும். இது முதலாம்பிரிவு. சத்தியவேதம் மாத்திரம் உலகத்திலே ஏக பரிசுத்தமான வேதம். ஆதலால், அதின்படி நடக்கிறதினால்

A twofold duty towards our holy Faith

005473



நாம் அதை மகிமைப்படுத்த வேண்டும். இது இரண்டாம் பிரிவு

## I

சத்திய வேதக்காரராய் இருப்பது நமக்கு எவ்வளவு பாக்கியம்! அக்கியானிகளைப் பாருங்கள். அவர்கள் மெய்யான சருவேசுரனையும் மோட்ச வழியையும் அறியாமல் இரண்டு கண்ணுங் கெட்ட பிறவிக் குருடரைப்போலத் தடவித்தடவித் திரிகிறார்கள். மெய்யான சருவேசுரனை அறியாமல், அவர்களுட் சிலர் பேய்களை வணங்குகிறார்கள். சிலர் மாடு, குரங்கு முதலிய மிருகங்களைக் கும்பிடுகிறார்கள். சிலர் நாகபாம்பு முதலிய செந்துக்களை நோக்கிக் கையெடுக்கிறார்கள். சிலர் மண், கல், பொன், வெள்ளி முதலிய உயிரற்ற பொருட்களைத்தானும் பூசிக்கிறார்கள். மெய்யான மோட்சபாதையை அறியாமல், ஸ்தல யாத்திரைபண்ணி அலைக்கழிகிறவர்கள் ஒருபக்கம்; தீர்த்தம் ஆடி உலைகிறவர்கள் ஒருபக்கம்; காவடி எடுத்து, கழுத்தை அறுத்து, நாக்கைவெட்டி, மூக்கை அரிந்து இவை முதலிய அகோர தண்டனைகளைச் செய்துகொள்ளுகிறவர்கள் ஒருபக்கம். இப்படியே அக்கியானிகள் மோசம்போகிறார்கள். புரோட்டெஸ்தாந்தர் முதலிய பதிதர்களைப் பாருங்கள். இவர்களும் யேசுநாத சுவாமி ஏற்படுத்திய ஏக மெய்யான திருச்சபையை விட்டுப் பிரிந்துபோனபடியினால், தங்களுக்குள்ளே நூற்றுக்கணக்கான பிரிவுகளாய்ப் பிரிந்து பூசை இல்லாமல், பிரார்த்தனை இல்லாமல், அநேக தேவதிரவிய அநுமானங்கள் இல்லாமல், மோட்சவாசிகளின் வேண்டுதல் இல்லாமல் அவமாய்க் கெட்டுப்போகிறார்கள்.

Pitiful state of pagans and heretics

Nallur Swami Gna... Library
OBLATE FATHERS
THOD... JAFFNA

நமக்கோ சத்திய வேதத்திற் பிறக்கும் சிலாக்கியமும் பாக்கியமும் கிடைத்தது. அல்லது, நம்முட் சிலர் இடையிட்டு ஞானஸ்நானம் பெற்றவர்களானால், அந்தத் திருவேதத்தை இடையிட்டாவது கண்டறிந்து கொள்ளும் அதிஷ்டம் வருவதாயிற்று.

*Blessings of our holy Faith*

நமக்கு மெய்யான சருவேசுரனைப் பற்றிய உண்மையான போதனை ஆதிதொட்டே கிடைத்திருக்கிறது. மோட்ச இராச்சியத்துக்கு உரிய பரம உரிமைகளை நாம் மாதாவின் முலைப்பாலோடேயே பருகினோம் என்றுஞ் சொல்லலாம். இசையாஸ் தீர்க்கதரிசி ஆகமத்தில் எழுதியிருக்கிறபடி நாம் ஒவ்வொருவரும் சருவேசுரனாலேயே போதிக்கப்பட்டிருக்கிறோம்.* ஏனெனில் அவர் ஸ்தாபித்த தவறாத திருச்சபையானது தேவ அதிகாரத்தோடே நமக்கு வேதத்தைப் போதித்துக்கொண்டுவருகிறது. அந்தத் தீர்க்கதரிசி தாமே சொல்லியிருக்கிறபடி "இதுவே வழி, இதிலே நட என்று நமக்குச் சொல்லிக்கொண்டிருக்கிற ஒரு சத்தத்தை" அதாவது: சத்திய திருச்சபையின் போதகத்தை நமது செவிகள் எப்போதுங் கேட்கின்றன. இப்படியே சத்தியவேதக்காரராய் இருப்பது இணையில்லாத ஒரு பாக்கியம் என்பதற்குச் சந்தேகமே இல்லை.

ஆனால், இத் திருவேதத்தின் மட்டில் நமக்குள்ள கடமை என்ன? ஒருவர் பெற்றுக்கொள்ளும் உபகாரத்துக்கு அளவாகச் செலுத்தவேண்டிய கடமைகளும் உண்டு அல்லவா?

*Duty of confessing our Faith*

நாம் பெற்றுக்கொண்ட இந்த மகத்தான உபகாரத்துக்குக் கைம்மாறாகச் செய்யவேண்டியது என்ன? இந்தக் கேள்விக்கு அர்ச்.

* இசை 4 ; 13—ஷெ 30 ; 21



சின்னப்பர் விடை சொல்லுகிறார்: நீதிமானாகும்படி இருதயத்தினால் இப் போதகத்தை விசுவசிக்கவேண்டும். இரட்சணியத்தை அடைய வாயினால் இதை அறிக்கையிடவேண்டும் என்கிறார் * ஆகையால், யேசுக் கிறீஸ்துநாதருடைய சத்தியவேதத்தை விசுவசிப்பது எவ்வளவு அவசியமோ, அந்த விசுவாசத்தை அறிக்கையிடவேண்டிய போது அறிக்கையிடுவதும் அவ்வளவு அவசியமாம். அந்தத் திருவேதத்தை மனதினுள் விசுவசித்தால் அது நம்மைச் சீர்ப்படுத்தும். வெளியாய் அதை அறியப்பண்ணுவதினால் நாம் அதை மகிமைப்படுத்துவோம்.

ஆதிக் கிறீஸ்தவர்கள் இப்படியே செய்தார்கள். சத்திய வேதத்தை அவர்கள் முழுமனதோடு விசுவசித்து அதினால் சீர்ப்பட்டுப் பரிசுத்தவான்கள் ஆனார்கள்.

*How Early Christians glorified their Faith*

சத்திய வேதத்தை அவர்கள் இராசாக்கள் முன்னும் சகல அக்கியானிகள் முன்னும் வெளியரங்கமாய் அறிக்கையிட்டு அதை மகிமைப்படுத்தினார்கள். அவர்கள் சீவித்த காலம் அக்கியான அந்தகாரம் எங்கும் தடித்துப் பரவியிருந்த ஓர் காலம்; பொய்த் தேவபத்தர்களான இராசாக்கள் சத்திய வேதத்தைப் பகைத்து அதை வேரோடு களைந்துபோடவேண்டும் என்று துணிந்து வேதத்தை விசுவசிப்போரை எல்லாம் பிடித்து நெருக்கி வதைத்துக் கொலைசெய்துகொண்டுவந்த காலம். ஆனாலும், கிறீஸ்தவர்கள் தாங்கள் மனதில் விசுவசித்ததை வாக்கினாலும் நடத்தையினாலும் வெளிப்படையாய்ப் பிரசித்தப்படுத்திக்கொண்டு வந்தபடியாலே தான், சத்திய வேத ஒளியானது, எங்கும் பரந்திருந்

* ரோமர் 10 ; 10.

த அக்கியான இருளின்மேற் செயங்கொண்டது. அக்காலத்திலே மேற்றிராணிமார் குருமாருடைய பிரசங்கத்தினால் மனந்திரும்பின அக்கியானிகளிலும் பார்க்க, கிறீஸ்தவர்கள் காட்டிவந்த தைரியத்தினாலும் வேதப்பற்றுதலினாலும் மனந்திரும்பியவர்களே அதிகம். வயோதிகரான ஆடவர்களும், மிருதுவான பெண்களும், இளங் குமாரத்திகளும், சவலைப் பிள்ளைகளும் கூட மழுவருடைய வாளுக்கும் முட்சில்லுக்கும் செந்தீச் சூளைக்கும் அஞ்சாமல், யேசுநாதசுவாமியை அறிக்கையிட்டுக்கொண்டுநின்றபோது,— அவருடைய சத்தியவேதமே மெய்யான வேதம், அதை நாம் ஒருபோதும் ஒருபோதும் கைவிடோம், அதை மறுதலிப்பதிலும் சீவனையே விடுவோம் விடுவோம் என்று தைரியமாய்ச் சொல்லிக்கொண்டுநின்றபோது—அதைக் கண்ட அக்கியானிகள் புத்தியின் கண்களைத் திறந்து பார்த்து, இப்படிப்பட்ட தைரியத்தை ஏவிக்கொடுக்கிற வேதம் மெய்யானதாகத்தானே வேண்டும் என்று தேறிக் கும்பல்கும்பலாய்ச் சத்திய வேதத்திற் சேர்ந்தார்கள். முதல், சத்திய வேதத்தை ஓர் பைத்தியம் என்று நினைத்து அவமதித்தவர்கள், பின்பு இந்த ஆதிக் கிறீஸ்தவர்களின் திடாரிக்கத்தைக் கண்டு, அதுவே மெய்ஞ்ஞானம், அதுவே சருவேசுரனால் உண்டான மார்க்கம் என்று அங்கீகரித்து அதை நாற்றிசையிலும் மகிமைப்படுத்தினார்கள்.

பிரமாணிக்கமான கிறீஸ்தவர்கள் பண்ணிய விசுவாச அறிக்கையினால் கிறீஸ்துவேதம் மகிமை அடைந்தது. ஆனால் கோழைநெஞ்சரான சிற்சில கிறீஸ்தவர்கள் வேதனைக் கருவிகளுக்கு அஞ்சி, இடையிடையே வேதகலாபனை நடந்த இடங்களை விட்டு ஒளித்தோடியதும் உண்டு. சிலர், மனதில் ஒன்று வாக்கில்



ஒன்றாக, வேதத்தை மறுதலிப்பதுபோற் பாசாங்கு பண்ணித் தண்டனைகளுக்குத் தப்பிக்கொண்டதும் உண்டு; இடையிடையே, ஆனால் அருமையிலும் அருமையாய், வேதத்தை வெளிப்படையாகத் தூஷித்து மறுதலித்ததும் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட ஒரு கோழைநெஞ்சனாலே திருச்சபைக்கு வந்த அவமானம், சிலதடவைகளில், பத்து வேதசாட்சிகளால் அதற்கு உண்டான மகிமையிலும் பெரிதுபோலக் காணப்படும். கிறீஸ்தசகோதரர் தங்களை முட்சில்லில் வைத்து ஆட்டியபோது பட்ட வேதனையைக் காட்டிலும், இப்படிப்பட்ட துரோகிச் சகோதரராற் தங்களுக்கு உண்டான வேதனை அதிகமென்று உணருவார்கள்.

Reasons for confessing our Faith

வேதகலாபனைக் காலங்கள் கழிந்துபோய்விட்டன. நம்முடைய திருவேதத்தை மகிமைப்படுத்துவதற்கு, நாம் இப்போது நமது இரத்தம் என்கிற விலையைக் கொடுக்கவேண்டியதில்லை. ஆனாலும், வேதத்தை உலகத்திலே சகலருக்கும் முன்பாக அறிக்கையிடுகிற கடமை அதினால் நமக்கு இல்லாமற் போய்விட்டதா? ஒருபோதும் போகவில்லை. அது எப்படியெனில், முதன் முதல் சருவேசுரன் உலகம் முழுதுக்கும், சகல மனிதருக்கும் கர்த்தாவாக இருக்கிறபடியால், அவருடைய திருச்சித்தத்தின் வெளிப்படுத்தலாகிய வேதமானது எங்கேயாவது மறைவாக வைக்கப்படவேண்டியதல்ல. அவரைத் தொழுகிறதும், வணங்குகிறதும் இரகசியமாய் அல்லது யாருக்கேனும் பயந்தவண்ணமாய்ச் செய்யப்படவேண்டிய வழிபாடுகளல்ல. இராசாதிராசாவாகிய அவருடைய ஊழியம் நீசமான —ஒளித்து

மறைத்துச் செய்யவேண்டிய ஒரு ஊழியமாக மனுஷருக்குத் தோற்ற விடப்படாது ஆனால், அவருடைய அளவில்லாத மகத்துவத்துக்கு ஒத்தபடி நாம் பிரசித்தமான செபங்களினாலும், உற்சவங்களினாலும், கொண்டாட்டங்களினாலும் அவரைத் தோத்திரிக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம். ஆகையால், ஒவ்வொரு கிறீஸ்தவனும் பிரசித்தமாய் இந்தச் சடங்குகளிலே, ஆராதனைகளிலே பங்குபற்றிக்கொண்டு, தான் மெய்யான சருவேசுரனைத் தொழுகிறவன் என்றதை ஒருவருக்கும் மறையாமல் நடக்க அவனுக்குக் கடன் உண்டு. ஆனதினாலேதான்: மனிதர் உங்கள் வெளிச்சத்தைக் கண்டு பரலோகத்தில் இருக்கிற பிதாவை, மகிமைப்படுத்தும்படியாக அது சகலருக்கும் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்றும், * மனுஷர் முன் என்னை மறுதலிக்கிறவனை நானும் என் பிதாவின் முன் மறுதலிப்பன் என்றும் † யேசுநாதசுவாமி சகல கிறீஸ்தவர்களுக்கும் திருவுளம்பற்றியிருக்கிறார்.

1. God's glory

மேலும், நாம் ஞானஸ்நானத்திலே திருச்சபைக்குக் கொடுத்த வாக்குத்தத்தமும் இந்தக் கடமையை நம்மேற் சுமத்துகிறது. அப்போது நாம் உலகம், சரீரம், பிசாசு என்னும் மூவித சத்துருக்களையும் வெறுத்துவிடுவோம் என்று தேவ சன்னிதானத்திலே பொருந்திக்கொண்டோம். அதினால் பிசாசின் சோதனைகளைச் செயிப்போம் என்றும், சரீர சிற்றின்பங்களை விட்டோம் என்றும், உலகத்தாருடைய எண்ணங்கள் பேச்சுகளுக்கு அஞ்சாமல் அவர்களுக்கு முன்பாகக் கிறீஸ்தவர்களாய் நடப்போம் என்றும் ஏற்பாடு செய்துகொண்டோமே.

2. our engagements at Baptism

* மத். 5; 16 † மத். 10; 33



அல்லாமலும், நம்முடைய சகோதரராகிய மற்றக் கிறீஸ்தவர்களின் நிமித்தமாகவும், நமது விசுவாசத்தை வெளியரங்கமாய்க் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில், கிறீஸ்தவர்கள் எல்லாரும் ஒரு உடல்போல இருக்கிறபடியால், ஒரு உறுப்பினாலே மற்ற உறுப்புக்கள் பெலன் அடைந்து உறுதியாகிறபடியே, ஒரு கிறீஸ்தவனுடைய விசுவாசத்தைக்கண்டு மற்றொருவன் விசுவாசத்திலே உறுதிப்படுவான். ஒரு ஊரில் உள்ள கிறீஸ்தவர்கள் எல்லாரும் தங்கள் விசுவாசத்தை வெளியரங்கமாய்க் காண்பித்து நடந்துகொண்டு வந்தால் அந்த ஊரில் அவவிசுவாசம் ஒருபோதும் தலையெடுக்கமாட்டாது, விசுவாசமே மேலோங்கி மகிமைப்படும்.

3. mutual edification

இந்த விதமாக, ஆதிக்கிறீஸ்தவர்கள் விசுவாசத்தை வெளியரங்கமாய் அறிக்கையிட்டதுபோல, நாமும் நமது விசுவாசத்தை வேண்டிய வேண்டியபோது வாயினும், பொதுவாக நமது பிரசித்த நடக்கையினாலும் அறிக்கையிடக் கடன் இருக்கிறது. சருவேசுரனுடைய அளவில்லாத மகிமைக்காக நாம் அவருடைய வேதத்தை அறிக்கையிட வேண்டும். நாம் ஞானஸ்நானத்திற் சுமந்துகொண்ட கடமையின் நிமித்தம் அறிக்கையிடவேண்டும். சகோதரரான கிறீஸ்தவர்களின் அந்நியோந்நிய முன்மாதிரிகையின்பொருட்டு அறிக்கையிடவேண்டும். விசேஷமாய்ச் சருவேசுரனால் ஓரோர் விதத்திலே மற்றவர்களுக்கு மேலாக வைக்கப்பட்டிருக்கிற கிறீஸ்த பிர

Those especially bound to fulfil this duty

புக்களே, செல்வாக்கு உள்ளவர்களே, உபாத்திமாரே, எசமான்களே, பிதா மாதாக்களே நீங்கள் சத்திய வேதத்தை மகிமைப்படுத்த வேண்டும். நீங்கள் வேதக்காரர் என்று காட்ட—யேசுநாதசுவாமியுடைய சீஷர்கள் என்று அறிக்கையிட—ஒருபோதும் ஒஞ்சிக்கப்படாது. ஏனெனில், நீங்கள் கோழைத்தனமாய் நடந்துகொண்டால் அதினால் நீங்களே யேசுநாதசுவாமிக்கும் அவருடைய திருவேதத்துக்கும் துரோகிகள் ஆவதோடு, உங்களைக் கண்டு பாவிக்கிற மற்றோரையும் துரோகிகள் ஆக்குகிறவர்கள் ஆவீர்கள்.

Some Christians fail to glorify their Faith :

ஆனால், ஐயையோ இக்காலத்திலே நாம் காண்கிறது என்ன? யேசுநாதசுவாமியுடைய திருவேதத்தையும் திருச் சபையையும் தங்கள் வெளியரங்கமான கிறீஸ்த சீவியத்தினால் அறிக்கையிட்டு மகிமைப்படுத்தவேண்டியவர்கள் ஆகிய கிறீஸ்தவர்கள் தாம் — செல்வமும், செல்வாக்கும், கல்வியும், சீர்திருத்தமும் உள்ள கிறீஸ்தவர்கள் தாம் —பிரதானமாய், அதைத் தங்கள் அவவிசுவாசத்தினாலும் வேதவேண்டா வெறுப்பினாலும் ஓயாமல் அவமானப்படுத்திக்கொண்டுவருகிறதைக் காண்கிறோம்.

1. by an unbelieving spirit

தங்கள் அவவிசுவாசத்தினால் நமது வேதத்தை அவமானப்படுத்துகிறார்கள். எத்தனை முறை நாகரீகம் உள்ளவர்களாகிய கிறீஸ்தவர்கள், பத்தியுள்ளவர்கள் என்று தானும் தங்களைப் பாராட்டிக்கொள்ளுகிற கிறீஸ்தவர்கள், யேசுநாதசுவாமியுடைய குருப்பிரசாதிகளைக் குறித்துப் பிரசித்தமாய் ஆவலாதி பேசுகிறார்கள்! அவ் ஆவலாதிகளினால் குருமாருடைய திரு ஊழியம் அவமதிக்கப்பட்டுச் சத்திய வேதமும் நிந்தை அடைகிறது. எத்



தனை முறை பிரசங்கங்களிலே, பிரசங்கிப்போரிலே பிழைபிடித்துக் குறை ஆராய்ந்து திரிகிறார்கள்! அதினால் தேவவாக்கு மனுஷ வாக்கைப்போல் ஆகி, வேதசத்தியம் பழிப்புக்கு இடமாகிறது. எத்தனை முறை திருச்சபையில் உள்ள பத்திகளைப்பற்றி, சிற்சில பலனுள்ள கிருத்தியங்கள் செபங்களைப் பற்றிக் கேலிபண்ணுகிறார்கள்! அதினால் நல்ல பயபத்தியுள்ள விசுவாசிகளும் அவதைரியப்பட்டு உலக மனிதராகிப்போகிறார்கள். எத்தனை முறை அடிக்கடி பாவசங்கீர்த்தனம் பண்ணுவதை, அடிக்கடி திருச் சற்பிரசாதம் வாங்குவதை நையாண்டிபண்ணுகிறார்கள்! அதினால் யேசுநாதசுவாமிக்குத் தாம் நேசிக்கும் ஆத்துமங்களிலே அடிக்கடி எழுந்தருளுவதாகிய ஆறுதல் இல்லாமற்போகிறது.

திருச்சபையின் கற்பனைகள் ஒழுங்குகளைப் பற்றி அற்பமாய்ப் பேசுகிறவர்களும் பலர். சிலர் மேற்றிராணிமார் குருமாருக்கு வருகிற தரும வருமானத்தைப் பற்றிக் குறை சொல்லுவார்கள். இவ் வருமானங்கள் அக்கியானிகளை மனந்திருப்பி இரட்சிக்கிறதற்கும், அநாதசாலைகள் கல்விச்சாலைகளை வைத்து நடத்துவதற்கும் எவ்வளவு அவசியம் என்பதை அவர்கள் உணருவதேயில்லை. உணர்ந்தவர்களின் மனதைப் பழுதாக்காமல் இருப்பதும் இல்லை. சிலர் திருச்சபை அதிகாரிகளின் மாற்றங்களிலே, அவர்கள் காரியம் நடத்தும் விதத்திலே எப்போதும் குற்றம் பிடித்து, தாங்களே ஏற்படுத்திக்கொண்ட அக்குற்றங்களை எங்கும் பிரசங்கமாய்ச் சொல்லிக்கொண்டு திரிவதிலேயே மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இன்னுஞ் சிலர் திருச்சபைக்கு மாறான—யேசுநாதசுவாமியுடைய திரு வேதத்துக்கு மாறான—சம்பாஷணைகளிலே சேர்ந்துகொண்டு, அக்கியானிகள் முன்

பாக, பதிதர் முன்பாக அத்திரு வேதத்தை அவமானப்படுத்துகிறார்கள். தங்களுக்குப் பிரியமானவர்கள் பொல்லாத வேதத் துரோகிகளானாலும் அவர்களோடு விரும்பி உறவாடுகிறார்கள். வேதத்துக்கு விரோதமான சாரமுள்ள புத்தகங்கள் பத்திரிகைகளையே பாராட்டி வாசிக்கிறார்கள். அப்புத்தகங்கள் பத்திரிகைகளே உத்தமமானவைகள் என்று பிறர்க்குச் சொல்லவும் கூசாதிருக்கிறார்கள். ஓ கிறீஸ்தவர்களே! "தீயோருடைய கூட்டத்தைப் பகைத்தேன். அவ விசுவாசிகளுடனே உட்காரவும் மாட்டேன்" என்று * தாவீது இராசா சொல்லியபோது காட்டிய வேதாபிமானம் எங்கே? யேசுநாதசுவாமியுடைய சீஷர்கள்—அவருடைய திருவேதத்தை விசுவசிக்கிறவர்கள், அத்திரு வேதத்தை அவமதிக்கிறவர்களோடேயே விரும்பி உறவாடுகிறதும், அவர் தமது தேவ அதிகாரத்தின் பெலமெல்லாங்கொண்டு கண்டித்தபோதனைகள் எண்ணங்கள் அடங்கிய புத்தகங்களையே தேடி வாசிப்பதும் வேத அபிமானமா? வேத அவமானமா?

பின்னும், சில கிறீஸ்தவர்கள் வேதவேண்டாவெறுப்பினால் நமது திருவேதத்தை அவமானப்படுத்துகிறார்கள் என்றேன். திருச்சபையின் வாழ்விலும் தாழ்விலும் அனேகருக்கு வேண்டாவெறுப்பு பிறசமயிகள் எவ்வளவாகச் சத்திய வேதத்தைத் தூஷித்தாலும், திருச்சபையை, குருமாரை, தவமடங்களைப்பற்றி ஆவலாதி சொன்னாலும், சிலர்: அதைப்பற்றி எங்களுக்கு என்னவென்று இருந்துவிடுகிறார்கள். தங்கள் எசமான்கள், அல்லது சிநேகிதருக்கு முன்பாக என்றால், பலமு

2. by their indifference in religious matters

* சங். 25 ; 5



றையும் சத்தியவேதம் மிகவும் அவமானமாய்ப் பேசப்படுகிறதைக் கண்டும், தங்களால் அதற்கேற்ற விடைகொடுத்து அப்பேச்சைத் தடுக்கக்கூடியதாய் இருந்தும் நமக்கென்ன என்று சும்மா இருந்துவிடுகிறார்கள். இன்ன இடத்திலே வேதவிரோதிகள் திருச்சபையைத் துன்பப்படுத்துகிறார்கள், கோயில்களைச் சுடுகிறார்கள், தகர்க்கிறார்கள், குருமாரைக் கொல்லுகிறார்கள், கிறீஸ்தவர்களை வதைக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு ஒரு துயரமும் இல்லை. இன்ன இடத்திலே அக்கியானிகள் மனந்திரும்புகிறார்கள், கிறீஸ்தவர்கள் ஒற்றுமையாகிறார்கள், திருச்சபை உயர்ச்சி அடைகிறது என்றால் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியும் இல்லை.

வேறு சிலருக்குச் சருவேசுரனுடைய திருநாட்களைப் பற்றி, திருச்சபைக் கொண்டாட்டங்களைப் பற்றி விருப்புமில்லை, வெறுப்புமில்லை. இவைகள் எல்லாம் தங்களைச் சாராத அலுவல்கள் என்றபடி ஏனோதானோ என்று இருந்துவிடுகிறார்கள். இது தானா சத்தியவேத மகிமையின் மட்டிலுள்ள அபிமானம்? ஓ! ஆதிக் கிறீஸ்தவர்கள் இப்படி நடந்திருப்பார்களானால், இவ்வளவு அசட்டைத்தனமாய், இவ்வளவு வேண்டாவெறுப்போடு, இவ்வளவு சுயநயவிருப்போடு சீவித்திருப்பார்களானால், சத்தியவேதம் உலகத்திலே செயங்கொண்டிருக்குமா? இக்காலத்திலே, சத்தியபோதனையை நாமே மதியாவிட்டால் பிறர் எப்படி அதை மதிப்பார்கள். ஆகையால், கிறீஸ்தவர்களே, இதிலே நம்மிடமிருக்கிற குறைகளைக் கண்டு அவைகளைத் திருத்த முயலக்கடவோம். சத்திய வேதமே ஏக உண்மையான மார்க்கம். அதை அறியும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆதலால், நாம்

அதைப்பற்றி வெட்கப்படாமல் வேண்டிய வேண்டிய போதெல்லாம் அதை வெளியரங்கமாய் அறிக்கையிடுவோமாக.

## II

யேசுநாதசுவாமியுடைய திருவேதம் பரிசுத்தமுமானது. அதுவே உலகத்திலுள்ள ஏக பரிசுத்த வேதம் என்றதை யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். அக்கியானிகளைப் பாருங்கள். அவர்களுடைய மார்க்கத்தின் தன்மை அவர்களிலேயே விளங்குகிறது. அவர்களுடைய வேதமோ பெரும்பாலும் அசுசியான கதைகளையே அடக்கியது. அவர்களுடைய தெய்வங்களோ சன்மார்க்கத்தின் மணமும் வீசப்பெறாதவர்கள். ஏனெனில் அக்கியான சமயங்களெல்லாம் மனுஷனால் உண்டானவைகள். ஆதியில் இருந்த உண்மை மார்க்கமானது கொஞ்சங் கொஞ்சமாய்ச் சிதைந்து, எண்ணில்லாத் தவறுகளோடு கலந்து, மனுஷருடைய கட்டுக்கதைகளோடு ஒன்றாகி இப்போது காணப்படும் அக்கியான மார்க்கங்களாக நிற்கிறது. தேவனால் உண்டான சத்தியவேதமோ முற்றும் பரிசுத்தமானது. அதை உண்டாக்கியவர் பரிசுத்தர். அதிலே உள்ள போதனைகள் பரிசுத்தமுள்ளவைகள். அதிலே உள்ள தேவதிரவிய அனுமானங்கள் முதலியவைகள் எல்லாம் பரிசுத்தத்துக்கே வழியாய் உள்ளவைகள். இந்தப் பரிசுத்ததனமானது சத்தியவேதத்தின் உண்மைக்கு வெகு துலாம்பரமான ஒரு அத்தாட்சியாய் விளங்குகிறது.

Pagan religions not holy

ஆனால், வேதம் தன்னிலேதானே பரிசுத்தமானது என்றாலும், உலகத்து மனிதர் வேதத்தின் போதனையைக்கொண்டு அல்ல, அதை அனுசரிக்கிறவர்களு



டைய சாதனையைக் கொண்டுதான் அதைச் சோதித்துப் பார்ப்பார்கள். வேதம் சரி என்று கண்டாலும், அதற்குக் கண்களை மூடிக்கொண்டு வேதக்காரரையே பார்த்துக்கொள்ளுவார்கள். வேதக்காரரை எப்போதும் வேதத்தோடு ஒற்றுமைப்படுத்திப் பேசுவார்கள்; நியாயம் முடிப்பார்கள். இப்படி உலகத்தார் செய்வது சரியல்ல என்பது மெய்தான்; ஆயினும், ஒவ்வொரு மரமும் அதனதன் கனியால் அறியப்படும் என்று வேதத்திலே சொல்லப்பட்டபடியே மனுஷரும் கிறீஸ்தவர்களைக்கொண்டே கிறீஸ்துவேதத்தின் பரிசுத்ததனத்தைப் பரிசோதிப்பார்கள். ஆகையால், கிறீஸ்தவர்கள் பரிசுத்தமாய் நடந்தால் மாத்திரம் தங்கள் வேதத்தை உலகத்திலே மகிமைப்படுத்துகிறவர்கள் ஆவார்கள்.

How pagans judge about our Religion

இப்படியே ஆதிக்கிறீஸ்தவர்கள் செய்தார்கள் என்று வாசிக்கிறோம். அவர்களிடத்தில் விளங்கின ஒற்றுமை, விசுவாசம், தாழ்ச்சி, உதாரகுணம், உண்மை, பொறுமை எனும் இவைகளைக் கண்ட அக்கியானிகள் தங்கள் விருப்பத்துக்கு மாறாகவும், அவர்கள் பரிசுத்தவான்கள் என்றும், அவர்கள் கைக்கொண்ட வேதமே சுத்தமான வேதம் என்றும் புகழ்ந்தார்கள். கிறீஸ்தவர்கள் இவ்வளவு முன்மாதிரிகையாக நடந்துவந்தபடியாற் தான் தெர்த்துல்லியன் எனும் அக்காலத்துச் சபைப்பிதா ஒருவர் அக்கியானிகளை நோக்கி எழுதுகிறார்: — நாங்கள் சீவிக்கிற மாதிரியை --- எங்கள் நடக்கையைப் பார்த்துக்கொண்டு பின்பு எங்களைக் குறைசொல்லுங்கள். எங்களுள்ளே அநியாயம், சூது,

Early Christians before a pagan world

விசுவாசகாதகம் முதலிய எக் குற்றங்களும் இல்லை. கிறீஸ்தவர்கள் பலரை நீங்கள் மறியலில் அடைத்து வைத்திருக்கிறீர்கள் என்பது மெய்தான்; ஆனால், அவர்கள் செய்த ஒரே குற்றம், கிறீஸ்துநாதரை விசுவசித்த குற்றமேயொழிய வேறல்ல என்பதற்கு நீங்களே சாட்சி. நாங்கள் மறைவிலே ஒருங்கு கூடுகிறோம் என்றது மெய்தான். ஆனால், நாங்கள் கூடுவது சருவேசுரனை வழிபடுதற்கேயொழிய வேறொன்றுக்குமல்ல. செபஞ் செய்தபின் நாங்கள் தவக்கிரியைகளை அனுசரிக்கிறோம். எங்கள் சகோதர ஐக்கியத்தைக் கண்டுகொண்டு எங்கள் மார்க்கத்தைப்பற்றி நியாயந் தீருங்கள்—என்று எழுதினார் இந்த மாதிரியாக நாமும் இக்காலத்திலே நம்மைச் சூழ இருக்கிற அக்கியானிகளை நோக்கிச் சொல்லக்கூடுமா? ஆதிக் கிறீஸ்தவர்கள் நடக்கைக்கும் நமது நடக்கைக்கும் எத்தனை வித்தியாசம்! வேதம் மாறிப்போகவில்லை என்பதிற் சந்தேகம் இல்லை. அவர்கள் விசுவசித்ததையே நாமும் விசுவசிக்கிறோம். ஆனால் நமது நடக்கையோ கொள்கைக்கு ஒத்ததாய் இல்லை. ஒருவருடைய நடக்கைப்பிசகினாலே கிறீஸ்துநாதருடைய வேதவிசுவாசத்துக்குப் பழுதுவராது என்று முன்னும் சொன்னேன். ஆனாலும், நாம் விசுவாசத்தின் பிரகாசமான வடிவத்தை நமது துர்நடக்கையாகிய படலினால் மூடிவிடும்போது, அதின் அழகை அக்கியானிகள் உள்ளபடி காணக்கூடாமல் இருப்பார்கள் அல்லவா? அதிலே குற்றவாளிகள் நாம் தான் அல்லவா? திருச்சபையை விட்டு முற்றாய்ப் பிரிந்துபோனவர்களால் வேதத்துக்கு இவ்வளவு அவமானம் வராது. அதின் அங்கத்தவர்களாய் இருந்துகொண்டும், ஆண்டவருடைய திருவேதத்துக்கு எதிராய் நடக்கிறவர்களாலே



தான் வேதத்துக்குப் பெரிய அவமானம். இவர்களே அதின் முகத்திற் கரி பூசிவிடுகிறார்கள். இவர்களே யேசுநாதருடைய திருப்பத்தினியின் வதனத்தை உலகத்துக்கு வேற்றுமுகமாகக் காட்டிவருகிறார்கள்.

ஆ! கிறீஸ்தவர்களே, இந்த நாட்களிலே அவிசுவாசிகள் திருச்சபையைப் பார்த்து—அல்ல, அல்ல, அதின் அயோக்கியமான அங்கங்களைப் பார்த்து என்கிறேன்—அவிசுவாசிகள் திருச்சபையைப் பார்த்து:

The Church in our midst

"இதுதானா பூரண அலங்காரவதியாகிய நகரம்?"* இதுதானா முன் ஒரு காலம் அத்தனை பரிசுத்தவான்களை, முனிவர்களை, கன்னியர்களைப் பிறப்பித்த நகரம்? இதுதானா அத்தனை பட்டினங்களை இராச்சியங்களைத் திவ்வியமாக்கி, சீர்திருத்தி மகிமையில் உயர்த்திக் கடவுளுக்கு உகந்ததாக்கிற்று என்று சொல்லப்படுகிற சபை? இதுதானா கொடிய காட்டுமிருண்டிகளான எத்தனையோ சாதிகளைச் சீவ இரக்கமும் தேவபத்தியும் உள்ளவர்களாக்கி அர்ச்சித்த திருக்கூட்டம்! என்று ஆச்சரியத்தோடு கேட்கவேண்டியிருக்கிறதல்லவா? திருச்சபையும்—நமது மத்தியிலேயுள்ள திருச்சபையும்—பெருமூச்சுக்களோடு ஆண்டவரைப் பார்த்து: "கர்த்தாவே கண் நோக்கிப் பார்த்தருளும்; இதோ நான் இழிக்கடையாய்ப் போனேன்"† என்று சொல்லவேண்டியிருக்கிறதே!

திருச்சபையிலே எமது மத்தியிலேயும் பரிசுத்தமான, முன்மாதிரிகையான, சாங்கோபாங்கத்தின் சுகந்த பரிமளம் வீசுகிற ஆத்துமாக்கள் உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இவர்கள் மிகக் கொஞ்சம்பேர். பெருவாரியான சனமெல்லாம் திருச்

* புலம்பல். 2; 15 † புலம்பல், 1; 11

சபைக்கு அவமானமாகவே நடக்கிறது. பிறசமயத்தவர்களும், அருமையாய், இலைமறைகாய் போலக் காணப்படும் சுத்த விசுவாசிகளை அல்ல, தங்களோடு நாளிலும் பொழுதிலும் புழங்கிவருகிற சனத்திரளைக் கொண்டுதான் வேதத்தை உரைத்து நிறுத்துப் பார்ப்பார்கள். இச் சனத்திரளோ உலகத்தின் வழியிற்பட்டு அக்கிரமங்களைச் செய்வதாயிருக்கிறது. கிறீஸ்தவர்கள் என்ற நாமத்தை ஒழிய சீவியத்தை நினைவினாலே தானும் அறியாததாயிருக்கிறது. இச்சனம் திருச்சபைக்கு, எங்கள் ஆண்டவர் அருளிச்செய்த திருவேதத்துக்கு ஒரு பெரும் அவமானம்! சகிக்கமுடியாத அவமானம்! "எல்லாரும் பின்வாங்கிப்போனார்கள். எல்லாரும் பிரயோசனம் அற்றவர்கள் ஆனார்கள்" என்ற சங்கீத வாக்கியம் * இந்தக் கெட்ட கிறீஸ்தவர்களுக்கு, ஐயையோ, மிகவும் நன்றாகவே பொருந்துகிறது.

Sinners disfigure the beautiful countenance of Holy Church

ஆ பாவிகளே, கிறீஸ்துநாதர் எவ்வளவோ பாடுபட்டுத் தம்முடைய திரு இரத்தத்தினாலே கழுவிச் சுத்தமாக்கிய சபையை நீங்கள் உலகத்துக்குமுன்னே அவலக்ஷணமாக்கிக் காண்பிக்கத் துணிந்துகொண்டீர்களே! வேதத்துக்கு ஒவ்வாத உங்களுடைய நடையினால், பிறசினேகத்துக்கு எதிரான உங்கள் வியாச்சியங்களால், அடிபிடிகளினால், பகை வன்மங்களினால், உங்கள் வியபிசார மோக நடக்கையினால், உங்கள் அநியாய வட்டிகளினால்—யேசுநாதருடைய திருவேதம் அக்கியானிகளுக்குள்ளே தூஷணிக்கப்படக் காரணமாகிறீர்களே. ஆண்டவர் தமது திருப்பாடுகளின்

* 13-ம் சங்கீதம், 3



வேளையிலே பட்ட கசையடிகளையும் நிந்தை அவமானங்களையும் நீங்கள் இப்போது மீண்டும் புதுப்பிக்கிறீர்களே. உங்களால் கிறீஸ்துநாதர் அவமானப்படுகிறாரே. * ஆகையால் உங்கள் சொந்த ஆத்தும ஈடேற்றத்தின் பொருட்டாக அல்லாவிடில், யேசுநாதருடைய திருவேத மகிமையின் பொருட்டாவது—பிள்ளைக்குரிய தேவநேசத்தின் பொருட்டாக அல்லாவிடில், ஒருவருக்கு மற்றொருவர் செலுத்தவேண்டியதாகிய நீதிக்கடமையின் பொருட்டாவது இனிச் சுவிசேஷத்துக்கு ஒத்தபடி நடக்கவருந்தவேண்டாமோ?

Exhortation

இப்போது முடிக்கவேண்டும். பிரியமானவர்களே, இதுவரையிற் கேட்டவைகளை மனதிலே இருத்தித் தியானித்து நீங்கள் எல்லாரும் மெய்யான வேத அபிமானம் உள்ளவர்கள் ஆகக்கூடுமானால் எவ்வளவு நன்மையாயிருக்கும்! அதினால் உங்கள் ஆத்துமங்களுக்கு எவ்வளவு பிரயோசனம் உண்டாகும்! திருச்சபையின் விருத்திக்கு எவ்வளவு அனுகூலமாகும்! உங்களால் பேசுநாதசுவாமியுடைய ஈடேற்றுகிற திருநாமம் எவ்வளவு துதிக்கப்படுவதாகும்! கிறீஸ்தவர்களே! நாம் எல்லாப், வேதத்துக்கு ஒவ்வாத நடக்கையினால், வேண்டா வெறுப்பினால் விசுவாசக்குறைவினால் திருச்சபைக்கு மோசஞ்செய்யாதபடி கவனித்துக்கொள்ள வேண்டியது பாரமான ஒரு கடமை; திருச்சபையின் ஸ்தாபகராகிய யேசுநாதர் மட்டில் நீதியின்பேரால் நாம்கொண்ட கண்டிப்பான கடமை. திருச்சபைக்கு மோசஞ்செய்யாமல் விடுவதென்பது மாத்திரமல்ல, அதற்கு உதவிசெய்வதும் அல்லவோ எமது கடமை! ஆகையால், நம்மிடத்திலே உயிருள்ள விசுவாசத்

* ரோமர், 2; 24

தைத் தூண்டி எழுப்பிக்கொள்ளவேண்டும். வேதசத்தியங்களை மேலும்மேலும் நன்றாய்ப் படித்தும் கேட்டும் தேர்ந்துகொண்டு, வேதவிஷயமான காரியங்களில் எல்லாம் திருச்சபைக்காக நின்று போராடவேண்டும். திருச்சபையின் வாழ்விலே சந்தோஷமும், தாழ்விலே துக்கமும் கொள்ளப் பழகவேண்டும். அப்பால், நாம் விசுவசிக்கிற திருப்போதகத்துக்கு ஒப்ப, சாந்தம், பொறுமை, நீதி, நேர்மை, கற்பு, மட்டசனம் முதலிய சுகிர்த புண்ணியங்களை அனுசரித்து யேசுநாதசுவாமியுடைய திருச்சாயல் நம்மிலே காணப்படச் செய்ய அதிகமதிகமாய் வருந்தவேண்டும். இவ் உபாயங்களினாலே திருச்சபையானது நமது மத்தியிலே விருத்தியாகச் செய்துகொண்டுவருவோம். எத்தனை குருமார் எத்தனை அரும்பிரயாசங்களோடு திருச்சபையை விருத்தியாக்க உழைத்துவருகிறார்கள்! அவர்கள் கட்ட வருந்துவதை நாம் நமது ஒழுக்கமற்ற நடையினாலே பிடுங்கி எறிந்துகொண்டிருப்போமா? இல்லை, ஓர்போதும் இல்லை. கிறீஸ்தவர்களே, நாமும் அந்தப் பரிசுத்த வேலையிலே பங்குபற்றுவோம்— நாமும் நமது துப்புரவான சீவியத்தினாலும். வேதகாரியங்களிலே காட்டுகிற கரிசனையினாலும், வேத விஷயங்களைப்பற்றி நாம் கொண்டிருக்கிற நிச்சய உணர்வினாலும், அக்கியானிகளும் பதிதரும் மனந்திரும்பித் திருச்சபை விருத்தியாகச் செய்வோம். இன்று தொட்டு நாம் திருச்சபையின் மகிமையே நமது மகிமை என்றபடி நடப்போம். நாம் பிறந்த குடிகுலத்தைப் பற்றி நாம் எவ்வளவு சுணையுள்ளவர்கள்! நமது குலத்துக்கு எதிராய்ச் சொன்னதை நமக்கு எதிராய்ச் சொன்னதாகப் பாவிக்கிறோமே. நமது குலத்துக்கு இழிவானது ஒன்றையும் செய்யப்படாதென்



றதே விரதமாக நடக்கிறோமே. அப்படியானால், திருச்சபை அல்லவா நமக்கு உலக பிறப்பைத் தந்த குடிகுலத்திலும் பெரிய மகா மகிமையுள்ள குடியும் குலமும்! அதைப்பற்றி நாம் சுணையற்றிருக்கலாமா? அபிமானம் இல்லாமல் இருக்கலாமா? ஆகாது ஆகாது. ஆதலால், இதுதொட்டே நாம் உத்தம விசுவாசிகளாய், உத்தம கிறீஸ்தவர்களாய் நடக்கத் தொடங்குவோமாக. சருவேசுரனுடைய வார்த்தையை மகிமைப்படுத்தத் தொடங்குவோமாக. அநந்த நீதிபரராகிய அவரும் நம்மை ஒருநாள் பரலோக இராச்சியத்திலே மகிமைப்படுத்தியருளுவார். ஆமென்.



## தபசுகால நாலாம் ஞாயிறு

## On Human Respect

# முகத்தாட்சிணியம்

An quaero hominibus placere? Si adhuc hominibus placerem Christi servus non essem

நான் மனுஷருடைய முகத்தாட்சிணியத்தைத் தேடுகிறேனா? மனுஷரைப் பிரியப்படுத்தத் தேடுவேனாகில் கிறீஸ்துநாதருடைய ஊழியனாயிரேனே.

(கலாத். 1 ; 10)

பிரியமான கிறீஸ்தவர்களே! அர்ச். சின்னப்பர் வசனித்த இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனேதானே மனுஷருக்குப் பிரியப்படத் தேடுவதும், யேசுநாதசுவாமிக்கு ஊழியஞ்செய்வதும் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று எதிராயிருக்கிறதென்று தெற்றெனத் தெரியும். நம்மில் யார் கிறீஸ்துநாதருடைய ஊழியன் அல்லாமல் இருக்க விரும்பக்கூடும்? ஒருவருமில்லை. இவ் உலகில் அவருடைய ஊழியராயிராதவர்கள், பரலோகத்தில் அவரோடு மோட்ச பாக்கியம் அடையக் காத்திருக்கலாமா? காத்திருக்கல் ஆகாது. ஆகையால், நாம் எல்லோரும் அவருடைய ஊழியராய், நம்பிக்கையுள்ள ஊழியராய் இருக்கவே பிரயாசப்படவேண்டியது. அப்படி இருக்கவேண்டுமானால், முகத்தாட்சிணியம் அல்லது மனிதருக்குப் பிரியப்படத் தேடுதல் என்ற இந்தப்பொல்லாப்பை விலக்கிக்கொள்ளவே வேண்டும். மனுஷருக்குப் பிரியப்



படத் தேடுகிறவர்கள் யேசுநாதருடைய ஊழியக்காரராய் இருக்கக்கூடாது என்பது தவறாத வேதவாக்கியமாமே.

Human respect very widespread

சென்ற கிழமை வேதாபிமானத்தைக் குறித்துக் கேட்டீர்கள். நமக்கு அறியவும் விசுவசிக்கவும்கிடைத்திருக்கிறதாகிய சத்தியவேதமே உலகத்திலே ஏக மெய்யான வேதம்; உலகத்திலே ஏக பரிசுத்தமான வேதம். ஆகையால், அதை நாம் எவருக்கும் அஞ்சாமல் எல்லாருக்கும் முன்பாக மகிமைப்படுத்தி, அதின் போதகங்களை எம்மால் இயன்றளவு பூரணமாய் அனுசரித்து அதின்மட்டில் நமக்குள்ள இரட்டைக் கடமையைத் தீர்த்துக்கொண்டுவர வேண்டும். ஆனால் இந்தப் பாரமான கடமையைத் தீர்ப்பதற்கு முகத்தாட்சிணியம் என்னும் துர்க்குணமே பெரும் எதிரிடையாக நிற்கிறது. மனித முகப்பயத்தினாலே தான் நாம் நமது திருவேதத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடாமல், நாம் வேதக்காரர் என்பது தோன்றவிடாமல் கூசிப்பதுங்கி நடக்கிறோம். இன்னும், முகத்தாட்சிணியத்தினாலேதான் பலமுறையும் தவஞ்செய்யாமல், அடிக்கடி பாவசங்கீர்த்தனம்பண்ணாமல், கிறீஸ்துநாதருடைய சாயலான சீவியத்திலே வர்த்திப்பதற்கு உதவியாக அவரை அடிக்கடி சற்பிரசாதத்திலே வாங்கிக்கொள்ளத் துணியாமலிருக்கிறோம். "சுத்தவாளருடைய முன்மாதிரிகையைப் பின்பற்றி நடக்க எனக்கு எவ்வளவோ பிரியம். ஆனால், உலகம் என்னசொல்லும்? இவ்வளவு நாளும் அசட்டையுள்ள ஓர் கிறீஸ்தவனாய் நடந்த நான், இருந்தாற்போலப் பத்திமானாய் வரக்கண்டவர்கள் நகையார்களா? இனிமேல் என்னைக் காண்போர் எல்லாம் பகிடி

பண்ணுவார்களே" என்ற எண்ணத்தினாலல்லவோ எத்தனையோ பேர்—மேலான சாங்கோபாங்கத்துக்கு அழைக்கப்படுகிற எத்தனையோ பேர் புண்ணியத்தில் விருத்தியடையாமல் இருந்தபடியே இருக்கிறார்கள்.

ஆகையால் நாம் இந்தப் பொல்லாங்கை எதுவிதத்திலும் தவிர்த்துவிட வேண்டும். முகத்தாட்சிணியம் எனும் இந்தத் துர்க்குணத்தின் அருவருப்பைக் கண்டுகொண்டு அதை வெறுக்கவேண்டும். அது நம்மிடத்திலே நிலையாதபடி, அதை வேரோடு களையப் பிரயத்தனஞ் செய்யவேண்டும். இதற்காக நாம் முகத்தாட்சிணியமானது முதலாவது ஆத்துமத்தை மிகவும் தாழ்வாகத் தாழ்த்துகிற ஒரு அடிமைத்தனம் என்று காட்டுவோம். பிறகு முகத்தாட்சிணியமானது மனிதன் கட்டிக்கொள்ளக்கூடிய மதியீனங்களுள் எல்லாம் பெரிய ஒரு மதியீனம் என்று விளக்குவோம். கடைசியிலே, இது சருவேசுரனுக்கு மகா அவமானம் என்று தெளிவிக்கச் சில வார்த்தைகள் சொல்லுவோம். இன்றைப் பிரசங்கம் இந்த மூன்று பிரிவுகளிலேயுமே அடங்கும். பிரியமான கிறீஸ்தவர்களே, தயவுசெய்து இவைகளுக்கு அவதானமாய்ச் செவி தந்து கேட்பீர்களாக.

Division

## I

Ancient system of slavery

முற்காலத்திலே சிறைகுட்டிகள் என்றும், அடிமைகள் என்றும் சொல்லப்பட்டவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தப் பாவிப் பிராணிகளும் ஆதாம் ஏவாளுடைய பிள்ளைகள்தான். ஆகையால் சகல மனுஷருக்கும் சகோதரமுறை உடையவர்களே என்பது நிச்சயம். ஆனாலும், முற்காலத்திலே நடைபெற்ற ஒரு துர்வழக்கத்தினால், சிறைகுட்டிகளாய்ப் பிடிக்கப்பட்டிருந்த இந்த மனுப்பிறவிகள் கையில் கழுத்திற் கயிறு மாட்டப்பட்டு ஆடுமாடுகளைப்போல நடத்திக்கொண்டு போகப்பட்டார்கள். அவர்களுக்குச் சுயாதீனமில்லை. காணி பூமி இல்லை. தட்டுமுட்டு இல்லை. அவர்களே தங்களைக் கொண்டவர்களுடைய தட்டுமுட்டுக்களைப்போல, வாய்விடாச் சாதிகளான கால்நடைகளைப்போல நடத்தப்பட்டார்கள். கால்நடைகளைப்போலச் சந்தையிலே கொண்டுபோய் விலைக்கு விற்கப்பட்டார்கள். கிறீஸ்து வேதம் பரம்பவே அடிமை வியாபாரமும் அடிமை ஆட்சியும் சற்றுச்சற்றாகக் குறைந்துபோய்விட்டது. கிறீஸ்தவர்களாகிய நாம் எல்லாரும் சுயாதீனம் உள்ளவர்களாய்ப் பிறந்திருக்கிறோம். மனச் சுதந்திரமுள்ளவர்களாயிருக்கிறோம். கிறீஸ்துநாதர் எம்மை மீட்ட சுயாதினத்தினால் சுயாதீனம் உள்ளவர்களாயிருக்கிறோம்.



Human respect a great slavery

ஆனால், பிரியமான கிறீஸ்தவர்களே, முகத்துக்கு அஞ்சி நடக்கிறவன், தன்னை இந்தத் துர்ப்பழக்கமாகிய கொடிய எசமானுக்கு முழுப்படியே விற்றவனாய்ப் போய்விடுகிறான். உலகத்திலே ஒருபோதும் இருந்திராத நீச அடிமைத்தனத்துக்கு உள்ளாகிப்போகிறான். முகத்தாட்சிணியம் தேடுகிற கிறீஸ்தவன் ஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் தனக்கு ஏவித் தருகிற நல் எண்ணங்களின்படி நடக்கக் கூடாதவன் ஆகிறான். கையுங் காலுங் கட்டப்பட்டவனாகிறான். அவன் எந்த நன்மையைச்செய்ய உன்னினாலும் மனிதர் என்ன நினைப்பார்கள், என்ன சொல்லுவார்கள் என்ற பயமானது வந்து தடுத்துக்கொண்டு நிற்கிறது. அதுமட்டா? எந்த அடிமையாவது ஒரேதடவையில் இரண்டு

எசமான்களுக்குச் சிறையாயிருப்பது உண்டோ? இல்லை. ஆயினும், முகத்தாட்சிணியமுள்ளவன் தன் ஊரிற் தன்னை அறிந்த சகல அசட்டையான கிறீஸ்தவர்களுக்கும், பாவிகளுக்கும், அக்கியானிகளுக்கும் ஒருதடவையிலேதானே அடிமைப்பட்டவனும் அஞ்சிநடக்கவேண்டியவனும் ஆகிறான். எங்கேபோனாலும் இன்னார் என்ன நினைப்பார்களோ என்று பயப்படுகிறான். இந்த ஓயாத பயத்தினால், அவனுக்கு வீட்டிலே செபஞ்சொல்லப் பயம்; திருந்தாதிமணி அடித்தால் திருந்தாதி சொல்லப் பயம்; சாப்பிடுமுன், சாப்பிட்டபின் செபஞ்சொல்லப் பயம்; சிலுவை அடையாளம் போடப் பயம்; சுரூபங்களுக்கும் குருமார் முதலியவர்களுக்கும் ஆசாரம்பண்ணப் பயம்; பத்தியோடு செபிக்கிற பாவனையாயிருக்கப் பயம்; ஆசிநீர்தொட்டுப் போடப் பயம்; சற்பிரசாதத்தின்முன்னே முழந்தாளிடப் பயம்; கோயிலிலே வாய்திறந்து சகலரோடும் செபஞ்சொல்லப்பயம்; சகலத்திலும் பயத்தினாற் கட்டப்பட்டுப் புண்ணியவழியைக் கைவிடவேண்டியவனாகிறான்.

Sins occasioned by it

முகத்தாட்சிணியந் தேடுகிறவன் புண்ணியத்தைக் கைவிடுகிறதோடு நின்றுவிடுவானா? இன்னார் என்ன சொல்லுவார்களோ நினைப்பார்களோ என்ற பயத்தினால் பாவத்தையும் கட்டிக்கொள்ளத் துணிகிறவனாகிறான். இரண்டொரு உதாரணத்தைப் பார்ப்போம். சில புரோட்டெஸ்தாந்தர்களோடு அக்கியானிகளோடு பேசிக்கொண்டு நிற்கிறீர்கள். கடன் பூசைக்கு மணியடிக்கிறது. அவர்களுக்குக் காரியத்தைச் சொல்லிவிட்டுப் பூசைக்குப்போகத் துணிகிறீர்களில்லை.—உங்களோடு பேசிக்கொண்டு நிற்கிறவர்க



ளுள் ஒருவன் பரிசுத்த கற்புக்கு விரோதமான அசுசியான வார்த்தைகளைப் பேசுகிறான்; கதைகளைச் சொல்லுகிறான்; பாட்டுகளைப் படிக்கிறான். நீங்களும் ஓம் ஆம் என்று சொல்லிக் கேட்டுக்கொண்டு நில்லாவிட்டால் நிற்போர் என்ன நினைப்பார்களோ, என்ன சொல்லுவார்களோ என்ற பயத்தினால் அடிமைகொள்ளப்பட்டு, நினைவினாலும் சம்மதத்தினாலும் பாவத்தில் விழுகிறீர்கள் —உங்களோடு சம்பாஷிக்கிறவர்கள் திருச்சபையைத் தூஷணிக்கிறார்கள். சத்திய வேதத்துக்கு எதிராகப் பொய்களை விழுங்கிக் கக்குகிறார்கள். பாவசங்கீர்த்தனம் முதலிய தெய்வீக வழிபாடுகளைப் பழிக்கிறார்கள். நீங்களோ ஊமைபோல் இருக்கிறீர்கள். முகத்தாட்சிணியம் உங்களைக் கோழைநெஞ்சாக்கிப்போட்டது உங்கள் வாயைப் பூட்டிப்போட்டது. நீங்களும் அவர்களோடுகூடச் சிரித்து உங்கள் மாதாவைப் படுபாதகமாய் இகழுகிறீர்கள். உங்கள் தேவனை மறுதலிக்கவும் வேண்டியவர்களாகிறீர்கள். நீங்கள் கிறீஸ்தவர்கள் என்றதையும் அக்கிரமமாய் மறைக்கவேண்டிவருகிறது. அல்லது வேறு ஓர் உதாரணம்: உங்களுக்குக் குற்றஞ்செய்த ஒருவனுக்குப் பொறுதிகொடுக்கவும், அவனோடு உறவு கூடுவதற்குரிய காரியங்களை முந்தி நீங்களே செய்யவும் தூண்டப்படுகிறீர்கள். யேசுநாதருடைய பரிசுத்த முன்மாதிரியும், அவருடைய திருப்போதகமும் இதை உங்கள் மனதிற் புகுத்தி உறுத்திக்கொண்டிருக்கின்றன. ஆனால், ஐயோ முகத்தாட்சிணியத்தின் கொடுங்கோன்மையே, உலகத்தார் எங்களைக் கோழையர்கள் என்று சொல்லார்களா? எங்களிலேதான் குற்றம் என்று பேசிக்கொள்ளார்களா? சரிக்குச்சரி பழிவாங்காவிட்டால் சக்கட்டை என்று சொல்லார்

களா? என்ற எண்ணந் தூண்டத் தூண்டப் பொறுதியான நல்லுணர்ச்சிகளையெல்லாம் மறந்து, வன்மஞ் சாதித்து, பரலோகத்துக்கு முன்னாகவும், பூலோகத்துக்கு முன்னாகவும் பாரப் பழிக்குள்ளாகிறீர்கள். வேறோர் உதாரணம்: நீங்கள் கூடிப்போகிற ஆட்கள் தவறணைக்குள் நுழைகிறார்கள். நாங்கள் அங்குவரவில்லையென்று சொல்ல, உங்களுக்குத் துணிவில்லை. குடிகாரச் சினேகிதர் உரோசம்பொங்கி வார்த்து வார்த்துத்தர நீங்களும் மிருகம் அமைவதுபோல் அமைந்து, உங்கள் தேவனின் கட்டளையைமீறி, வெறிக்கக் குடிக்கிறீர்கள். எவ்வளவுநீச அடிமைத்தனம்! முற்காலமிருந்த சிறைகுட்டிகளின் அடிமைத்தனத்திலே சரீரம் மாத்திரம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தது. கயிறும் சங்கிலியும் கையைக் காலைக் கழுத்தைச் சுற்றிமாட்டப்பட்டிருந்ததே ஒழிய ஆத்துமத்தின் தத்துவங்களுக்குக் கட்டுப்பாடு இடப்படவில்லை. ஆனால், முகத்தாட்சிணியத்துக்கு இடங்கொடுக்கிறவனுடைய அடிமைத்தனம் அதிலும் எத்தனையோ மடங்கு அதிககேடாகிறதே. இதிலே மனம், புத்தி, சித்தம் எல்லாத்திலும் சங்கிலியிட்டுக் கட்டிவைத்ததுபோலிருக்கிறதே. சகலத்திலும் ஒரு எசமானுக்கல்ல, ஊரில் எத்தனை பத்தியற்றவர்களுண்டோ, எத்தனை நையாண்டிக்காரருண்டோ அத்தனைபேருக்கும் ஒரே தடவையில் அடிமைப்பட்டிருக்கவேண்டி வருகிறதே! இதைவிடக் கொடிய சிறைக்கோலம் எப்போதாவது இருந்ததுண்டா? இருக்கக்கூடுமா?

## II

முகத்துக்கு அஞ்சுவது மகாமதியீனம். ஏன் பயப்படுகிறீர்கள்? "இன்னார் இன்னார் ஏதாவது சொல்லுவார்கள், சிரிப்பார்கள்; அவர்கள் செய்யாததை



நாங்கள் செய்தால், நூதனமாய்த்தோன்றும்; ஆதலால் எங்கள் கடமையை நிறைவேற்றப் பயப்படுகிறோம்"—ஆ! கிறீஸ்தவர்களே, நீங்கள் எவ்வளவாக ஏமாந்துபோகிறீர்கள்! மனுஷர்—அதுவும் நல்ல மனுஷரல்ல, புண்ணியவாளரல்ல—பாவிகளும்கூட, நீங்கள் உங்கள் கடமைகளைச் சுமுத்திரையாய் நிறைவேற்றுவதைப் பற்றி உங்களைப் பாராட்டுவார்களே அல்லாமல் பழிக்க மாட்டார்கள். தன்தன் கடமையைச் செய்வது எல்லாராலும் மெய்ச்சப்படுகிற ஒரு நிதார்த்தகுணம். அதைப் பாவிகள்தாமும் மெய்ச்சாமல் இருக்கக்கூடாது. தாங்கள் கெட்டவர்களாயிருக்கிறது அவர்களுக்குப்பிரியம். பிறர் தங்களைப்போல் இருக்கிறதோ எப்போதும் பழிப்பு.

Human respect a degrading folly

தங்கள் இடத்திலே கிடந்து போராடுகிற தீயநாட்டங்களையும், அந்த நாட்டங்களுக்கு இடங்கொடுத்ததினால் தங்களுக்குச் சம்பவித்த நீச சிறைப்பாட்டையும் நன்றாய் அறிந்திருக்கிறபடியால், தங்களைப்போல நடக்கிற பிறரையும் நீசமாகவே எண்ணிக்கொள்ளுவார்கள். இந்த எண்ணத்தை வெளியிட்டால் தங்களைக்கூடக் கண்டிப்பதாக முடியும். ஆகையால், வெளியிடாமல் மறைத்துக்கொண்டு, உற்சாகமாய்ப்பேசித் தைரியஞ்சொல்லிக் கொள்ளுவார்கள். கெட்டவர்கள் கூடப் புண்ணியத்தை மதிக்கிறார்கள் என்பது ஒரு மறுக்க முடியாத உண்மை. புண்ணியவாளரை வெளிக்கு நையாண்டி பண்ணும்போதே உள்ளுக்குப் பயந்து நடுங்குவார்கள். பாவவாளரை வெளிக்குப் பாராட்டிக்கொள்ளும்போதே,

The irreligious themselves internally esteem pious persons

உள்ளுக்குப் பழித்துச் சரசம் பண்ணுவார்கள். கிறீஸ்தவர்களே! உள்ளபடியே மோசம்போகிறீர்கள்.

இன்னும் உங்களைப் பழித்துப்போடுவார்களே என்று நீங்கள் பயப்படுகிறவர்கள் யார்? தேவபயம் இல்லாதவர்கள். உலகத்தன்மை பொருந்திய மனுஷர். ஏதாவது ஒரு முக்கியகாரியத்திலே அவர்கள் சொல்லைக் கேட்கவும், மாட்டார்கள்; அவர்கள் நடத்தையை அங்கீகரிக்கவும் மாட்டார்கள். ஆனாலும், நீங்கள் நன்மை என்று, புண்ணியம் என்று அறிந்திருக்கிற வேத கடமைகளிலேமாத்திரம் உங்களுக்கு அவர்கள் முதலாளிமாராய்ப் போகிறார்கள்.

*and dispise those who imitate their ways*

அவர்கள் முகத்துக்கே அஞ்சுகிறீர்கள். இப்படி உங்களுக்கு எல்லாவிதத்திலும் கீழ்ப்பட்டவர்களாய் இருக்கிறவர்களுடைய முகத்துக்கு அஞ்சுவது எவ்வளவு சக்கட்டைத்தனம் என்றதை நினைக்கிறீர்கள் இல்லை. நீங்கள் அவர்களுக்கு அஞ்சாமல் உங்கள் வேதக் கடமைகளை நிறைவேற்றிவந்தால், அவர்கள்—தேவ பத்தியற்ற அவர்கள்—உங்கள் தைரியத்தை மெய்ச்சி உங்களைப் பூச்சியமானவர்களாக மதித்திருப்பார்கள். ஆனால், நீங்கள் கோழைத்தனமாய் அவைகளை விட்டுவிடுவதைக்கண்டால் அதனால் அவர்கள் உங்கள்மேல் ஏலவே வைத்திருக்கக்கூடிய மதிப்பு முற்றாகப் பறந்துபோய்விடும் என்பது நிச்சயம். "பார்! இவர்கள் தங்கள் மனச்சாட்சியின்படி, சரியானதைச் செய்யமாட்டாத கோழை நெஞ்சர்கள். இவர்களும் எங்களைப்போன்றவர்கள்தானே" என்பார்கள். இதை நினையாமற்போகிறோம். ஆகையால் வெட்கங்கெட்ட கோழைகளே, பாவிகள்கூடப் பாவஞ்செய்வோரை இகழுகிறதை அறிந்துகொண்டு இன்னும் நீங்கள்



புத்தியீனமாய் அவர்களையே பிரியப்படுத்த வருந்துகிறீர்களே. எல்லா விதத்திலும் நிர்ப்பாக்கியரான அவர்கள்தாம் உங்களுக்கு உவந்த நடுவர்கள் என்றபடி நடக்கிறீர்களே. இவர்களுக்காகப் பாவஞ்செய்யவும் பின்னிடுகிறீர்களில்லையே. சருவேசுரனுடைய நீதிக்கோபம் உங்கள் தலைமேல் இறங்குமே, புண்ணியவாளர் உங்களை வெறுப்பார்களே என்றதுமட்டுமல்ல, பாவிகள்கூட உங்களை மதியார்கள் என்று அறிந்துகொண்டும், அந்தப் பாவிகளுக்கே பிரியப்படத் தேடுவது பைத்தியம், அல்லாவிட்டால் பைத்தியம் என்று வேறொன்று உலகத்தில் உண்டா?

*Hence it is a most unreasonable cowardice*

அல்லது பாவிகள், அசட்டையுள்ளோர்,--உங்களைப் பழித்துச் சிரித்துப்போட்டால், ஏதாவது நையாண்டி சொல்லிப்போட்டாற்தான் உங்களுக்கு வந்துவிட்ட குறை என்ன? உலக கருமங்களில் நம்மில் யாராவது பிறர் குறை சொல்லக்கூடுமே என்ற பயத்துக்காகத் தங்களுக்குவரும் ஒரு பெரிய லாபத்தைக் கைவிடுவார்களா? தாங்கள் கருதியதை முடித்துக்கொள்ளும்போது—தேடிய லாபத்தைப் பெற்றுக்கொள்ளும்போது—முன் சிரித்தவர்கள் எல்லாரும் தலைகவிழுவார்கள் என்று அறிந்துகொண்டு, யார் என்ன நினைத்தாலும் சொன்னாலும் எடுத்துக்கொண்ட லாபகரமான காரியத்தை முடிப்பார்கள் அல்லவா? ஞான காரியங்களிலே ஏன் இந்தக் கோழைத்தனம்? உங்கள் வேதக் கடமைகளை நிறைவேற்றுவதினால் இவ் உலகத்திலும் அவ் உலகத்திலும் மனச் சமாதானமும் பேரின்பபாக்கியமும் உண்டென்று நிச்சயமாய் அறிந்துகொண்டும் இந்தப் பெரிய லாபத்தைச் சில வீணர்களுடைய சன்னை

சரசங்களுக்காகக் கைவிட்டு விடுவது எவ்வளவு மதியீனம்?

An illustration to the point

அல்லது மனுஷரைப் பிரியப்படுத்த வேண்டும் என்று தேடுகிற நீங்கள் எத்தனைபேருக்குப் பிரியப்படுவீர்கள்? "உலகம் பலவிதம்" என்ற ஊர்ப்பேச்சை அறியீர்களா? "ஏறச் சொன்னால் எருது கோபிக்கும். இறங்கச் சொன்னால் முடவன் கோபிப்பான்" என்ற பழமொழியுந் தெரியுமே. நீங்கள் எவ்வளவாக முயன்றாலும், எவ்வளவு சாக்கிரதையாய் இச்சகமாய் இசைந்து நடக்கப் பார்த்தாலும் ஊரவர்களுடைய நாக்கு ஆடிக்கொண்டிருக்குமட்டும் ஒருவரோ மற்றவரோ உங்களிலே குறை சொல்லாமல் விடார்கள். ஓருகிழவனும் மகனும் கழுதையில் ஏறிய கதையை அறிவீர்கள். பாலியனை நடக்கவிட்டுக் கிழவன் கழுதையிற் சாரிபோகக்கண்ட ஊரவர்கள் கிழவனைப் பார்த்து: ஐயோ! இந்தப் பச்சைக் குழந்தை கால் கடுக்க நடந்துகொண்டுவர, நீ குசாலாய் ஏறிப்போகிறாயோ என்றார்கள். பொடியனைக் கழுதையில் ஏற்றி, கிழவன் நடக்க, மறுபடியும் கண்டவர்கள் ஐயோ! விழுகிழவன் தன்னித் தன்னிப் பின்னேவர இந்தக் குத்தியன் பவனி போகிறானே என்றார்கள். இருவரும் கழுதையில் ஏற, ஐயோ பாதகரே! உங்கள் நெஞ்சில் ஈரமில்லையோ என்றார்கள். பிறகு இருவரும் கழுதையைக் கட்டிக் காவவேண்டி வந்ததாம். இதுதான் உலகத்தாருக்குப் பிரியப்பட நடக்க விரும்புவோர் எல்லாருங் கட்டிக்கொள்ளுகிற மதியீனம். எல்லா மனுஷரையும் உவப்பிக்கிறது என்பது ஒருபோதுங்கூடாது. இன்றைக்கு உங்களை மெய்ச்சியவர்கள் நாளைக்கு உங்களை இக



ழுவார்கள். முன்னாலே சபாஸ் சபாஸ் என்று கைகொட்டுகிறவர்கள், பின்னாலே இழித்து நெளித்துக் கோரணிகொள்ளுவார்கள்.

How prudent to try to please God!

ஆ! இந்த நிலையில்லாத, நேர்மையில்லாத உலக மனுஷரைப் பிரியப்படுத்தத் தேடி மோசம் போவதிலும், அளவில்லாத பிரமாணிக்கமுள்ளவரும், ஒருபோதும் மாறாதவருமான எங்கள் பரிசுத்த தேவனைப் பிரியப்படுத்த வருந்துவது எவ்வளவு நல்ல விமரிசை! வரம்பில்லாத ஞானசாகரமாகிய அவர் "அமரிக்கையோடு நியாயந்தீர்த்து நம்மைச் சங்கையாய் நடத்துகிறார்."* அவருடைய திருச் சமுகத்தில் மதிப்புப்பெறுவது எவ்வளவு தேடுதற்கரிய பாக்கியம்! அவரோ மனிதரைப் போல முன்னொன்றும் பின்னொன்றும் நினைக்கிறவரல்ல; நேற்றொன்று இன்றொன்று ஆகிறவரல்ல. அவரிடத்தில் மகிமை அடைந்தவர்கள் என்றென்றைக்கும் மகிமை அடைந்தவர்களே.

His fidelity to reward us

பின்னும் ஒன்றைக் கவனியுங்கள். மனிதர் நம்முடைய அந்தரங்க எண்ணங்களை அறியார்கள். நாம் ஒன்றைச் செய்யும்போது கொண்டிருக்கிற கருத்தை அறியார்கள். ஆகையால், நாம் நன்மையானதைச் செய்தாலும், சிலவேளைகளிலே இகழுவார்கள். தின்மையானதைச் செய்தாலும், சிலவேளைகளிலே புகழுவார்கள். உள்ளபடி நன்மையாயிருப்பதை அறிய அவர்களுக்குப் போதிய ஞான வெளிச்சம் இல்லாதிருக்கும். யாருக்கு உள்ளபடி புகழ்ச்சி சேரவேண்டியது என்று தீர்மானிக்கத்

* ஞானாகமம் 12; 18

தக்க பூரண விவேகம் இல்லாதிருக்கும். சருவேசுரனே நமது அந்தரங்க எண்ணங்களையும் அறிவார். அவர் நமது இருதயங்களின் கருத்தைப் பரிசோதிக்கிறார். ஆகையால் அவரவரிடத்தில் உள்ள நன்மையை உள்ள உள்ளபடி அறிந்து மதித்துக்கொள்ளுகிறார்; பலன் அளிக்கிறார். உலகம் முழுதும் நம்மை இகழ்ந்தபோதிலும்,நகைத்தபோதிலும், சருவேசுரன் ஒருவர் நமது சிந்தனைகளை வாக்குகளை கிரியைகளை அங்கீகரித்துக்கொண்டால் போதாதா? பதினாயிரம் மனிதர்—என்ன சொல்லுகிறேன்--பதினாயிரம் உலகங்கள், ஒருமிக்கக்கூடி நம்மிற் பிரியவீனப்பட்டாலும், அதற்கு எதிராக, சருவேசுரன் ஒருவர் நம்மிற் பிரியப்பட்டால் போதாதா? சருவேசுரன் ஒருவரை மாத்திரம் நாம் பிரியப்படுத்தக் கடமையுள்ளவர்கள் அல்லவா? அவர்மாத்திரம் நமக்கு நித்திய சம்பாவனையை அருளுகிறவராய் இருக்கக்கொள்ள, அவர்மாத்திரம் நமதுமேலே சகல உரித்துமுள்ள முதலாளியல்லவா?

## III

Human respect dishonours God by preferring the approval of men to that of God

ஆகையாலேதான், கிறீஸ்தவர்களே, முகத்தாட்சிணியமானது சருவேசுரனுக்கு மகா அவமானமென்றதை மூன்றாம் நியாயமாகச் சொன்னேன். மனிதர் முகத்துக்கு அஞ்சுகிறவன் என்ன சொல்லுகிறவனாகிறான்? சருவேசுரன் பிரியப்படாவிட்டாற் போகட்டும். நான் மனுஷரையே பிரியப்படுத்தத் தேடுவேன் என்று துணிந்து சொல்லுகிறவன்போல் ஆகிறான். சகல சீவ அசீவ பொருட்களுக்கும் ஏகாதி கர்த்தர் சருவேசுரனே. படைக்கப்பட்டவைகள் எல்லாவற்றிற்கும் அவரே நாயகர். அவருக்கே சகல உலகமும் அடங்கி நடக்கவேண்டியது. "தளங்களுக்குக் கர்த்தாவான இராசாதி இராசேஸ்வரன் நாமே; சமஸ்த சாதிசனங்களிடத்தும் நமது நாமம் அஞ்சப்படத்தக்க நாமமே" என்று அவருடைய வாக்கியமாக வேதநூல் முழங்குகிறது.* அவருக்கு முன்பாக இராச்சியங்கள் எல்லாம் தூசிபோல் இருக்கின்றன. இராசாக்கள் இல்லாதவர்கள்போலாகிறார்கள். அவருடைய மோட்ச பொற்சிங்காசனத்துக்கு முன்பாக நிற்கிற தூதர்கள், அதிதூதர்கள், பெலவத்தர்கள் முதலான வானோர் கணமெல்லாம் அவரை நடுக்கத்தோடு நமஸ்கரித்துக்கொண்டிருக்கின்றன. முகத்தாட்சிணியம் எனும் துர்க்குணத்தில் அகப்பட்டவன் இப்படிப்பட்ட சர்வலோக நாயகருடைய கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணிக்கொண்டு அல்லவோ மனிதருடைய சித்தத்தை நிறைவேற்றத் தீவிரப்படுகிறான்! சருவேசுரன் நீசச் சிருட்டிகளோடு ஒரு நிரையிலே வைக்கப்படுவது அவருக்கு ஒரு அவமானம். அந்தச் சிருட்டிகளுக்கே முதலிடங்கொடுத்து அவரை ஓர்மூலையில் ஒதுக்கிவிடுவது, ஐயையோ, வேறொரு சொல்லொணாத அவமானமாகிறதே.

இன்னும் பாருங்கள்! சருவேசுரன் தாமே தம்மை நேசிக்கிறவர்களுக்குச் சம்பாவனையாகிறார். "நானே உனது மகாபெரிய சம்பாவனை" † அளவில்லாத சருவேசுரன் தாமே--சகல நன்மையும் நிறைந்து தேங்கி வழிகிற இன்ப சாகரமாகிய அவர்தாமே எமது சம்பாவனை. இப்படி இருக்கிறபோது, அவரை நாம் அனுபவிக்குந் தலமாகிய மோட்ச பாக்கியத்தின் சுகங்களை எடுத்துச் சொல்

* மலக், 1; 11 முதலியன. † ஆதி 15; 1.

லப் பிரயாசப்படுவான் ஏன்? அவைகளைச் சரியாய் எடுத்துச்சொல்ல எவராலுங் கூடாது. மோட்ச பரமானந்தத்தை மனித கண் கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை, இருதயம் உணர்ந்ததுமில்லை.* அந்தத் தலத்தின் பாக்கியம் நித்தியமான பாக்கியம். அந்தப் பாக்கியம் எல்லாம் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிறது. இருக்கும்போது, இவ்வளவு மகத்தான, மனோவாக்குக்கு எட்டாத நன்மைகள் சொற்பம் என்றாற்போலவும், தன்னைச் சற்றுவேளை மெய்ச்சிக்கொள்ளுகிறவர்களுடைய புகழ்ச்சிதான் பெரிதென்றாற்போலவுமே முகத்தாட்சிணியம் பார்க்கிறவன் நடந்துகொள்ளுகிறான். "நல்லது பிரமாணிக்கமுள்ள ஊழியனே, உன்னுடைய கர்த்தரின் ஆனந்தத்திலே பிரவேசிக்கக்கடவாய்"† என்று தன் சிருட்டிகர் சொல்லக் கேட்பதல்ல, நல்லது நீ எங்களைப்போலொத்த ஒரு வீணன்தான், தன் நிச்சய உணர்வின்படி நடக்கத் துணியாத ஒரு பெண்ணன்தான், எங்களுக்காக உன் கடவுளையும் மறுக்க நீ துணிந்தபடியால் கெட்டிக்காரன் என்று மனுஷர்சொல்லக் கேட்பதே அவனுக்குப் பெரிதாகிறது! அம்மட்டா! சருவேசுரன் ஆத்துமத்தையும் சரீரத்தையும் நரகத்திற் தள்ளத்தக்கவராயிருக்க,‡ அந்தத் தண்டனைக்கும் அஞ்சாமல், ஆகக்கூடிச் சரீரத்தைமாத்திரம் ஒருவேளை கொல்லத்தக்க மனுஷருக்கே அஞ்சுகிறான். அதுவும் மனுஷர் தன் சரீரத்தைக் கொல்லுவார்கள் என்றுமல்ல, சற்றே புன்சிரிப்புக்கொண்டுவிடுவார்கள், சற்றே தலை அசைப்பார்கள் என்று பயந்தல்லவோ தன் தேவனின் கட்டளையைக் கைக்கொள்ளாமலிருக்கிறான். ஆ! கிறீஸ்தவர்களே, மட்டிலடங்காத மகி

* 1 கொரி. 2; 9 † மத். 25; 21 ‡ மத். 10; 28



மைப்பிரதாபம் உள்ளவரும், தயைச் சுரூபியும், பரம உபகாரியும், நீதிபரருமாகிய சருவேசுரனை முதல் சங்கியாமல், தெரிந்தெடுத்துக்கொள்ளாமல், அவருக்கு அஞ்சாமல் மனுஷருக்கு அஞ்சி, அவர்கள் முகஸ்துதியையே தேடி மதிப்பது என்பது, நீங்கள் மனதினால் ஒருபோதும் கருதிக்கொள்ளக்கூடாத ஒருபாரதூரத்துரோகம். இதை நீங்கள் இன்னும் கண்டுகொள்ளவில்லையா?

இந்த நீச ஒழுக்கத்தினால், இந்த அக்கிரமத் தேவ அவமான நடக்கையினால், நமது இரட்சணியமாகிய யேசுநாதருக்கு உண்டாகுந் துயர் எவ்வளவு! அவர் நம்மை மகிமைப்படுத்தும் வண்ணம் தம்மைச் சொல்லிமுடியாத அவமான ஈங்கிஷைகளுக்கு உள்ளாக்கினார். நாம் தம்முடையவர்களாய் இருப்போமென்று நம்பி, தம்மில் அன்புகூர்ந்து தமக்காகவே சீவிப்போமென்று நம்பி, தம்மைச் சகலத்திலும் மேலாக மதித்துத் தமக்கே பிரியப்பட வருந்துவோமென்று நம்பி, தமது உண்மையுள்ள சீஷராயிருந்து தமது மகிமையைக் காப்போம் என்று நம்பி நமக்காக மனோவாக்குக்கு எட்டாத நிந்தைகளைச் சகிக்கலானார். மாடு அடையுங் குடிலிலே பரம ஏழையாகப் பிறந்தார். தச்சனின் மகனென்று அழைக்கப்பட்டு, முப்பத்துமூன்று வருஷம் அறியப்படாமல், விளக்கமில்லாமல் சீவியம்பண்ணினார். நீச சேவகர்கள் கையிற் தம்மை ஒப்பித்து, அவர்களால் அடிகளோ, மிதிகளோ, தூஷணங்களோ, கோரணிகளோ எல்லாஞ் சகித்தார். சனேத்திரன் என்னும் யூத குருமார் சபையிலே நாணித் தலை கவிழும்படியாகக் குற்றஞ்சாட்டவும், ஓர் ஊழியக்காரனால் திருக்கன்னத்தில் அறைய

and wounds the loving Heart of Our Lord

வும்பட்டார். முற்றவெளியிலே வஸ்திரம் உரியப்
பட்டு, ஓர் பெரும் சனசமுகத்திலே கற்றாணிலே கட்
டி அடிக்கப்பட்டார். பைத்தியகாரருக்குத் தரிக்கும்
வெள்ளை அங்கியோடு தெருத்தெருவாக இழுத்துக்
கொண்டு போகப்பட்டார். எண்ணிக்கையில்லாத
சனக்கூட்டத்தின் நடுவே, சுயஞ்சோதியான சருவே
சுரனின் ஏக குமாரராகிய இவர், கொலைபாதகனான
வறாபாஸ் கள்ளனிலும் பெரிய குற்றவாளியாகத் தெரி
யப்பட்டு, மரணத்தீர்வை அடைந்தார். கடைசியாக
ஊரெல்லாங்காண, சத்துருக்கள் தலையசைக்க, சன
மெல்லாங் கேலிபண்ண, இருகள்வரின் நடுவே சிலு
வையில் அறைந்து உயர்த்தப்பட்டார். இத்தனை
மானபங்கங்களையெல்லாம், மரியாதையீனங்களையெல்
லாம், பரிசுகேடுகளையெல்லாம் நமது நேசத்தினுற்
பட்டவருக்காக, நாம் ஒரு புன்னகையை ஒருசரசத்
தைப் பொறுக்கமாட்டாமற் போவோமானால், கிறீஸ்
தவர்களே, அவருடைய திருவிருதயம் எவ்வளவாகக்
காயப்படும்! நமக்காக இத்தனை நிந்தாட்சணைகளைப்
பட்டவருக்காக நாம் ஒரு குறு நகைப்பைப் பொறுக்
கமாட்டோமானால், அவருடைய நேசம் நம்மால் எவ்
வளவாக நிந்திக்கப்படுவதாகும்! ஆ! ஆ! ஆண்டவரு
டைய அளவில்லா இரக்கமுள்ள, அன்புமயமான இரு
தயமும் இந்த நன்றிகேட்டைக்கண்டு கடினப்பட்டுப்
போய்விடும். அவர் இதைச் சகிக்கவேமாட்டார்.
இது எனது வாக்கல்ல. திவ்வியநாதர் தாமே துயரத்
தோடு சொல்லிய வாக்கு; நமக்கெல்லாம் பயங்கரமா
ன வாக்கு! அவர் திருவுளம்பற்றுவது: என்னைக்குறி
த்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்
கப்படுவானோ அவனைக்குறித்து மனுஷகுமாரனும்
தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோ



டும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போ
து வெட்கப்படுவார்.* ஐயையோ நிர்ப்பாக்கியமே!
கடைசிநாளிலே என்னுடைய மீட்பர் என்னைக்குறித்
து வெட்கப்படுவாரானால், நான் எங்கே போவேன்!
எனக்காக அவர் மனுஷ குமாரனாய் வந்தார். அதாவ
து: மனுஷனுக்குரிய எளிமையையும் அவமானத்தை
யும் ஏற்றுக்கொண்டார். நானும் அவருக்காக வேண்
டிய வேண்டியபோது அவமானத்தை ஏற்றுக்கொள்
ள ஆயத்தமாயிராவிட்டால், அவர் பிதாவின் மகிமை
யில்வரும்போது, எனக்கு, என் இரட்சணியமாகிய
அவருடைய மகிமையிலே பங்கிராது. என்னுடைய
நன்றிகேட்டினால் கோபம் மூட்டப்பட்டவராகிய என்
நேசமீட்பர் என்னைப்பார்த்து: சபிக்கப்பட்டவனே,
என்னைவிட்டு அகன்றுபோ என்று கோடையிடிக்குச்
சமானமாய்க் கர்ச்சிப்பார்.† ஆ மாற்றக்கூடாத தீர்
வையே! ஆ நித்தியகேடே! மனிதருடைய வெகு
மானப் பிரியமானது அனந்த மகிமைச் சோபனம்
உடையவராகிய சருவேசுரனுக்கு எவ்வளவு அளவி
டக்கூடாத அவமானமாகிறது என்று இப்போது
தான் வெட்டவெளிச்சமாய்த் தெரிகிறதே.

பிரியமானவர்களே, நமது நித்தியகேட்டையே
வருவிக்கக்கூடிய அவ்வளவு பெரியவொரு விக்கின
Summing up
மும் மதிமோசமும் தேவதுரோகமுமாகி
ய இத்தீப மனச்சார்பை நாம் எப்படியோ
களைந்தெறிந்துபோட வேண்டியது. மனி
தர் நன்மையாய்ச் சொல்லியென்ன? தின்மையாய்ச்
சொல்லியென்ன? நம்மை ஒருநாள் நடுத்தீர்க்கப்
போகிறவருடைய திருமுகத்தையே பிரியப்படுத்தத்
தேடுவோமாக. நமது திருவேதத்தின் கடமைகளை

* லூக். 9; 26 † மத். 25; 41

எல்லாம் சகல மனிதருக்கும் முன்பாக அச்சமில்லாமல், கூச்சமில்லாமல் நிறைவேற்றுவோமாக. கோழைநெஞ்சுள்ள சில கிறீஸ்தவர்களைப்போல: நாங்கள் சருவேசுரனை மனதினுள்ளே வணங்கிவருகிறோம் மனதிலேதானே எல்லாம் அடங்கியிருக்கிறது. அப்படியிருக்க வெளிப்பாவனையிலே மனிதருக்கும் இடங்கொடுத்து நடந்தாலென்ன? "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" அல்லவா? என்று சொல்லாதபடி கவனஞ்செலுத்துவோமாக. மனது மாத்திரம் சருவேசுரனுக்கு உரியதல்ல. வெளிப்பாவனைகளும் அவருக்கே முற்றாகக் கீழ்ப்பட்டவைகள். மனதினால் வணங்குகிறோமென்று சொல்லிக்கொண்டு வெளிநடத்தையாற் சருவேசுரனை மறுதலிக்கிறவர்களைப் பார்த்தல்லவோ யேசுநாதசுவாமி: நான் உங்களை அறியேன் என்பேன் என்றார்.* அப்போஸ்தலரும் "நீதியையடைய இருதயத்திலே விசுவசிக்கப்படும் இரட்சணியத்தை அடையவோ வாயினால் வெளியாய் அறிக்கைபண்ணப்படும்" என்று வசனித்தார்.† உள்ளொன்று புறம்பொன்றாய் நடக்கிறவர்களுக்கு அல்ல மோட்ச இராச்சியம். இதை நான் இப்போது விரித்துரைக்க வேண்டியதில்லை.—ஆம், கிறீஸ்தவர்களே, நம்மைப் படைத்தவருக்கு, நமக்கு மோட்ச சம்பாவனையை அளிக்கப்போகிறவருக்கு, நமக்காக நிந்தை அவமானங்களினாலே பூரிக்கப்பட்டவருக்குத் தெட்டத்தெளிவாய், பிரசித்தமாய் ஊழியஞ்செய்வது நமக்கு வெட்கமாகவல்ல, பெருஞ் சிலாக்கியமாக இருக்கவேண்டியது. பெரிய பெரிய பிரபுக்களும் இராசாவுக்குப் பணிவிடைசெய்வதிலே மகிமைபாராட்டுவார்கள். நாமோ சருவேசுரனுக்குப் பணிவிடை

* மத். 25; 12 † ரோமர் 10; 10.



செய்வது, ஒரு அர்ச்சியசிட்டர் சொல்லியிருக்கிறபடி, அரசாளுவதற்குச் சரியாகுமே. ஆகையால், கோழைத்தனமான, சிறைக்கோலமான வெட்கத்தையும், நியாயமில்லாத ஈனப்பயத்தையும் விட்டு, வெளிவெளியாகவும், முழு உலகத்துக்கும் முன்பாகவும் நம்முடைய கர்த்தருக்கு ஊழியம்பண்ணுவோமாக. நம்மை மீட்டவர் எருசலேம் நகர் முழுதும் காண ஒரு அவமானக் கழுமரத்திலே நமக்காகத் தொங்க வெட்கப்படவில்லை. நன்றிகெட்ட பாவிகளாயிருக்கிற நம்மைத் தம்முடைய சகோதரரென்று அழைக்கவும், உரிமை பாராட்டவும் கூசவில்லை. நாமும் அவரை நம்முடைய நாயகரும் மீட்பரும் தேவனுமென்று உலக முழுதுக்குங்காட்டக் கூசாதிருப்போமாக. அவருக்காகக் கொடிய மானபங்கங்களை அடையவேண்டிவந்தாலும் அடைய ஆயத்தமாயிருப்போமாக.

கிறீஸ்தவர்களே, முற்றாக மனந்திரும்பிவிட வெட்கப்படாதிருங்கள். உலகத்தோடு முற்றாகப் பிணங்கிக்கொள்ளவேண்டி நேரிட்டாலும், அது அவ்வளவுக்கும் நன்மையே. இவ்வுலகும் அதின் சாயலும் கடந்துபோகின்றன.* ஆகையால் கடந்துபோகிற இந்தப் பேய்த்தேரை நம்பி ஊழியஞ்செய்வதைவிட்டு நித்தியரும், அழிவில்லாதவரும், அளவில்லாதவருமாகிய அவர் ஒருவருக்கே ஊழியஞ்செய்யத் தொடங்குங்கள். உங்களை அவருடைய ஊழியரென்றுகாட்ட அஞ்சவேண்டாம், அஞ்சவேண்டாம். சிலுவையில் அறையுண்ட உங்கள் அன்பர் ஒருவரைப் பிரியப்படுத்திக்கொண்டாற்போதும். அவரே உங்கள் நித்திய புகழ்ச்சியும் அளவில்லாத மகா சம்பாவனையுமாவார். ஆமென்.

* 1 கொரிந். 7; 31

## தபசுகால ஐந்தாம் ஞாயிறு

# On the Malice of Sin

# பாவத்தின் கொடுமை

*Odisti omnes qui operantur iniquitatem*

ஆண்டவரே அக்கிரமத்தைச் செய்கிற அனைவரையுந் தேவரீர் பகைத்தீர். (சங் 5; 7)

பாவம் எவ்வளவு பெரிய ஒரு தீமை என்றால், உலகத்திற் சம்பவிக்கக்கூடிய எந்த மகா பெரிய கேடும் அதற்கு முன்பாக ஒரு தீமையாகத் தோற்றாது. பாவம் இவ்வளவு பொல்லாதது என்று, கிறீஸ்தவர்களே, நீங்கள் அநேக தடவை பிரசங்கங்களிலே சொல்லக் கேட்டிருக்கிறீர்கள். பாவத்தின் தீமையைப்பற்றிப் பலமுறை புத்தகங்களிலேயும் வாசித்திருப்பீர்கள். ஆனால், பிரசங்கத்தைக் கேட்கும்போது, அல்லது புத்தகத்தை வாசிக்கும்போது இவ் ஏக பொல்லாப்பின்பேரிலே வெறுப்பு எழும்புவது உண்டானாலும், பின்பு வரவர அவ்வெறுப்பு குறைந்து குறைந்து அற்றுப்போகிறது. அதினாலேதான் நமக்கெல்லாம் பெரும் சத்துருவாயிருக்கிற இந்த மகா தீங்கின்பேரிலே இடைக்கிடை தியானித்துப்பார்ப்பது நலமாய் இருக்கும்.

A prayer for light

பாவத்தின் மேலே மெய்யான ஓர் அரோசிகம் உங்கள் மனதிலே பிறக்கச் செய்யக் கூடுமானால் நான் எவ்வளவோ அதிஷ்டசாலியாய் இருப்பேன். ஆனால், கிறீஸ்தவர்களே,



நான் எவ்வளவாக உரத்துப்பேசினாலும், எவ்வளவு பெலமான நியாயங்களைத்தான் எடுத்துக்காட்டினாலும், ஸ்பிரீத்துசாந்து சருவேசுரனுடைய அருளில்லாமல் உங்கள் மனம் அசையுமோ? நெகிழுமோ? உருகுமோ? இல்லையே. ஆகையால் பிரகாசத்தின் ஊறணியாகிய இவரைப்பார்த்துப் பிரார்த்தித்துக்கொண்டே தொடங்குவோமாக.

விசுவாசிகளின் இருதயங்களைப் படிப்பித்தருளினவராகிய தேவனே, பிரகாசத்தின் ஊறணியே சுவாமி, தேவரீரே எழுந்தருளிவந்து உம்முடைய விசுவாசிகளுடைய இருதயங்களுக்கு அறிவைத்தந்தருளும். அடியேனுடைய நாவிலும் இருந்து என்னை நடத்தியருளும். நான் ஓசையிடுகிற வெண்கலம்போலவும், சத்தமிடுகிற கைத்தாளம்போலவும் இராமல், உம்முடைய விசுவாசிகளுக்குப் பிரயோசனம் உள்ளவைகளையே பிரசங்கிக்க அடியேனுக்கு ஒத்தாசை கட்டளைபண்ணியருளும். ஆமென்.

## I

முதன்முதல் பாவத்தில் அடங்கியிருக்கிற நெறிகேட்டையும், தேவ விரோத வைரத்தையும், அவமானத்தையும் பார்ப்போம்.

What is sin?

பாவமாவது என்ன? தேவகட்டளையை மீறுவதே பாவம். தேவனுடைய கட்டளையை மனுஷன் மீறுகிறான். படைத்தவர் சொல்லிய சொல்லைப் படைக்கப்பட்டவன் தட்டுகிறான். இதுதான் பாவம். இதின் கனத்தையும், காத்திரத்தையும், பழியையும், கொடுமையையும் கண்டுகொள்ளத்தக்கதாகத் தேவன் யார் என்றும், மனுஷன் யார் என்றும் அவருடைய கட்டளையை இவன் மீறுகிறதாவது என்னவென்றும் யோசித்துப்பார்க்க வேண்டும்.

சருவேசுரன் யார்? அவரே வானத்தையும் பூமியையும், சந்திர சூரிய நட்சத்திரங்களையும், இவ்வுலகத்திலுள்ள சகலத்தையும் உண்டாகக் கடவதென்ற ஒரேவாக்கினால் உண்டாக்கினவர். அவரே நமது கண் காணுகிறதும் காணாததுமான சகலத்தையும் தம்முடைய உள்ளங்கையிலே வைத்துப் பிடித்திருப்பதுபோலத் தாங்கிக் காப்பாற்றி, சகலத்திலும் பரவினாலும் சகலத்திலும் மேலாக உயர்ந்து, எல்லாம் வல்லவராய் இருக்கிறவர். மழைகளை வருஷிக்கப்பண்ணுகிறவரும், சண்டமாருதங்களை மோதப்பண்ணுகிறவரும், மின்னல்கள் முழக்கங்களுக்குக் கட்டளைபண்ணுகிறவரும் அவரே. காற்றும் கடலும், வெயிலும் மழையும், பனியும் நெருப்பும் அவர் சொற்கேட்டு நடக்கின்றன. அவர், தாம் சிருட்டித்தவைகளின்மேலே கோபங்கொண்டு தம்முடைய நீதியின் கையை அசைத்தாலும், பூலோக மேலோகம் எல்லாம் எரிந்து தீய்ந்து இருந்தவிடமும் தெரியாமல் அற்றுப்போம். அளவில்லாதவராகிய நம்முடைய தேவனின் மகிமைப்பிரதாபத்தை எடுத்துச்சொல்ல அற்ப புத்தியுள்ள மனுஷனால் முடியுமா?

God's infinite majesty

இவ்வளவு மனோவாக்குக்கு அடங்காத மகிமைப்பிரதாபம் உள்ளவராகிய பரலோக பூலோக கர்த்தாவானவர் தாம் கட்டளைபண்ண, மனுஷன் மீறுகிறான். ஐயோ! மனுஷன் என்றால் யார்? சருவத்துக்கும் வல்லவரான கர்த்தராலே ஒருபிடி மண்ணினால் உண்டாக்கப்பட்டு, அவராலேதான் ஒரு ஆத்துமத்தையும் பெற்றுக்கொண்ட பிச்சைக்காரன். பிச்சைக்காரன் என்கிறேன்! ஒரு பிச்சைக்காரன் உங்களிடம் பிச்சைக்கு

and man's littleness



வந்தால், அவனுக்கு ஏதாவது உங்களிடம் உள்ளதிற் கொடுப்பீர்கள். ஆனால் அவனை நீங்கள் உண்டுபண்ணிவிடுகிறதில்லையே. சகோதரனே, நீயோ இருக்கிற இருத்தலைக்கூடச் சருவேசுரனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒரு பஞ்சை. நீ உன் தாயின் வயிற்றில் உதிக்குமுன் அதோ வெளியே கிடக்கிற கல்லிலும் பார்க்க அதிக கேடுகெட்ட நிலையிலிருந்தாய். கல்லு உலகம் உண்டான நாட்டொட்டாவது இருந்துவருகிறது. நீயோ இருபது முப்பது நாற்பது, அல்லது, அறமிஞ்சினால், நூறுவருஷத்துக்குமுன் இருந்ததுமில்லை. உலகத்திலே உன்னைப்பற்றி நினைத்தாருமில்லை. சருவேசுரனே உன்னை அநாதியாக நினைத்துத் தமது அளவில்லாத தயவினால் ஒரு பொருளாக்கி, உனக்கு ஒரு சரீரத்தையும் ஒரு ஆத்துமத்தையும் தந்து ஆளாக்கிவிட்டார். உன்னை உண்டுபண்ணி ஆளாக்கிவிட்டது மாத்திரமோ? உண்டுபண்ணியபின் உன்னை அவர் தாமே தாங்கிப்பிடித்துக் காத்துக்கொண்டு வராவிட்டால், பின்னும் நீ ஒன்றுமின்மையாகி பாழாகவே போய்விடுவாய். பணியக்கிடக்கும் ஓர்கல்லைக் கையில் தூக்கிப்பிடித்தால், பிடித்திருக்குமட்டும் அது மேலே ஒரு கையினுயரத்துக்கு இருக்கும். கைவிட்டாலோ, மறுபடியும் பணியவிழுந்துபோம். இதுபோல, பாழாய்க்கிடந்த உன்னை ஆளாக்கித் தூக்கிப்பிடித்துக்கொள்ளுகிறவர் சருவேசுரன். அவர் தம்முடைய பாதுகாவலென்கிற கையை விட்டாலோ, நீ மறுபடியும் பாழேபாழாகி இருந்த இடமும்தெரியாமல், இன்மையாய்ப் போய்விடுவாய்.

இப்போது, மனுஷா, உன்னைச் சற்றுநேரம் சருவேசுரனோடு ஒத்துப்பார். குடந்தான் தன்னை உண்டுபண்ணிய குயவனோடு தன்னை ஒத்துப்பார்க்கத் துணி

ந்துகொண்டாலும், நீ உன்னைச் சருவேசுரனோடு ஒத்துப்பார்க்கத் துணிவாயா? வேதபுத்தகம் சொல்வதைக்கேள். "உலகத்தின் சாதிகள் எல்லாம் சருவேசுரன் முன்னே ஓர்வாளி தண்ணீரில ஓர்சிறு துளிபோலும், தராசிலேவைத்த சின்னஞ்சிறிய மணற்பொடிபோலும் எண்ணப்படும். இதோ தீவாந்தரம் எல்லாம் கொஞ்சந் தூசிபோல் இருக்கிறது; சகல சனங்களும் ஆண்டவருக்குமுன்னே இல்லாதவைகள்போலாம். ஆண்டவருக்குமுன்னே அவர்கள் ஒன்றுமில்லாமைபோலவும், வியர்த்தம்போலவும் இருக்கிறார்கள்."* இப்படியிருக்க, அவர் சமுகத்திலே உன்னை ஊத்தைக்குள் உதிக்கும் ஒரு புழுவென்பேனோ? அருவருப்பு நிறைந்த பாழ்ங்கிணறு என்பேனோ? என்ன என்பேன்? அப்பா, நீ ஒன்றுமல்ல. நீ சுத்தசூனியம். நீதானோ அளவில்லாத சருவேசுரனுடைய சொல்லை மீறத் துணிகிறவன்!

The unfathomable distance between God and man

கிறீஸ்தவர்களே, சருவேசுரனுடைய கற்பனையை மனம்பொருந்தி மீறுவது என்பது எவ்வளவு வாக்குக்கு அடங்காத மகா பாரதூரமான அக்கிரமம் என்றதைச் சருவேசுரன்தாமே இசையாஸ் தீர்க்கதரிசிவாயாற்சொல்லிய வாக்கினால் கண்டு பிடித்துக்கொள்ளுங்கள். "வானங்களே கேளுங்கள். பூமியே செவிகொடுப்பாயாக, ஆண்டவர் திருவுளம்பற்றுவதாவது: நாம் பிள்ளைகளை வளர்த்து மகிமைப்படுத்தி வைத்தோம், அவர்களோ நமக்கு அவமானம்பண்ணினார்கள். எருது தன்னைக் கொண்டவனை அறியும். கழுதையும் தன் எசமானுடைய தொட்டிலை மறவாது.

Man's duty towards God

* இசை. 40; 15—17



இசிறவேல் சனமோ நம்மை அறிந்ததில்லை, நம்சனம் விளங்கிக்கொண்டதில்லை" என்கிறார்.* கட்டளையை மீறுவது மாத்திரமல்ல, சருவேசுரனை அறியாமலிருப்பதுதானும் மகா பாதகமாம். இசிறவேல் சனமோ நம்மை அறிந்ததில்லை. வானங்களே கேளுங்கள். பூமியே செவிகொடு. ஏனென்றால், இப்படிப்பட்ட துரோகம், அதாவது: மனிதன் தன்னைப் படைத்துப் பிள்ளைபோலக் காத்துவருகிறவரை அறியாதிருக்கிறதாகிய துரோகத்தை வானங்கள் காணவும் கேட்கவும் கூடுமானால் அவைகள் ஏங்கித் திகைத்து நிற்கும். பூமியுங் கோபங்கொண்டு பதறும். ஆண்டவர் உத்தரவுகொடுத்தால், சகல சிருட்டிகளும் எழுந்து இத்தனை துரோகியான மனுஷனை அமுக்கி நசுக்கி நிர்மூலமாக்கிவிடும். ஆ! கிறீஸ்தவர்களே, சருவேசுரனை அறியாமலிருக்கிறதே அவ்வளவு துரோகமானால், அறிந்தும் மனம்பொருந்தி அவருடைய கட்டளையை மீறுவது எவ்வளவு மகா மகா பாரப் பழியோ?

தேவகட்டளையை மீறுவது என்றால் என்ன? சருவேசுரன் தாம் படைத்த மனுஷன் நித்திய சீவியத்தை அடைந்து உய்யத்தக்கதாக அவனைப்பார்த்து: கொலைசெய்யாதிருப்பாயாக. மோகபாவஞ் செய்யாதிருப்பாயாக. களவு செய்யாதிருப்பாயாக. பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. பிதாவையும் மாதாவையும் சங்கிப்பாயாக என்று திருவுளம்பற்றுகிறார்.† மனிதனோ மாட்டேன் என்கிறான். வானத்திலே உள்ள சந்திர சூரிய நட்சத்திரங்களும், காற்று மழைகளும் ஆண்டவர் திருவுளம்பற்றினபடியே அமைந்து நடக்கின்றன. பட்சிகள் மிருகங்கள் மரங்கள் எனும் சராசரங்

The sinner defies God

* இசை. 1; 2,3. † லூக் 18; 20

கள் எல்லாம் அவர் இட்ட ஒழுங்கு தவறாமல் ஒழுகுகின்றன. மனிதன்மாத்திரம் தனக்கு அளவில்லாப் பரம உபகாரியானவர் கொடுத்தருளிய மனச்சுயாதீனம் என்கிற வரத்தினால் கருவங்கொண்டு, "நான் அமையேன்" என்கிறான்.* அவர் தமக்கு ஊழியம்பண்ணக்கொடுத்த கைகளால் பாவக்கிரியைகள் பண்ணுகிறான். அவர் தம்மைநோக்கி உயர்த்தக்கொடுத்த கண்களால் விலக்கப்பட்ட மோசமான பார்வைகளைப் பார்க்கிறான். அவர் தம்மை அறியும்படி கொடுத்த புத்தியால் சூழ்ச்சமாய்ப் பாவஞ்செய்யும் வழிகளைத் தேடுகிறான். தான் ஒருநாள் இறந்து அவரிடம்போகவேணுமே, தன்னை அவர் ஒருநாள் சிங்கேற்றுக்குச் சமானமாய் நின்று நீதிநெறியோடும், கோப உக்கிரமத்தோடும் நடுத்தீர்ப்பாரே. அவர் இப்போதும் தன்னைநோக்கி விழித்தகண் சிமிட்டாதிருக்கிறாரே என்று அறிந்தும், அவருடைய சொல்லைத் துணிந்து மீறுகிறான். தனக்கு மனம்போன கெட்ட இன்பத்தின் மேலே அவனுக்கு எவ்வளவு ஆவேசமும், அதைத் தேட வேண்டாமென்று கட்டளைபண்ணியவர்பேரிலே எவ்வளவு கருவியமும் உண்டென்றால், கூடுமானால் அவரை அவருடைய தேவ பத்திராசனத்திலே நின்று இழுத்துக் கீழேவிழுத்தவும், தன்னாற் கூடுமானால் அவரையும் அழித்து அதம்பண்ணிவிடவும் பிரியப்படுவான். ஆ! ஆண்டவரே! அடியேன் நிர்ப்பாக்கியமாய் இதற்குமுன் சிலவிசை பாவஞ்செய்தபோது தேவரீருக்குப்பண்ணிவிட்ட சொல்லிமுடியாத அவமானத்தை நினைந்து நினைந்து தேம்பித்தேம்பி அழுதுவருகிறேன் சுவாமீ. ஐயோ பிதாவே! நீதியுள்ள கர்த்தாவே! தாவீதென்கிற இராசா தேவரீரு

* யெரேமியாஸ் 2; 20



க்கு ஒருதரம் பாவதுரோகம்பண்ணினதற்காகத் தமது சீவியகாலமெல்லாம் இராக்காலந்தோறும் தம் கட்டிலைக் கண்ணீரால் நனைத்துவந்ததுபோல நானும் என் கண்ணீரால் என் பாயை நனைத்துவர எனக்குத் தருபவரார்?

இன்னும், தேவகட்டளையை மீறுவதென்றால் என்ன? நீசமனுஷனானவன் சருவேசுரனையும் அவராற் படைக்கப்பட்ட ஓர் நீசப் பொருளையும் ஒப்பிட்டுப்பார்த்து—தராசிலே நிறுத்துப் பார்த்து, படைக்கப்பட்ட பொருளே வேண்டுமென்று கொள்ளுகிறான்; படைத்தவர் வேண்டாமென்று தள்ளுகிறான்.

and drives Him away from his heart

அனந்த கருணையுள்ள பிதாவாகிய சருவேசுரனுக்குத் தான் இனிப் பிள்ளையல்ல என்று முடிவு கட்டிவிடுகிறான். அம்மட்டோ! பாவி தன்னை மீட்ட அளவில்லாத இரக்கமுள்ள யேசுநாதரை, யூதர் சிலுவையில் அறைந்ததுபோலத் தானும் அறைகிறான். அவரை மிதித்து அவருடைய திரு இரத்தத்தையும் அவமாக்குகிறான் என்று அர்ச். சின்னப்பர் எழுதியிருக்கிறார்.* அம்மட்டோ! இல்லை இல்லை. தன்னுடைய இருதயத்திலே சமாதான இராசாவாக வீற்றிருந்த ஸ்பிரீத்துசாந்துவைப்பார்த்து—அந்த அளவில்லாத அன்பின் சுரூபியை விளித்து: போம் போம், பிசாசுக்கு இடங்கொடும். நீர் இனி எனக்கு இராசாவல்ல, நான் இதோ பிசாசுக்கு அடிமையாய்ப் போகிறேன் என்று, ஆ! கொடுமையே! துணிந்துசொல்லி, இவ்வளவு அவ்வளவு என்று எவராலும் மதிக்க ஒண்ணாத மகா தேவ அவமானத்தைப்பண்ணுகிறான்.

* எபி 10: 29

Sin is the greatest insult to the Almighty

ஐயோ! என்னென்று சொல்லுவேன்! சருவேசுரனுக்குப் பாவத்தினாலே வருகிற அவமானத்தை, பங்கத்தை எப்படி உங்களுக்குச் சித்திரித்துக்காட்டுவேன்! அளவில்லாத சருவேசுரன் எவ்வளவு பெரியவரோ, நீச மனுஷன் எவ்வளவு அற்பனோ, அவ்வளவுக்கும், அந்த அவமானம் பாரதூரமான அளவில்லாத அவமானமாகிறதே. பாவத்தினால் விளையும் இந்த அவமானம் எப்படிப்பட்டதென்றால், சருவேசுரன் மாற்றம் அடையக்கூடியவராயிருந்தால், அதினால் அவர் மாறி இடைந்து அளவில்லாத துயர கஸ்தி வருத்தத்துக்கு உள்ளாகிவிடுவார் என்று வேதசாஸ்திரிகள் சொல்லுவார்கள். பாவந்தான் சருவேசுரன் சகிக்கமாட்டாத பெருந்தீமை. அதை அவர் தம்முடைய பரிசுத்த சுபாவத்தின் சண்டவேகமெல்லாங்கொண்டு பகைக்கிறார். பாவமுள்ள ஆத்துமத்தைக் காண்பது இனிமேல் இல்லையென்ற அசுத்த அருவருப்பைக் கண்டு, துர்நாற்ற வெடுக்கை மணந்து உவாந்தியெடுக்கவருவதுபோலிருக்கும். சாவானபாவம் உள்ளவன் வெளிக்கு மேனி மினுக்கிப் பட்டுப்பட்டாவளிகளைத் தரித்து ஊசாடித் திரிந்தாலும், உள்ளே இருதயத்தைச் சோதிக்கிற ஆண்டவருக்கு அவன் பொறுக்கமுடியாத அரோசிக துர்நாற்றம்வீசி வெடித்து ஊனம் வடிகிற பிணத்திலுங் கேடு. பாவமுள்ள பெண் புறத்தியிலே பூணாரம் பூட்டிப் பொற்சரிகைப் பீதாம்பரப் பட்டு உடுத்து, வாஷங் கமழுகிற முட்டாக்கிட்டு, பிலுக்கிக் குலுக்கிவந்தாலும், ஆண்டவருக்கு அவள் ஆயிரம் நரக அசுத்த பாதாளத்திலும் அதிக அருவருப்பு. சருவேசுரன் தமது நீதியை மாத்திரஞ் செலுத்துவாரானால், அவரிடத்திலே இரக்கம் என்கிற இந்தமகா இனிமையான, உருக்கமான லட்சணமில்லாதிருந்தால் ஓர் ஆத்துமம் ஒருசாவானபாவஞ்செய்யத் துணிந்தவுடனே, அதை இப்போதுள்ள நரகத்திலும் அதிக கொடூரமான பதினாயிரம் நரகங்களிற்போட்டு, எண்ண நினைக்கக்கூடிய சகல வாதைகளையும் அதற்கு ஒருமிக்கப் பண்ணினாலும், அவருக்குப் பாவத்தினால் வந்த அவமானம் நீங்காது; பாவத்தின்மேல் அவருக்கு உள்ள பகை தீராது. "ஆண்டவரே! அக்கிரமத்தைச் செய்கிற சகலரையும் தேவரீர் பகைத்தீர்"



## II

Sin punished in Angels

பாவத்தின் கொடுமையை இன்னும் நன்றாய் உணர்ந்துகொள்ளத்தக்கதாக, அதினால் வந்த மாற்றொண்ணாக் கேடுகளையும் சிந்திக்கவேண்டும். கிறீஸ்தவர்களே, இதோ நரகபாதாளத்திலே மனதினால் இறங்கிப் பார்ப்போம். அங்கே ஆதிதொட்டுக் கிடந்து வேதனைப்படுகிற பிசாசுகளைக் கேட்போம். இவர்கள் இவ்வளவு பயங்கரமாகக் கூச்சலிடுகிறதற்குக் காரணம் என்ன? இந்தக் கூளிகள் ஏன் நெருப்போடு நெருப்பாய் எரிந்து அபய சத்தமாய்க் குளறுகிறார்கள்? இவர்கள் யார்? இவர்களை நீதியும் இரக்கமும் உள்ள சருவேசுரன் இப்படியே, இந்த நிலைபரத்திலேதானே படைத்து விட்டாரோ? இல்லையில்லை. இவர்கள் முன்னே பாக்கியம்பொருந்திய, பிரகாசமுள்ள, அழகு சோபனம் நிறைந்த சம்மனசுக்கள். இவர்களுக்குத் தலையான லூசிப்பர் என்ற மனோரூபி ஆயிரம் சூரியரிலும் அதிக காந்தி அழகு நிறைந்த ஒருசிருட்டி. இந்த லூசிப்பர் சம்மனசு தன்னுடைய அழகைத் தானேபார்த்து அகங்காரங் கொண்டு: நான் சருவே

சுரனைப்போல் இருப்பேன் என்று ஒரு பாவ எண்ணங்கொண்டது. இச் சம்மனசோடே இன்னும் அநேக சம்மனசுக்களும் சேர்ந்துகொண்டார்கள். இவர்கள் இந்தப் பாவ எண்ணங் கொள்ளவே, பரிசுத்த சருவேசுரன் இதைப் பொறுக்கமாட்டாமல், உடனே மின்னலிலும் அதிக வேகமாய், லூசிப்பரையும், அவனோடுசேர்ந்த சம்மனசுக்களையும் நரகபாதாளத்திலே தள்ளிவிட்டார். சருவேசுரனுடைய பாரிசமாய் நின்ற மிக்கேல் சம்மனசும் அவரோடு சேர்ந்த இலட்சாதி இலட்ச வானோர் கணங்களும் நடுநடுக்கத்தோடு பயந்து நின்றார்கள். கர்த்தர் கொண்ட உக்கிர கோப அக்கினியின்முன்னே தாங்கள் எப்படி எரிந்து தீய்ந்துபோகாதிருந்தார்களோ என்று பிரமித்து நின்றார்கள். லூசிப்பருக்கும் கூட்டாளிகளுக்கும் இனி மீட்பில்லை. இன்றுதொட்டு இன்னும் இலட்சாதி இலட்ச, பிரளயாதி பிரளய வருஷங்கள் உருண்டுபோன பின்னும், இந்தக் கெட்ட சம்மனசுக்கள் நரகக் குழிக்குள்ளே கிடந்து ஊளையிட்டுக்கொண்டே வரவேண்டும். எத்தனை கோடி சம்மனசுக்கள் பாழாய்ப்போனார்கள்! ஒரு பாவத்தால், ஒரே ஒருபாவத்தால். ஓ! ஆண்டவர் பாவத்தின்பேரிற் செலுத்தும் அகோர நடுத்தீர்வையே!

and in the human race

பின்னும், இந்த உலகத்தை நோக்கிப் பாருங்கள். இங்கு எவ்வளவு துயரங்கள்! மனஸ்தாபங்கள்! ஆருட்டங்கள்! எவ்வளவு அகோரமான பயங்கர வியாதிகள்! எத்தனைபேர் இந்தவேளையிலே தானே சாகிறார்கள்! எத்தனைபேர் மரணப்படுக்கையிற் கிடந்து அலந்தலைப்படுகிறார்கள்! எத்தனை பேர் பருக்கைக்கு வழி இல்லாமல் வயிறு ஒட்டிக் காய்ந்து சிரட்டைக் கையோடு



தெருநீளந் திரிகிறார்கள்! எத்தனை கைம்பெண்சாதிகள் துந்தி இருக்கக் கோடியும் இல்லாமல் கூச்சலிடுகிறார்கள்! எத்தனை அநாதபிள்ளைகள் பசியால், தாகத்தால் மெலிந்து வாடி உயிர்விடுகிறார்கள்! ஐயையோ! இன்னும் எவ்வளவு நிர்ப்பந்தம் இந்த உலகத்திலே உண்டு! ஆனால், இந்த உலகத்திலும் நிர்ப்பந்தப்பட்டு மறு உலகத்திலும் நித்தியமாய் நெருப்பில் வேகத்தக்கதாக, ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு, கோபங்கள் தாபங்கள், சண்டைகள் சச்சரவுக்களுக்கு இரையாகி, பாவத்துக்கு விலைப்பட்டு, அக்கியான மார்க்கங்களிற் சிக்குண்டு கிடக்கிறவர்களைப்பற்றி என்ன சொல்லுவோம்? இப்படிப்பட்ட அக்கப்பாடெல்லாம் மனுஷருக்கு வந்ததேது? பிணியும் சாக்காடும், ஆசாபாசங்கள் கிரமந்தப்பி மீறி எழும்புவதும் ஆகிய இந்தக் கேடுகள் மனுக்குலத்துக்கு உண்டானது எப்படி? இதை இப்போது இங்கு எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? ஆதாம் என்று ஒருவரையும் ஏவாள் என்று ஒருத்தியையும், அளவில்லாத சருவேசுரன் உண்டாக்கி, பரிசுத்தமும் பாக்கியமும் உள்ள ஒரு நிலைபரத்திலே வைத்தார். அவர்களுக்கு ஒரே கட்டளையைக்கொடுத்தார். ஆதாம், இந்தமரத்தின் கனியை மாத்திரம் தின்னாதே என்றார். ஆனால் எங்கள் ஆதிப்பிதாவாகிய இவர் பிசாசின் அணாப்புதலிலே எடுபட்டு, அதை ஏவாளிடம் வாங்கித் தின்கிறார். நடுங்கிக்கொண்டு, பதறிக்கொண்டு, பாவமென்று அறிந்துகொண்டு வாங்கி வாயிலே வைக்கிறார். இதோ சாபம் தலைமேல் விழுந்துவிட்டது. ஐயோ பழியே! பாரப்பழியே! உடனே, பூலோக நந்தாவனத்திலே நின்று துரத்தப்படுகிறார். மண்ணால் உருவாக்கப்பட்டாயே மனுஷா, நீ மண்ணாய்ப்போவாய், செத்துப்போவாய்.

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"

உன் நெற்றியினின்று வெயர்வை வடியக் கொத்தி உழுது பாடுபடுவாய். பூமியும் உன்னோடு எதிர்த்து நிற்கும். வானமும் உன்னைச் சுட்டு எரிக்கும். மிருகங்களும் உன்னைத் தீண்டவரும், பட்சிக்கவரும். உன் மனைவி அம்பாயமாய்ப் பிரசவவேதனைப் படுவாள். உன் ஒரே பாவத்துக்காக உன் பிள்ளைகள் எல்லாருக்கும் இதோ மோட்சக் கதவு பூட்டப்பட்டது. அவர்களுஞ் சாவார்கள் என்று ஆயிரம் வானங்கள் ஒருமிக்கக் கோடையிடி இடித்ததுபோலவும், பதினாயிரம் சமுத்திரங்கள் அலையெடுத்துக் குமுறிக் கொந்தளித்ததுபோலவும் சருவேசுரன் சொன்னார். இந்த வார்த்தையைக்கேட்டுத் திரிபுவனமுங் கிடுகிடுத்து, நட்சத்திரங்கள் நிலைதப்பி, பூமிபிளந்து, ஆதாமும் தீய்ந்து கரிந்து போகாதது எப்படியென்றால், நமக்காக வந்து நமது பழியைத் தமது திருத்தோளிற் சுமந்துகொள்ளச் சித்தங்கொண்டவருடைய முகத்துக்காகத்தான் கிறீஸ்தவர்களே. ஐயோ! பாவத்தின் நிர்ப்பாக்கிய கேடே!

ஆனாலும், சம்மனசுக்களுக்குச் சனுவுபண்ணாமல், மனுஷருக்குத் தயவு காட்டத் திருவுளமான தேவ இரக்கமே, மனுஷனுடைய பழியைச் சுமக்கமானிடச் சட்டை சாத்திவந்த எங்கள் அமிர்தயேசுநாதரே! உமக்கு என்ன விதமாய்த் தோத்திரஞ் சொல்லுவோம்! எப்படி உம்மைப் புகழ்ந்து முடிப்போம்!

Malice of sin revealed in our Lord's sufferings

சருவேசுரன் தம்முடைய திருச்சுதனாகியவர் ஓர் காலம் மனுஷனாய் வந்து மனுஷருடைய பாவப்பழியைச் சுமக்கப் போவதற்காக, மனுஷர் சகலரையும் நரகத்திலே தள்ளாமலும், பூலோக பரலோகம் எல்லாவற்றையும் நிர்மூலமாக்காமலும் விட்டார் என்றேனே. அந்தத் திருச்



சுதன் மனுஷனாய்ப் பிறந்தபோது நீதிபரராகிய பிதா பாவத்துக்காக அவரிடம் வாங்கிவிட்ட பழியைப் பாருங்கள். இதோ பரிசுத்தத்தனமே உருவமாகக் கொண்ட தேவ திருச்சுதனானவர், இரண்டு ஈனக் கள்வர்களுக்கு நடுவே, தாமும் ஒரு கள்வன்போலக் கழுமரத்திலே தொங்குகிறதைப் பாருங்கள். உச்சிநின்று உள்ளங்கால்பரியந்தம் அவரிலே காயப்படாத பாகமில்லை. திருத்தலையைப் பார்த்தால், எழுபத்திரண்டு கூரிய முட்கள் இழைத்த முடி பதித்து அழுத்தப்பட்டு, எழுபத்திரண்டு இரத்த ஊற்றுக்கள் திறபட்டிருக்கிறது. திருமுகமண்டலத்தைப் பார்த்தால், வீங்கி அதிர்ந்து இரத்தக்கறை பிடித்து, திருக்கன்னம் புண்ணாயிருக்கிறது. திருக்கரங்களைக் கால்களைப் பார்த்தால், நீண்ட பாரிய இருப்பாணிகளால் கிழிபட்டிருக்கிறது. திருத்தேகத்தைப் பார்த்தால், கற்றூணிற் கட்டுண்டுபட்ட ஐயாயிரத்துச் சில்வான கசை அடிகளால் பிளந்து, தசை சிதறுண்டு எலும்புகள் தோற்றப்படுவதாய் இருக்கிறது. திருவிலாவைப் பார்த்தால், அதுவும் ஈட்டியால் ஊடுருவிப் பீறப்பட்டிருக்கிறது. திருமேனி முழுதையும் பார்த்தால் மூட வஸ்திரமின்றிச் சகல சனமும் பார்த்து நகைக்கத்தக்க அவமான கோலமாய்த் தொங்குகிறது. திவ்விய குருவைச் சகலரும் கைவிட்டுவிட்டார்கள். துஷ்ட யூதர்கள் நையாண்டி பண்ணிக் கோறணிகொள்ளுகிறார்கள். சேவுகர் சரசம் பண்ணுகிறார்கள். தேவபிதாவும் கை நெகிழ்ந்து விடுகிறார். மனுஷர்பேரில் மனம் இளகும்படியாகத் தமது ஏக பிரிய குமாரனுக்கு இளகா நெஞ்சு காண்பிக்கிறார். ஐயோ பாவத்தின் அகோரமே! தேவபிதா இவ்விதமாய் உனக்காகத் தம்முடைய திவ்விய சுதன் கையிலே பழிவாங்கு

கிறாரே. ஆ! யேசுவே, தேவரீர் உமது இரத்தமெல்லாம் துளிதுளியாய்ச் சிந்தி, கள்ளர் நடுவே மகா நிந்தை அவமானத்துக்கு இலக்காகத் தொங்கினதைக் கண்டாவது தேவபிதா இரங்கினாரில்லையே. அவர் இன்னும் உம்மைக் கடைசிபரியந்தம் கைநெகிழ்ந்திருக்க, உமது ஆத்துமம் வரவர அதிக சோபசந்தாபவியாகுல சாகரத்திலே அமிழ்ந்தினதினாலே, தேவரீர் ஆகாயமும் பூமியும் அதிர உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு: என்பிதாவே! ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர் என்று வசனித்து, இந்தக் கண்ணராவியின் நடுவே உயிர்விட்டீரே.

Conclusion

ஐயோ பாவிகளே, உங்கள் பாவக் குரோதத்தின் பாரதூரத்தை நீங்கள் இன்னுங் கண்டுபிடிக்கவில்லையோ? இத்தனை கண்டிப்பான உத்தரிப்பைத் தமது பிரிய குமாரனிடம் கேட்கிற பிதா அதை எவ்வளவாகப் பகைக்கிறார் என்பதை நீங்கள் அறிவதில்லையோ? இன்னும் பாவத்தைச் செய்வீர்களோ? இன்னும் பாவத்திலே நிலைகொள்வீர்களோ? முன்னே கோர், டாதன் என்பவர்களையும் அவர்களோடு சேர்ந்த இருநூறு கலகக்காரரையும் பூமி வாய்திறந்து விழுங்கியதுபோல, பாவிகளே, உங்களையும் விழுங்காதிருக்கிறது தேவ இரக்கம்; யேசுநாதர்பட்ட பாடுகளைப்பார்த்துச் செய்கிற இரக்கம். சுவாபத்துக்கு விரோதமான மோகபாவத்திலே பழகின சோதோம் கொமோறு தேசத்தவர்களை நெருப்பு மழையினாற் சுட்டெரித்ததுபோல, பாவிகளே, உங்களையும் இதுவரைக்கும் சுட்டெரியாதிருக்கிறதும் தேவ இரக்கம். ஓசா என்றவன் வாக்குத்தத்தப் பேழையைத் தொட்ட உடனே விழுந்து சாகப்பண்



ணினதுபோல, பாவிகளே, உங்களையும் நீங்கள் பாவங் கட்டிக்கொண்ட வேளையிலேதானே சாகப்பண்ணாமலிருந்ததும் தேவ இரக்கந்தானே. ஆனால், எம்மட்டுக்கும் சருவேசுரன் பொறுதியாயிருப்பார்? அவருக்கு அளவில்லாத இரக்கம் இருக்கிறதுபோலவே அளவில்லாத நீதியும் உண்டல்லவோ! ஓ பாவிகளே! நீங்கள் ஒரு பொய்யான சமாதானத்தோடு இவ்வுலகத்தில் வாழுகிறீர்கள். ஆனபடியால், கேடொன்றும் இல்லையென்று எண்ணாதேயுங்கள். உங்களைத் தேவன் தண்டியாமல் விட்டுக்கொண்டு வருகிறதே அவருடைய மகா உக்கிர கோபத்தின் அடையாளம் என்றதை அறிந்துகொள்ளுங்கள். நீங்கள் நாலு மனுஷரைப்போல ஓடியாடித்திரிவீர்கள், ஆனால் உங்கள் தலைமேல் ஓங்கின சர்வவல்லமையுள்ள கரத்துக்குத் தப்பிக்கொள்ளவே மாட்டீர்கள். சருவேசுரன் வசனித்திருக்கிற திகில் உறுத்தும் வார்த்தைகளைக் கேளுங்கள்: பாவிகள்மேல் நமது கண்களை ஊன்றி நிறுத்துவோம். அதுவும் அவர்களுக்கு நன்மைசெய்ய அல்ல. நிறைந்த தின்மை செய்யவே நமது கண்களை நிறுத்துவோம்.* பராக்கிரம தேவனுடைய இந்தப் பயங்கரமான கண்காணிப்புக்குத் தப்பிக்கொள்ளத் தக்கவனார்!

கிறீஸ்தவர்களே, இன்னும் ஓர் நிமிஷம் நமக்கிருக்கிறது. அதாவது: இப்போது உள்ள இந்த நிமிஷம். வரும் நிமிஷத்தைப்பற்றி அறியோம். ஆனபடியால், செய்த பாவத்தை இப்போதே வெறுத்துவிட்டு ஆண்டவர்பக்கமாய்த் திரும்பிக்கொள்ளக்கடவோம். தம்மோடேகூடப் பாவத்தைப் பகைக்கிறவர்களைக் கர்த்தர் நேசிக்கிறார். அவர் பக்கமாய்த் திரும்புகிறவர்

* அமோஸ் 9: 8

களை இரட்சிக்க ஆயத்தமாயிருக்கிறார். எசேக்கியேல் தீர்க்கதரிசி வாக்கியமாய் ஆண்டவர்தாமே வசனித்ததைக் கேளுங்கள் : "பாவியானவன் சாகவேண்டுமென்றல்ல. அவன் தன் துர்வழியில் நின்று திரும்பிச் சீவிக்கவேண்டுமென்றே விரும்புகிறோம். ஓ இசிராயேல் சனமே, திரும்பு திரும்பு, உன் பாவவழியில் நின்று திரும்பு. நீ சாவானேன்? பாவி எந்தநாளில் தன் பாவ வழியைவிட்டுத் திரும்புவானோ அந்த நாளிலே அவன் பாவம் அவனுக்குத் தீங்குசெய்யாமல், விட்டுவிடுமென்று சொல்லு."* ஆம், கிறீஸ்தவர்களே ஆண்டவர் நமது மனஸ்தாபத்தினால் இளகிப்போகிறவர். அவர் ஒரு கருணையுள்ள பிதா. நாம் நல்ல மனதோடு திரும்பி, மெய்யான துயரத்தோடு பாவசங்கீர்த்தனம்பண்ணினால், நமது பாவங்கள் பொறுக்கப்பட்டுப்போம். நம்மேல் ஓங்கிய கரம் தாழ்ந்துபோம். அடிக்க உயர்த்திய கையால் அரவணைக்கக் கூப்பிடுவார். இப்படியே பாவம் பொறுக்கப்பட்டவர்களாய், இனி, தேவபத்தியோடு கற்பனைகளை அனுசரித்து நடந்து மோட்சபாக்கியம்பெற்று வாழலாம். இந்தப் பாக்கியத்தை நம் ஒவ்வொருவருக்கும் தயாபர சருவேசுரன் தந்தருளுவாராக! ஆமென்.

---

* எசே 33: 11



## On preparation for Holy Communion
## நன்மை வாங்க ஆயத்தம்

Dicite filiae Sion: Ecce Rex tuus venit tibi mansuetus sedens super asinam Et pullum filium subjugalis.

இதோ உன் இராசா கோளிகைக் கழுதையின்மேலும் நுகத்தடியிற் பூட்டப்பட்ட அதின் மறியாகிய குட்டியின்மேலும் ஏறிச்சாந்தமுள்ளவராய் உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்.

(மத். 21 ; 5)

இன்றுகாலை, எங்கள் ஆண்டவர் தம்முடைய தேவ இராச மகிமைக்கு உரிய வைபவங்களோடு ஒட்டோலக்கமாய் எருசலேம் பட்டினத்திற்குள் பிரவேசித்த மங்களத்தைக் கொண்டாடினோம். நமக்காகக் கொல்லப்பட மானுடவேஷம் பூண்டுவந்த தேவசெம்மறிப்புருவையானவர், தாம் மகா குரூரமான வேதனைகளோடும் அவமானங்களோடும் கொலையுண்ணுவதற்கு ஆறு தினங்களின்முன் தம்மை மரணத்துக்குள்ளாக்கும்படி கூரவையிடப்போகிற அந்தச் சனங்களாலேதானே ஸ்தோத்திர கானங்கள்பாடி வாழ்த்தவும், மேலான வெகுமான ஆசார உபசாரங்களோடு வரவேற்கவும்படச் சித்தமானார். அந்தச் சந்தோஷ

Our Lord's triumphal entry into Jerusalem

கரமான ஞாயிற்றுக்கிழமையன்று ஆண்டவர்: இதோ உன் இராசா கோளிகைக் கழுதையின்மேலும், நுகத்தடியிற் பூட்டப்பட்ட அதின் மறியாகிய குட்டியின் மேலும் ஏறிச் சாந்தகுணமுள்ளவராய் வருகிறாரென்று சீயோன்குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்பதாகத் திருவேத புத்தகத்திலே எழுதப்பட்டபடியே, தமது சீஷர் ஓர் கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்துவிட, அதின்மேல் எழுந்தருளிப் பட்டினத்தை நோக்கிப் போகலானார். போகிற சமயத்திலே பிதாவாகிய சருவேசுரன் தமது திருச்சுதனை இன்று சகல சனங்கள் முன்னும் மகிமைப்படுத்திக்காட்டத் திருவுளமானதினால், ஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலினாலே, யூதசனங்களுடைய உள்ளங்கள் அருண்டு, சரீரங்கள் புளகாங்கிதமாகி, சொல்லமுடியாத மகிழ்ச்சியால் நிறைந்து சமாதான பிரபுவாக எழுந்தருளிவருகிற எங்கள் ஆண்டவரை எதிர்கொண்டு, தாங்கள் அணிந்திருந்த உத்தரியங்களைக் கழற்றி அவருக்கு நிலபாவாடையாய் விரிப்போரும், குருத்துக்களையும் தளிர்களையும் வெட்டி வழியிற் பரப்புவோரும், தேவனே இராயனே என்று வாழ்த்துவோரும், ஓசன்னா ஓசன்னா என்று ஆர்ப்பரிப்போருமாய் பின்னும் முன்னும் புடைசூழ்ந்து நடந்து செயமங்கள கொண்டாட்டம் பண்ணினார்கள். எங்கள் இரக்கமுள்ள யேசுநாதரோ பட்டினத்தை முடுகி வரும்போது அதைப் பார்த்து அழுதார்.*

பிரியமான கிறீஸ்தவர்களே, இந்தத் திவ்வியமான சம்பவத்திலே ஒரு ஞான இரகசியம் அடங்கியிருக்கிறது. அவருடைய பூலோக சஞ்சாரத்தில் விளங்கின சகல சீவிய வரலாறுகளும் இப்படியே

* மத். 21, லூக். 19: 41



நமக்கு அருமையான போதனைக்குரியவைகள் என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது இன்றைச் சம்பவத்திலே மறைந்து கிடக்கிற படிப்பனைகளில் ஒன்றை உங்கள்பத்திநிறைந்த கண்களின்முன்பாக விரித்துக்காட்ட விரும்புகிறேன். சீயோன்குமாரத்தி என்று வேத ஆகமங்களிலே அழைக்கப்பட்டது யூதருடைய தலைநகரியாகிய எருசலேம் பட்டினம். எருசலேம் பட்டினத்தைச் சருவேசுரன் பூலோகத்தின் மற்றெல்லாப்பட்டினங்களையும்விட அதிகமாய் நேசித்து, தம்முடைய அதிக தெரிவான வரங்களால் அலங்கரித்து, அதைத் தம்முடைய சொந்தப் பட்டினமென்று அழைத்து வந்தது உண்டு. இந்த நகரம், கிறீஸ்தவர்களே, உங்களுடைய ஆத்துமங்களுக்குக் குறிப்பு. உங்களுடைய ஆத்துமமாகிய பட்டினத்தையே சருவேசுரன் அநாதிகாலந்தொட்டு நேசித்து, தம்முடைய பரம வரப்பிரசாதங்களால் சோடித்து, என்றென்றைக்கும் தம்முடைய இருப்பிடம் ஆக்கப் பிரியங்கொள்ளுகிறார். தேவ குமாரனாகிய யேசுநாதசுவாமி தாம் அன்றொருநாள் எருசலேம்பட்டினப் பிரவேசம்செய்ததுபோல, உங்கள் ஆத்துமமாகிய இந்த உயிருள்ள பட்டினத்திலேயும் பிரவேசஞ்செய்கிறார். முன்னாள் அவர் நீச வாகனமான கழுதையின்மேல் ஏறிவந்தாரே, இப்போது அதிலும் நிசிதமான அப்பக்குணங்கள் என்கிற வாகனத்தில் எழுந்தருளி கிறீஸ்த ஆத்துமமாகிய நகரத்திற் பிரவேசிக்கிறார். தம்முடைய குருமாரைநோக்கி: இதோ உன் இராசா சாந்தமுள்ளவராய் அப்பத்தின் குணங்களிலே எழுந்தருளிவருகிறார் என்று சீயோன்குமாரத்தியாகிய ஆத்துமத்துக்

The Christian soul another Jerusalem

குச் சொல்லுங்கள் என்று திருவுளம்பற்றுகிறார் நம்முடைய அரிய கர்த்தர்.

ஆனால் சமாதானத்தின் இராசாவும் தயவுதாட்சிணியங்களின் பிதாவுமான எங்கள் ஆண்டவரை எல்லா ஆத்துமங்களும் பரிசுத்தமான மனங்களோடு வரவேற்றுக்கொள்ளுவதில்லை. மனோரூபிகள் புடைசூழ எழுந்தருளிவருகிற அவருடைய பிரவேசமும் இரண்டு வகையாயிருக்கிறது. சில ஆத்துமங்களுள்ளே அவர் ஆனந்தப் பூரிப்போடு எழுந்தருளுகிறார். சில ஆத்துமங்களுள்ளே பிரலாப அழுகையோடு பிரவேசிக்கிறார். ஒரு சாரார் சற்பிரசாதம் வாங்குவதினால் இணையில்லா ஆசீர்வாத நன்மைகளை அடைகிறார்கள். ஒரு சாரார் அளவில்லாப் பழிநிறைந்தகேட்டுக்கு உட்படுகிறார்கள். முந்தினவர்களுக்குச் சற்பிரசாதம் வாங்குவது இன்பமும் பாக்கியமுமாகிறது. பிந்தினவர்களுக்கு அது துன்பமும் நிர்ப்பாக்கியமுமாகிறது. ஆ! எவ்வளவு தூர வித்தியாசம்! சிலருக்கு அமிர்த அவுஷதமாயிருக்கிற இந்தத் திவ்விய போசனம் வேறு சிலருக்குக் கொடிய நஞ்சாய்ப் போகிறதே! கிறீஸ்தவர்களே, நீங்கள் எவ்விதமாய் எங்கள் ஆண்டவரை உட்கொள்ளப் போகிறீர்கள்? அவருடைய வரவுக்கு எவ்வித ஆயத்தஞ்செய்யப் போகிறீர்கள்? இதோ சுத்தமாகச் சற்பிரசாதம் வாங்குகிறவர்களின் தன்மையையும், அவர்களுக்குக் கிடைக்கிற நன்மைகளையும் ஒருபக்கத்திலேயும், அபாத்திரமாய் வாங்குகிறவர்களின் துரோகத்தையும் அவர்கள்மேல் இறங்குகிற சாபத்தையும் மற்றப் பக்கத்திலேயும் வைத்து உங்களுக்குக் காட்டச் சற்றே இடங்கொடுங்கள். இரண்டு பகுதியான

Two ways of receiving our Lord



ஆத்துமங்களையும் கண்டு, நீங்கள் எவர்களோடு நிற்கப்போகிறீர்களென்று தீர்மானம் பண்ணிக்கொள்ளுங்கள்.

## I

நேசத்துக்குப் பதில் நேசங்காட்டுகிற ஆத்துமங்கள்—தங்கள் இராசாவுக்கு விசுவாசமுள்ள பிரசைகளாயிருக்கிற ஆத்துமங்கள்—யேசுநாதசுவாமி தங்களுக்குள்ளே எழுந்தருளுவதற்குக் கொண்டிருக்கிற திருச் சித்தத்தை அறிந்தவுடனே, நற்கருணைக் குணங்களுக்குள்ளே வருகிற கர்த்தரை ஆசையினால் எதிர்கொண்டுபோய், புண்ணிய ஒழுக்கமாகிய தங்கள் உத்தரியத்தை விரித்து, பிசாசை வெற்றிகொண்ட செயவிருதுகளாகிய கிளைகளைத் துளிர்களைப் பரப்பிச் சந்தோஷ கோலாகலத்தோடே அவரைத் தங்கள் இருதயமாகிய சீயோன்பட்டினத்திற்குள்ளே வரவழைத்துக் கொள்ளுவார்கள். ஆண்டவர் இவ்வுலகத்திலே சஞ்சரித்த நாட்களிலே ஒருமுறை சக்கேயசு என்ற பாவியின் வீட்டிற்கு எழுந்தருளினபோது அவன் அவருக்கு முன்பாகத் தெண்டனிட்டு நின்று: “ஆண்டவனே இதோ என் ஆஸ்திகளிற் பாதியை ஏழைகளுக்குக்கொடுத்துவிடுகிறேன். நான் யாருக்காவது நட்டம்வருவித்திருந்தால் நாலுமடங்கு இறுத்துப்போடுகிறேன்” என்று மனஸ்தாபமும் அன்பும் விளங்கச்சொல்லியதுபோல* இவர்களும்: “ஆண்டவரே, தேவரீர் மிகவும் அபாத்திரனான என்னுடைய சிறு குச்சுக்குள்ளே பிரவேசிக்கலானீரே. தேவரீருடைய நேசத்துக்காக நான் என் அயலாரை என்னைப் போலவே நேசிப்பேன். தேவரீருக்கும் அவர்களுக்கும் பொருந்தாத சகல பாவப்பற்றுதலையும் விட்டு

* லூக் 19: 8

விடுகிறேன். நான் செய்த மோசங்களை உத்தரிக்கவும் சகல பாவச் சமயங்களையும் விலக்கவும் முழுச் சித்தமாயிருக்கிறேன்” என்று பிரார்த்திப்பார்கள்.

யேசுநாதர் சக்கேயசுவைப் பார்த்து: “இன்றைக்கே இந்த வீட்டுக்கு இரட்சணியம் கிடைத்தது” என்று திருவுளம்பற்றினாரே. அப்படியே இந்நாளிலும் தம்மைப் பத்தியோடு உட்கொள்ளுகிற ஆத்துமங்களுக்கெல்லாம் திருவுளம்பற்றியருளுகிறார். நம்முடைய நேச மீட்பர் உதாரகுணத்திலே பத்தியுள்ள ஆத்துமங்களுக்குத் தோல்வி போகக்கூடியவரா? அவர்கள் அவரைத் தாராளமான அன்போடே தங்கள் இருதயத்தில் ஏற்று உபசரிக்க, அவர் அவர்கள்மட்டில் தாராள மனங் காட்டாமற் போவாரா? ஒருபோதும் இல்லை. முற்காலம் அவரை முகமுகமாய்க் கண்டு உபசரித்தவர்களுக்குக் கிடைத்த சகல ஆசீர்வாத நன்மைகளும் இப்போது சற்பிரசாதத் திரைக்குள் அவரைக்கண்டு உபசரிக்கிறவர்களுக்கும் சம்பூரணமாய்க் கிடைக்கத் தப்பாது.

Jesus truly present in the soul

சற்பிரசாதம் பெற்றுக்கொண்ட பத்தியுள்ள ஆத்துமங்களே, முன்னாள் மூன்றுவருஷமாய் யூதேயா கலிலேயா நாடெல்லாம் சுற்றித்திரிந்து உங்களுக்காக இளைத்து ஆயாசப்பட்ட யேசுநாதரின் தேவ திருச் சரீரம் இதோ உங்கள் ஆத்துமத்தில் வந்திருக்கிறது. எதினின்று வல்லமை புறப்பட்டுப்போய் குருடர் செவிடர் ஊமைகள் திமிர்வாதக்காரர் சப்பாணிகள் முதலிய நோயாளிகளைச் சுகப்படுத்திற்றோ, எந்தச் சரீரத்தின் ஸ்பரிசத்தினால் செத்தவர்கள் உயிர்த்தெழுந்தார்களோ அந்தத் திருச் சரீரம் இதோ உங்கள் உள்ளத்தில் எழுந்தருளியிருக்கிறது.



உலகத்தை ஈடேற்றின திருக்குருதி—உங்கள் பாவங்களைக் கழுவுகிற தெய்வீகமான இரத்தம் முழுமையும் இதோ உங்களுக்குள்ளே பாய்கிறது. அதின் ஒரேயொரு துளி சகல லோகங்களையும் இரட்சித்துப் புனிதமாக்கப் போதியதல்லவோ? மேலும், பாதாளங்களிலே அந்தப் பெரிய வெள்ளிக்கிழமை பின்னேரம் பிதாப்பிதாக்கள் கண்டு மகிழ்ந்ததும், சொல்லிமுடியாத அலங்கிருத சோபனம் உள்ளதுமாகிய எங்கள் ஆண்டவருடைய திரு மனுஷீக ஆத்துமம், இதோ, உங்களுடைய இருதயத்தில் வந்திருக்கிறது. அதின் அளவறுக்கப்படாத நேச அக்கினி, இதோ, உங்களுக்குள்ளேயே சுவாலித்தெரிகிறது. கடைசியாய்ச் சொல்ல வேண்டுமானால், மோசேசு முனிவர் எந்தச் சோதிப் பிரகாசத்தை முகங்கொடுத்துப் பார்த்தால் இறந்துபோவாரென்று, அது கடந்துபோகும்போது ஓர் மலைப்பொந்தில் மறைந்திருந்துகொண்டு பின்புறத்தைக் காணக் கற்பிக்கப்பட்டாரோ, அந்த வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத பரஞ்சோதியாகிய சருவேசுரனின் தேவசுபாவமும் அல்லவோ உங்களிடத்தில் வந்திருக்கிறது! இசையாஸ் என்கிற தீர்க்கதரிசி, ஒருநாள் ஆனந்தமான ஒரு பரவசத்தின் நடுவே, சருவேசுரனுடைய மகிமையைக் கண்டாராம். கர்த்தரானவர் அதி உந்நதமான ஒரு சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அவருடைய சோபனத்தின் பிரகாசம் திசையெங்கும் நிறைந்து பரவியிருந்தது. அவர் திருச் சமுகத்திலே நிற்கிற பத்திச்சுவாலகர் என்கிற சம்மனசுக்களும் அந்தச் சோதியைக் கண்கொண்டு பார்க்கமாட்டாமல் தங்கள் இரெக்கைகளால் முகங்களை மூடிக்கொண்டு: தளங்களுக்குக் கர்த்தரான சருவேசுரன் பரிசுத்தர்

பரிசுத்தர் பரிசுத்தர் என்று உரத்த சத்தமாய்க் கூவி
க்கொண்டு நின்றார்களாம்.* கிறீஸ்தவர்களே, இவ்
வளவு அகோசரமான உன்னத மகிமையுள்ள தான
யேசுநாதருடைய தேவசுபாவமும், நீங்கள் சற்பிர
சாதம் வாங்கும்போது உங்களுள்ளே வந்து வீற்றி
ருக்கிறது. உங்களுடைய இருதயத்தலம் அதினு
டைய மகிமையால் நிறைந்துபோகிறது. எவ்வளவு
ஆச்சரியங்கள்! இவைகளுக்காக நாம் ஆண்டவருக்கு
ஆனந்தக் கண்ணீரினாலும், அச்சம் மேலிட்ட மௌ
னத்தினாலுமல்லாமல் வேறுவிதமாய் ஏற்றபடி நன்
றியறிதல் காட்டுவது கூடாதல்லவோ!

இவ்வளவு அன்போடும் தயாளத்தோடும் தம்
மை முழுதும் ஆத்துமங்களுக்குக் கொடுத்துவிடுகிற
வர்—தம்முடைய மாசில்லாத் திருச் சரீரத்தையும்,
விலையேறப்பெற்ற திரு இரத்தத்தையும், திவ்விய
அழகுவாய்ந்த ஆத்துமத்தையும், தேவ சுபாவத்தை
யும் கூட அவர்களுக்குக் கையளித்
துவிடுகிறவர்—மேலும், அவர்களுக்குச்
செய்யாத நன்மையும் உண்டோ? அளி
த்தருளாத வரப்பிரசாதமும் உண்டோ?

showers His blessings on it.

பெரும் ஆழியாய் நிறைந்திருக்கிற ஓர் தடாகத்திலே
எவ்வளவு தேவையானாலும் அள்ளிக் கொள்ளுவ
தற்கு நீர் உண்டே. அவரவர் கொண்டுபோகும்
பாத்திரத்தின் குறைவே அல்லாமல், தடாகத்தில்
நிறைந்து தேங்கியிருக்கிற தண்ணீரில் பற்றாதிருக்
குந்தன்மை காணப்படாதே. சலம் தேங்கி வழியும்
குளத்தின் மடை எவ்வளவு திறந்துவிடப்பட்டிருக்
குமோ, அவ்வளவு ஏராளமான சலங்கள் வயல்களிற்

* இசை 6;1—3.



பாய்ந்து நீர்ப்பாய்ச்சுமே. ஆகையால் தக்க ஆயத்
தத்தோடும், நேச வேட்கையோடும் ஒருமுறை மாத்
திரம் திவ்விய சற்பிரசாதம் அநுபவித்தாலும், அர்ச்
சியசிஷ்டனாதற்கு அது போதும் என்று வேத
பாரகர்கள் வசனிப்பார்கள். திவ்விய சற்பிரசாதத்
தை "நன்மை" என்றும் "நிறைவேற்றம்" என்றும்
சொல்லுகிறோமே. ஆமாம். அது நமக்குவேண்டிய
சகல நன்மைகளும் அடங்கிய மகா நன்மை. நமது
சகல ஆசைகளினும் நிறைவேற்றத்தைத் தரும் திவ்
திய கருவூலம்.

பத்தியோடு சற்பிரசாதம் வாங்குகிற ஆத்துமங்
களுக்கு, முதன்முதல், புண்ணிய வழியில் வர்த்திப்ப
தற்கு ஞானப்பெலன் உண்டாகும். சகல சக்கிற
மேந்துகளைப்போலவும், அவைகளிலும் விசேஷமாக
வும், இந்தச் சக்கிறமேந்து இஷ்டப்பிரசாதத்தை
அதிகரிக்கின்றது. அதாவது: இதி
னால் ஆத்துமமானது தேவநேசத்
திலும், அதோடு கூடியதாகிய பிறர்
சிநேகத்திலும் வளர்ந்து பெலப்படு
கிறது. இதுதான் விசேஷமாய் ஆத்

By this Sacrament sanctifying grace is augmented

துமத்தைப் போஷித்து வளர்க்கிற சக்கிறமேந்து.
ஆத்துமத்தின் ஞானப் போசனமாகவே ஆண்டவர்
இதை ஏற்படுத்தியருளினார். ஆதலாற்தான் சரீர
வலிமையையும் உறுதியையும் அடைய விரும்புகிற
வர்கள் நல்ல போசனத்தை அடிக்கடியும் ஆசையோ
டும் சாப்படுவதுபோல, தேவசிநேகத்திலே வளரவும்
சுத்தவாளராகவும் விரும்புவோரெல்லாம் இந்தத்
தெய்வீக போசனத்தை ஆவலோடும் அடிக்கடியும்
அருந்திவருகிறார்கள்.

*the uprising of lawless passions are checked*

இந்தப் போசனம், மேலும், கிறீஸ்தவர்களே, ஆசாபாசங்களின் வீறைத் தணியச்செய்து, பிசாசின் மாயத்தை அகலப்பண்ணி, ஆத்துமங்களைப் பாவத்தினின்று காக்கிற ஒரு மாற்று மருந்து. சற்பிரசாதத்தைப் பத்தியோடு வாங்கும் ஒவ்வொரு முறையும் கீழாங்கிஷத்தின் வலி ஒடுங்கும். பரலோக காரியங்களிலே விருப்பமும் ஆசையும் பிறக்கும். எத்தனை பொல்லாப் பாவப் பழக்கக்காரர், சற்பிரசாதம் பத்தியோடு வாங்கிவந்ததினாலே தங்கள் துர்ப்பழக்கத்தின் அடிமைத்தனத்தை வென்று சாங்கோபாங்க நெறியிலே பிரவேசித்திருக்கிறார்கள்! எத்தனை சஞ்சலமான சோதனைகள், தக்க ஆயத்தத்தோடு சற்பிரசாதம் வாங்கின சணமே அகன்றுபோய் விடுகின்றன! ஆத்துமம் சாவான பாவத்தில் விழாமற் காக்கும் சஞ்சீவி சற்பிரசாதந்தானே.

*holy desires are fostered*

திவ்விய சற்பிரசாதந்தானே தேவ ஊழியத்திலே மேலான ஆசைகளையும், சருவேசுரனுக்காகச் சீவனைவிடவும் ஆயத்தமாயிருக்கும் திடவீரியத்தையும் கொடுக்கும் பரம மூலிகை. ஆண்டவருக்காகப் பெரியபெரிய காரியங்களைச்செய்தவர்களெல்லாம், அவைகளைத்தொடங்குவதற்கு ஏவுதலையும், நிறைவேற்றுவதற்குக் கடைப்பிடியையும் இந்தப் பெலவத்தரின் அப்ப மூலமாகவே பிரதானமாக அடைந்துகொண்டார்கள். ஆதித் திருச்சபையின் வேதசாட்சிகள் தங்களைப் பட்சிக்க விடப்பட்ட துஷ்ட மிருகங்களின்முன் அஞ்சாமற்போய் விழவும், முட்சில்லுக்களின் வாதையையும் செந்தீச்சூளையின் அக்கினியையும் சித்திர



வதைப்புக்களின் அகோரத்தையும் பாராமல் எங்கள் அரிய மீட்பரின் திருநாமத்தை இராசாக்கள்முன் அறிக்கையிடவும் பெலன்கொடுத்தது சற்பிரசாதமாகிய அற்புத போசனந்தானே.

*the highest union with God on this earth is effected*

மேலும், இந்தத் தேவதிரவிய அனுமானத்தினாலேதானல்லவோ ஆத்துமங்கள் சருவேசுரனோடு இவ்வுலகத்திலே இனிமேலில்லை என்றபடி அவ்வளவு ஐக்கிய பந்தனமாக இணைக்கப்பட்டு ஒன்றாகுகின்றன! சற்பிரசாதமே விசேஷமாகத் தேவ ஐக்கியத்தின் சக்கிறமேந்து. "நமது மாமிசத்தைப் புசித்து உதிரத்தைப் பானம்பண்ணுகிறவன் நம்மில் வசிக்கிறான், நாமும் அவனில் வாசமாயிருக்கிறோம்."* சருவேசுரனும் ஆத்துமமும் ஒருவரில் ஒருவர் வசிக்கிறதென்ற இந்த ஒற்றுமையைக்காட்டிலும் அதிக நெருக்கமான, ஒன்றிப்பான ஒற்றுமை இம்மையிலுண்டோ? ஆ இதை எப்படி எடுத்துச்சொல்லுவேன்! வேதசாத்திரிகள் சொல்லுகிறபடி, மெழுகோடு மெழுகை உருக்கிவார்த்தால் எப்படியாகுமோ, அப்படியே, ஆண்டவரோடு சற்பிரசாதம் பெறுகிற பத்தியுள்ள ஆத்துமம் ஒன்றாய்ப்போகிறது என்போமோ! நெருப்பில் சிவக்கக் காய்ச்சிய இரும்பு எப்படி நெருப்பைப்போலப் பிரகாசிக்குமோ, அப்படியே, தேவனைத் தன் இருதயத்திலேபெற்று, தேவனுடைய அருட்பிரசாதங்களிலே தோய்ந்த ஆத்துமம் தேவனையேபோல தேவ சுபாவத்திலே பங்குபற்றிப் பிரகாசிக்கும் என்போமோ?— எவ்வளவு ஆச்சரியமான ஒன்றிப்பு சற்பிரசாதத்தி

* அருளப்பர் 6; 5

னால் ஆத்துமம் சருவேசுரனோடு அடைகிற ஒன்றிப்பு! ஆ கிறீஸ்தவர்களே, நீங்கள் யேசுநாதசுவாமியை உங்கள் இருதயங்களிலே எழுந்தருளப்பண்ணிக் கொள்ளும் பாக்கியமுடையவர்களாயிருக்கும்போது உங்களுடைய நீசசுபாவம் ஒருவிதத்திலே மறைந்து காணாமற்போகிறது. உங்களுடைய பெலவீனம் ஞான வல்லமையாகிறது. உங்களுடைய ஒன்றுமில்லா வறுமைத்தனம் செல்வ பாக்கியமாகிவிடுகிறது. உங்களுடைய அறியாமையாகிய இருள் தேவஞானத்தினால் துலங்குகிறது. நீங்கள் தேவ பிதாவுக்கும் மோட்சவாசிகளுக்கும் ஆநந்தமாகிறீர்கள். நித்திய பேரின்பத்தின் அச்சாரத்தை அடைந்துகொள்ளுகிறீர்கள். உங்கள் இருதயமே பரலோக இராச்சியம் போலச் சொலிக்கிறது.

ஆ! எங்களை மட்டின்றி நேசித்தவரான தேவசுதனே, செகமீட்பரே, யேசுநாதரே, தேவரீரைப் பத்தியோடு பெற்றுக்கொள்ளுகிறவர்கள் அடைந்து மகிழும் வரப்பிரசாத பொக்ஷங்களை, ஆபத்துக்கடுத்த சகாயங்களை, உதாரம் விளங்குகிற ஏவுதல்களை, ஞான திடதைரியத்தை, தேவ ஒன்றிப்பின் பந்தனத்தை, சகலவித சம்பன்ன உபகார ஐசுவரியங்களை மனுஷ நாவானது ஒருபோதும் சரியாக எடுத்துச்சொல்ல அறியாது. இந்தப் பரம தேவதிரவிய அனுமானத்தை எங்கள்பேரில் தேவரீர்வைத்த அணைகடந்த, ஆச்சரியமான, மனந்தடுமாறச்செய்கிற அத்தியந்த நேசத்தினால் உண்டாக்கிவைத்ததற்காக அடியோர்கள் தேவரீரைச் சதாகாலமும் தோத்திரித்துப் போற்றிப் புகழ்ந்துவர அநுக்கிரகஞ்செய்தருளும்.



## II

ஆனால் ஆண்டவர் சில ஆத்துமங்களுக்குள்ளே பிரலாப அழுகையோடு எழுந்தருளுகிறார் என்றோமே. பரம தேவாமிர்தமான சற்பிரசாதம் சிலருக்கு கொடிய விஷமுள்ள நஞ்சாக மாறிப்போகிறதென்று முந்தின பிரிவிலே சொல்லப்பட்டதே. இந்தச் சமாதான பிரபுவுக்கு நிஷ்டூரஞ் செய்யும் ஆத்துமங்களும் உண்டா? அப்படிப்பட்ட நிர்ப்பாக்கியர்களிடத்திலும் அவர் எழுந்தருளுவாரா? ஆ கிறீஸ்தவர்களே, சாந்தகுணமுள்ள செம்மறிப்புருவையாகிய எங்கள் கர்த்தர், தம்மை அப்பத்தின் குணங்களிலே மறைத்தருளச்சித்தமான தயவின் நிமித்தமாய் அவரை நன்றிகேடாய், துரோகமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்களும் உண்டு. தங்கள் மரணத் தீர்வையைத் தாங்களே உட்கொள்ளுகிறவர்களும் உண்டு.* பரிசுத்த கர்த்தர் இந்தத் துரோகி ஆத்துமங்களிலே துக்கித்தவராய்க் கண்ணீர்விட்டழுகிறவர்போலப் பிரவேசிக்கிறார். இவ்வளவு துக்கத்துக்கும் அழுகைக்கும் காரணமானவர்கள் யார்? அவர்களுடைய துரோகம் எப்படிப்பட்டது?

Those over whom our Lord weeps

அளவில்லாத இரக்கம் உள்ளவரும், நமது அன்புநிறைந்த பிதாவுமாயிருக்கிற சருவேசுரன் சுபாவமான பெலவீனத்தால் நாம் செய்த பாவங்கள் எவ்வளவு பாரமானவைகளாய், வெட்கங்கெட்டவைகளாய், சதிமானமுள்ளவைகளாயிருந்தாலும், அவைகளையெல்லாம் பொறுத்தருளுவதற்குச் சாதாரண வழியாகப் பாவசங்கீர்த்தனத்தை ஏற்படுத்தியருளினார்.

Sacrilegious Confession

* I கொரிந். 11; 29.

பாவசங்கீர்த்தனத்திலே சுமக்கக்கூடாத பாரங்கள் ஏற்றப்படுவதில்லை. அநுசரிக்கக்கூடாத தபசுகள் கடின ஒறுத்தல்கள் கற்பிக்கப்படுவதில்லை. பிரசித்தமான பங்கங்கள் அபராதங்கள் விதிக்கப்படுவதில்லை. ஆனால், அவரவர் தான்தான் செய்த கனமான பாவங்களையெல்லாம் ஒன்றும் ஒளியாமல் அறிக்கையிட வேண்டும். மெய்யான துக்கத்தோடு அறிக்கையிட வேண்டும். ஆதியந்தமில்லாத, அனைத்தையும் படைத்த, அளவில்லாத சருவேசுரனுக்கு நீசப் புழுவாகிய மனுஷன்செய்த துரோகத்துக்குப் பிராயச்சித்தமாக இவ்வளவுமாத்திரமே அகத்தியமாய்க் கேட்கப்படுகிறது. ஆனால், ஐயோ, நரக ஓநாயாகிய பிசாசின் மாயமே! எத்தனையோ கிறீஸ்தவர்கள், விசேஷமாய், வாலப்பிராயமுள்ளவர்கள் சருவேசுரனுடைய இரக்கத்தின் பீடமாகிய இந்தச் சமாதான நீதியாசனத்தண்டை வந்தும், தாங்கள் செய்த துரோகங்களோடே இன்னும் மகா பழியான வேறொரு தேவ துரோகத்தைக்கூட்டி, கள்ளப் பாவசங்கீர்த்தனம்பண்ணிக்கொண்டு, இந்தக் கடைசித் துரோகத்தோடு சற்பிரசாதமும் பெற்றுக்கொள்ளத் துணிகிறார்கள். ஆ மதிகேடே! ஆ நிஷ்டூரமே!

Folly of hiding one's sin

கள்ளப் பாவசங்கீர்த்தனத்தின் மதிகேடு விளங்கும்படி அதின்காரணத்தைப் பாருங்கள். ஒரு சொற்ப வெட்கம், கூச்சத்தினாலல்லவோ, விசேஷமாய், துரோகமான பாவசங்கீர்த்தனஞ் செய்கிறார்கள்! எந்த நோயாளியாவது வைத்தியனிடத்திலே தன் அபாயமான நோயைச்சொல்லக் கூசி மறைப்பதுண்டோ? எவ்வளவு மறைவான இடத்திலே ஒரு இரணம் உண்டுபட்டாலும் அதற்குச் செய்யவேண்டிய சிகிச்சை



யைச் செய்யாமற் கூச்சத்தினாலே மூடி வைப்பார் உண்டோ? அல்லாமலும், ஒரு நல்ல பிதாவிடத்திலே—உன்னிலே அநுதாபமும் இரக்கமும் நிறைந்த உன் ஆத்தும குருவிடத்திலே, தனிமையாய், மூன்றாம்பேர் அறியாமல், எப்போதாவது வெளிவருமென்ற பயத்தின் நிழல்தானும் இல்லாமல்—உன் பாவத்தை ஒருதரம் அறிக்கையிட்டுவிடுவது இவ்வளவு கூச்சமென்றால், இதினால் மேலும் ஒரு படுபாதகத்தைக் கட்டிக்கொள்ளத் துணிவாயென்றால், கடைசி நாளிலே, பொதுத்தீர்வையின் தருணத்திலே, நீ ஒளித்துவைத்த பாவமும், ஒளித்ததினால் கட்டிக்கொண்ட புதுத் துரோகமும் சகல லோகமும் அறிய உன்நெற்றியிலே எழுதிவிட்டவண்ணமாய்ப் பிரசித்தமாக்கப்படும்போது எவ்வளவு அதிக மானபங்கமும் வெட்கக்கேடுமாயிருக்கும்! இதைச் சகிக்கவும் உன்னால் முடியுமோ! இல்லையில்லை. குருவானவர் உன் பாவத்தைக்கேட்டு உன்னிற் குறை நினைப்பாரென்றபயமும், பிறகு சொல்லலாம், கடைசிப் பாவசங்கீர்த்தனத்திலே எல்லாம் நேர் சீராக்கிக்கொள்ளுவோம் என்ற நம்பிக்கையும் எல்லாம் பிசாசின் தந்திரம். பாவி தனது அதிக இலெச்சைகேடான பாவங்களைச்சொல்லும்போது குருவானவர் அவனிலே குறை நினைப்பதற்கு முழுதும் மாறாய், அவ்வளவு நிதார்த்தமான ஒரு பாவசங்கீர்த்தனத்தைப்பண்ண அந்தப் பாவி அடைந்துகொண்ட வரப்பிரசாதத்தைப்பற்றி அகமகிழ்ந்து பூரிப்பார். அவனை அவமதிப்பதற்குப் பதிலாய், முற்றாக மனந்திரும்பிவிடுவதற்குரிய ஒரு தேவவரப்பிரசாதத்தை அடைந்துகொண்ட அந்தப்பாவியின்மட்டில் பெரிய மதிப்பும் கண்ணியமும் கொள்ளத் தொடங்குவார். இது என்னுடைய சொந்த அநுபவம்.

கிறீஸ்தவர்களே, பாவசங்கீர்த்தனங்களைக்கேட்கிற சகல குருமாருடைய அநுபவமும் இதுதான். ஏன்? ஆண்டவர்தாம் சொன்னாரே —மனந்திரும்பிப் பச்சாத்தாபப்படுகிற பாவியைக் குறித்துப் பரலோகத்திலே தேவதூதர்களின் மத்தியிலே சந்தோஷமுண்டாயிருக்கும் என்றார்.* இந்தச் சந்தோஷ பாக்கியத்திலே ஆத்தும குருவும் வெகுவாய்ப் பங்குபற்றுகிறார் என்றதை நம்புங்கள்.

Its self-destructive malice

இனி ஒருகாலம் கடைசிப் பாவசங்கீர்த்தனத்திலே எல்லாம் நேராக்கிக்கொள்ளுவேன் என்ற மோசமான நம்பிக்கை பிசாசின் ஆகப் பெரிய, பயங்கரமான தந்திரம். நல்ல பாவசங்கீர்த்தனஞ்செய்ய நமது சொந்தப் பெலனால் கூடுமோ? கூடாது. சருவேசுரனுடைய விசேஷ வரப்பிரசாதம் இன்றிக் கூடாது. ஆனால், புதுப் புதுத் தேவ துரோகங்களைக் கூடக் கட்டிக் கொண்டு வருவதுதானா இந்த விசேஷ வரப்பிரசாதத்தை அடைவதற்கு வழி! சாவான பாவத்தை ஒளித்துச் செய்கிற பாவசங்கீர்த்தனம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு பாரத் தேவதுரோகம். ஒவ்வொரு முறையும் யேசுநாதருடைய இரட்சிக்கிற திரு உதிரத்தைக் காலால், ஐயோ, பாதகமாய் மிதிப்பதற்குச் சரி. இனி, இப்படிப்பட்ட பாவசங்கீர்த்தனத்தின்பின், என்ன சொல்லுகிறேன்,—தேவதுரோகத்தின்பின், திவ்விய சற்பிரசாதத்தை வாங்கத் துணிவது, மனதினால் வாக்கினால் நினைக்க உரைக்கக்கூடாத மகா தேவபழி. இவ்வாறான, ஒன்றைவிட ஒன்று கதித்ததான, மகா மகா துரோகங்களை,பழிகளைச் சுமந்துகொண்டுவரும்போது தானோ, கடைசியாக நல்ல

* லூக். 15; 10.



பாவசங்கீர்த்தனம் பண்ணுவதாகிய புதுமையான வரங் கிடைக்கும்? சருவேசுரனைப் பகிடிபண்ணுவது போன்ற இத் துர்ச்சிந்தையோடு, கடின இருதயத்தோடு இருக்கிற பாவி, தனக்கும் அன்புள்ள கர்த்தருக்கும் செய்கிற நிஷ்டூரம் இவ்வளவு அவ்வளவு என்று எடுத்துச் சொல்லத்தக்கதல்ல.

கள்ளப் பாவசங்கீர்த்தனத்தோடு சற்பிரசாதம் பெறுவோரைப் போலவே மனந்திரும்பாமல், அதாவது, சாவான பாவப் பற்றுதலோடு பாவசங்கீர்த்தனஞ் செய்தவர்களும் அபாத்திரமாய், தேவதுரோகமாய்ச் சற்பிரசாதம் வாங்குகிறார்கள். இந்தப் பிந்திய விதமாய்ப் பலனற்ற பாவசங்கீர்த்தனம் பண்ணுவோரின் தொகை கள்ளப் பாவசங்கீர்த்தனம் பண்ணுவோர் தொகையிலும் அதிகம். ஏனெனில் இது அதிக மறைவான ஒரு குறைபாடு.

Confession with attachment to mortal sin

உள்ளபடியே எத்தனை பேர் இருதயத்திலே வன்மத்தை வைராக்கியத்தை வைத்துக்கொண்டு, தங்களுக்குக் குற்றஞ் செய்தவர்களுக்குப் பொறுதி கொடுக்கச் சம்மதியாமல், அவர்களைப் பழிவாங்கவேண்டுமென்ற கருத்தை மாற்றாமல் ஒப்புரவாக்குதலின் சக்கிறமேந்தைப்பெறத் துணிகிறார்கள்! எத்தனை பேர் பொல்லாத சிநேகங்களை அற மறந்துவிடாமல், தொடுப்புக்களை நீக்கிவிடாமல், தங்கள் மனச்சாட்சியின் கண்டனத்தைத் தணிப்பதற்காகமாத்திரம், இருதயத்திற் சுமந்த சுமையை வெளிப்பாவனைக்கு இறக்கிப்போடமட்டும் பாவசங்கீர்த்தனம்பண்ணப் போகிறார்கள்! இன்னும் எத்தனையோ விதமான பாவப்பற்றுதல்களும் இப்படியே உண்டு.

ஆனாலும், பிரியமானவர்களே, சாவான பாவத்தை உள்ளபடியே வெறுத்துவிடாமல், மெய்யான மனந்திரும்புதல் இல்லாமல் செய்கிற பாவசங்கீர்த்தனம் எல்லாம் வீண் பாவசங்கீர்த்தனம். மனம்பொருந்தி இப்படிச் செய்வதெல்லாம் தேவ நிந்தை, சுவாமித் துரோகம். முன் சொல்லியபடி சகல சாவான பாவங்களையும் அறிக்கையிடுதலும், சகல சாவானபாவங்களுக்காகவும் மெய்யான மனஸ்தாபமாய்—பயம்பொருந்திய மனஸ்தாபமாயாவது-இருப்பதும் ஆகிய இவை இரண்டும் பச்சாத்தாப தேவதிரவிய அனுமானத்தின் பலிப்புக்கு அவசியம். சாவான பாவத்தை ஒளிப்பது பச்சாத்தாபத்தை எப்படிப் பலனற்றதும் தேவதுரோகமுள்ளதும் ஆக்கிப்போடுகிறதோ, அப்படியே, சாவான பாவத்தை மெய்யாகவே வெறுத்துவிடாமல் அந்தத் தேவதிரவிய அனுமானத்தை வாடிக்கையின் நிமித்தமோ வேறு முகாந்திரமாகவோ பெறப் போவதும் அதைப் பலன் அற்றதும் தேவதுரோகம் உள்ளதும் ஆக்கிப்போடுகிறது. மனஸ்தாபமில்லாமல், அதாவது, வேறுவகையாய்ச் சொல்லுகில், மனந்திரும்புதலில்லாமல், சருவேசுரனை விட்டுப் பாவத்தைநாடிய ஆத்துமம் பாவத்தை உண்மையாகவே விட்டு, சருவேசுரனை நாடாமல்—செய்யும் பாவசங்கீர்த்தனம் பலிப்பதில்லை.

Without sincere contrition no remission of sin

இரண்டு வகையிலே எந்த விதமாயாவது துரோகமான பாவசங்கீர்த்தனம் பண்ணியபின் தம்மைச் சற்பிரசாதத்தில் உட்கொள்ளத் துணிகிற நிர்ப்பாக்கியமுள்ள ஆத்துமத்திலே பிரவேசிக்கும்போது, நம்முடைய அளவற்ற நேச மீட்பராகிய ஆண்டவர் கண்



ணீர்விட்டு அழுகிறவர்போலாகிறார். அவர் எருசலேம் பட்டணத்தை நோக்கிச் சொல்லிய வாக்கியங்களையே அந்த ஆத்துமத்தை நோக்கியும் சொல்லுவதுபோலிருக்கும்: "உன்னுடைய இந்த நாளிலானாலும் உன் சமாதானத்துக்கு உரியவைகளை நீ அறிந்தாயென்றாலோ! இப்போதோ அவைகள் உன் கண்களுக்கு மறைந்திருக்கிறது. உன் சத்துருக்கள் உன்னைச் சூழ அகழ் பொறித்து, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் நெருக்கி, உன்னைத் தரைமட்டமாக்கும் நாட்கள்வரும்!"* ஆ இப்படிப்பட்ட கேடும் ஆத்துமத்துக்கு வருவதுண்டா? ஆம், உன்னுடைய இந்த நாளிலானாலும், அதாவது: சருவேசுரன் ஒரு ஆத்துமத்தைத் தட்டி அருட்டி மனஸ்தாபத்துக்கு அழைக்கிறவேளையிலேயென்கிலும், அவர் அதினிடத்திலே எழுந்தருளுகிற நாளிலென்கிலும், அது மனந்திரும்பாமல் தன்னைக் கடினப்படுத்திக்கொண்டிருக்குமானால் அவர் அதைக் கைவிட்டுவிடுவார். அனைத்தையும் தாங்குகிறவரினால் கைவிடப்பட்ட ஓர் ஆத்துமத்தின் நிலையை எப்படி எடுத்துச் சொல்லுவோம்! அது சத்துருவாகிய பிசாசினால் வளைக்கப்பட்டு, பிசாசு வெட்டிவெட்டித் திறந்துவிடும் புதுப்புதுப் பாவச் சமயங்களாகிய பொறிக்கிடங்குகளில் அகப்பட்டு, முழுதும் அதின் கைவசமாகி நரகபாதாளம்மட்டும் இழுத்துக்கொண்டுபோகப் படுவதாகும். எவ்வளவு பரிதாபகேடு! மாற்றக்கூடாதகேடு! நித்தியமானகேடு!

பிரியமான கிறீஸ்தவர்களே, இது பாஸ்குவாரமல்லவா? ஆண்டவரை நாமெல்லாரும் நம் இருதயங்களிலே எழுந்தருளப் பண்ணவேண்டிய நாட்களல்லவா? எங்கள் இரட்சணியமாகிய அவருடைய உலக

* லூக். 15. 41—44.

சஞ்சார காலத்தின் அழுகைப்பிரலாபத்தை நாம் இந்தக்காலத்திலே புதுப்பித்துவிடாதபடி கவனஞ்செலுத்தவேண்டும். நம்முடைய பழைய பாவங்களின் நினைவால் மனமுருகி, கண்ணீர்சிந்தி, அவைகளை நல்ல பாவசங்கீர்த்தனத்தினாலும் பற்பல பத்திவேகமுள்ள தவக்கிரியைகளினாலும் மேலும்மேலும் நீக்கி, நமது ஆத்துமங்களைச் சுத்தமாக்கி, அவைகளிலே ஆண்டவர் ஆனந்தத்தோடு எழுந்தருளி நம்மை ஆசீர்வதிக்கும்படி ஆயத்தஞ்செய்யவேண்டும். தேவ சாபத்துக்கும் நித்திய கேட்டுக்கும் உரிய விதமாய்ச் சற்பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களின் தொகையிலே சேராமல், ஆசீர்வாதத்துக்கும் நித்திய பாக்கியத்துக்கும் உரிய விதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்களாக வேண்டும்.

Resolutions

இவ்விதமாய், நாம் எங்கள் ஆண்டவருடைய வருகைக்கு ஆயத்தமாகி, விசுவாசத்தினால் அவரை எதிர்கொண்டு, தாழ்ச்சியினால் உபசரித்து, அன்பினால் அரவணைத்து நமது சீவியகாலமெல்லாம் அவரோடு ஐக்கியமாய்ச் சீவிப்போமானால், மறுமையிலே அவருடைய திருமுக தரிசனத்தை அடைந்து பேரின்பமாய் வாழுவோம். ஆமென்.

---

பெரிய வெள்ளிக்கிழமை

## On Our Lord's Mental Sufferings

## ஆண்டவருடைய மனோ பீடைகள்

Posuit Dominus in Eo iniquitatem omnium nostrum.

கர்த்தர் நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேற் சுமத்தினார். (இசை. 53; 6)

திரிபுவனங்களையும் படைத்து அளித்து அழிக்கிறவராகிய சருவலோகநாயகர், நீசப்படைப்புக்களாகிய மனுஷர்மேலே தாம் வைத்த அளவறுக்கப்படாத ஆச்சரியம்பொருந்திய நேசத்தை வானமும் பூமியும் அறியக்காட்டியருளிய ஆசீர்வதிக்கப்பட்ட நாளை இன்று கொண்டாடுகிறோம். இன்றைக்கு, நமது இருதயங்களிலே குடிகொண்டிருக்கத்தக்க சிந்தனை என்ன? மன்னுயிருக்காகத் தன்னுயிரை விட்ட அன்பின் சுரூபியாகிய ஆண்டவர் பேரிலே நேசமும், நன்றிகெட்ட பாவிகளாகிய நமது துரோகங்களைப்பற்றி மனஸ்தாபமும் கொள்ளுவதே சிந்தனையாகவேண்டும் அல்லவா? இன்றைக்கு நாம் நமக்காகப் பாடுபட்டவரின் திவ்விய நேசத்தை நமது இருதயங்களிலே மூட்டிக் கொள்ளுவோமானால் எவ்வளவு நன்மை! நமது பாவங்களின் கொடுமையை, நிஷ்டூரத்தை, பாரத்தை உணர்ந்து அவைகளைமுழுப்பெலத்தோடேயும் வெறுத்துத் தள்ளிவிடத் தொடங்குவோமானால் எவ்வளவு ஆறுதல்! இதற்கு உதவியாக, கிறீஸ்தவர்களே, மனஸ்

தாபத்துக்கும் தேவ அன்புக்கும் ஊறணியாகிய ஆண்டவரின் திருப்பாடுகளை இன்று பத்தியோடு தியானிக்கக்கடவோம். நமது இரட்சணியமானவருடைய திருப்பாடுகளின் வரலாறுகளை இன்று முழுதும் உங்களுக்கு ஞான உணவாயிருக்கும். அவைகளையெல்லாம் ஒருமிக்க எடுத்து இங்கேகாட்ட முடியாது. உங்களுள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பத்திக்குத்தக்கபடி அத் திருப்பாடுகளின் ஒவ்வொரு பகுதியைப் பிரித்துத் தியானித்துக்கொள்ளுவார்களாக. நாம் இப்போது நம் திவ்விய கர்த்தரின் மனோபீடைகளை, அதாவது அவர் தமது திரு ஆத்துமத்திலே சகித்த வியாகுலங்களை மாத்திரம் உங்கள் உருக்கமுள்ள தியானத்துக்கு விஷயமாக எடுத்துச்சொல்லப்போகிறோம். அவர் தாம் படப்போகிற பாடுகளைநினைந்து பூங்காவனத்திலே அடைந்த சொல்லொணாத்துயரமானது நமது மனங்களை இளகச்செய்யாமலிராது. மனுஷன் ஒருபோதும் பட்டறியாத, ஒருபோதும் படமாட்டாத அவ்வளவு அத்தியந்த வியாகுலங்களை ஆண்டவர் நமக்காகப்படச் சித்தமானதைக்காணும்போது, கல்லான இருதயங்களும் அவரிலே அன்புகூரத் தொடங்காமலிரா. அத்தனை மனோவாக்குக்கு எட்டாத சிந்தாகுலத்தை நம் மீட்பர் அனுபவிக்கலானதற்குக் காரணம் என்னவென்று நாம் விசாரிக்கும்போது, நமது நன்றிகெட்ட நெஞ்சுகள் பொடிப்பொடியாகி, இனியாவது பாவத்தை விட்டுத் தவஞ்செய்யத் தூண்டப்படும். பிரியமான கிறீஸ்தவர்களே, பத்தியுள்ள காதுகளோடு கேட்கக்கடவீர்கள்.

Advantages of meditating on Our Lord's sufferings



சகல உலகங்களிலும் அடங்காதவரான சருவேசுரன், வானதிவானங்களுக்கும் மேலாய் விளங்குகிற சோதிசுரூபன்—நம்முடைய இந்த ஈன உலகத்திலே நம்முள் ஒருவராய் வந்து முப்பத்துமூன்று வருஷம் நம்மோடு சீவிப்பவரானார். அந்த முப்பத்துமூன்று வருஷமும் நமக்காக அவர் பட்ட துக்கங்கள் எவ்வளவு! கஸ்திகள் எவ்வளவு! அவமானங்கள் எவ்வளவு! சிந்தின கண்ணீர்கள் எவ்வளவு! வெயர்த்த வெயர்வைகள் எவ்வளவு! ஆனாலும், அவர் நமதுமேல் வைத்த அதிசயமான நேசத்துக்கு இவைகள் போதாதென்றிருந்தது. நமக்குச் சீவியத்தைக் கொடுப்பதற்காகத் தாம் மரணிக்கவும்வேண்டுமென்று ஆசையாயிருந்தார். அந்த மரணமுமோ எவராகிலும் வலுவந்தமாய் அவரை உட்படுத்தின ஒரு மரணமல்ல; தாமாகவே தெரிந்துகொண்ட ஒரு மரணம். யாராவது எனது ஆத்துமத்தை என்னிடம் பறிக்கக்கூடியவர்களல்ல. நானாகவே அதைவிடுகிறேன். அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளுவேன் * என்று தாமே செப்பியருளினர் இப்படித தாமாகவே தமது மரணத்தைத் தெரிந்துகொள்ளத்தக்கவராயிருந்தும், மகா அவமானமுள்ள ஒரு மரணத்தையே தெரிந்துகொள்ளலானார். ஆகையால், திவ்விய சற்பிரசாதத்தை ஏற்படுத்தியருளிய அந்தப் பெரிய வியாழக்கிழமையன்று, நம்முடைய திவ்விய கர்த்தர், தமது சீஷர்களுக்குச்செய்யத் திருவுளமான அமிர்த போதகங்களையெல்லாஞ் செய்து முடித்தபின், தாம் மரிப்பதற்குக் குறித்தகாலம் சமீபித்திருக்கிறதையும் துரோகிச் சீஷன் தம்மைக் காட்டிக்கொடுக்க உத்தி

Our Lord in the Garden of Olives

* அருளப். 10; 17.

யோகமாய்ப் போயிருக்கிறதையும் அறிந்து, "கெத்
சமனி" என்னும் தைலத்தோப்புக்குப் பதினொருவ
ரோடேயுங் கூட எழுந்தருளினார் அங்கே சீஷரை
நோக்கி: நான் போய்ச் செபம்பண்ணுமளவும் நீங்கள்
இங்கே உட்கார்ந்திருங்கள் என்று திருவுளம்பற்றி,
தமக்கு என்றும் அன்புள்ளவர்களாயிருந்த இராயப்
பரையும் செபதேயின் இருகுமாரரையும் மாத்திரம்
அழைத்துக்கொண்டுபோய், துயரமடையவுஞ் சஞ்
சலமாயிருக்கவுந் தொடங்கினார். அவ்வேளை ஆண்
டவர் தமது சிந்தாகுலத்தை இனி மறைக்கமாட்டா
மல் மூவரையும் நோக்கி: என் ஆத்துமமானது மர
ணத்துக்கு ஏதுவான துயரங்கொண்டிருக்கிறது என்
றுசொல்லி, அவர்களைவிட்டுச் சற்றுத்தூரம தரை
யில் முகங் குப்புற விழுந்து மும்முறையாக ஒரே
செபத்தை உச்சரித்துப் பரம பிதாவைப்பார்த்துப்
பிரார்த்திக்கிறார். அவருடைய பயமும் நடுநடுக்கமும்
அதிகரிக்கிறது. சருவாங்கமும் படபடத்து நெக்கு
விட்டு, இருதயத்தின் இரத்தத் தாரைகளெல்லாம்
பெருக்கெடுத்து சரீரமுழுகிலும் திடீரென்று பாய,
ஆண்டவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட திருக்குருதி
யானது, தேகத்தின் சகல மயிர்க்கண்களாலும் பொ
சிந்து திருவஸ்திரத்தை நனைத்து, ஆறுகளாய் ஒழுகி
அவர் முட்டிட்டிருந்த தரையெல்லாம் நனைந்துபோ
கிறது. ஓ! இரக்கமுள்ள ஆத்துமாக்களே, உங்கள்
ஆண்டவர் தமது இரத்தத்திலேதானே முழுக்காட்
டப்பட்டவராய், ஒலிவமரங்களின் அடியிலே கற்பா
றைகளின்மேல் குப்புறக் கிடக்கிற இந்த அற்புதக்
காட்சியைப் பாருங்கள். ஆ இதென்ன அதிசயம்!
என்ன விந்தை! சந்திர சூரியர்களைத் தாங்கி நடத்
துகிறவரின் திருமுகமண்டலம் தரையிற் படிந்திருக்



கிறதே. எறும்பு முதல் யானை ஈறான சகல மிருகராசி
களுக்கும், மகரம், புள்ளு முதலான நீந்தும் பறக்கும்
சகல சீவர்களுக்கும், மனுமக்களுக்கும் பெலமளிக்கிற
வர் ஆயாசத்தாற் சோர்ந்து விழுந்து கிடக்கிறாரே.
ஆத்துமங்களுக்கெல்லாம் ஆறுதல் கொடுக்கிறவரும்,
மனோரூபிகள் பார்த்து அகமகிழும் சோதிப்பிரதாப
முள்ளவருமான சருவேசுரன் வியாகுல சாகரத்தில்
மூழ்கித் தவிக்கிறாரே. மனிதன் படக்கூடிய அதிக
சஞ்சலமான துயரமானது அவனைச் சலஞ்சலமாய்
வெயர்க்கப் பண்ணுமானால், தேவகுமாரனை உதிர
உதிரமாய் வெயர்க்கப்பண்ணிய இந்தத் துயரம் என்
ன! இந்தச் சிந்தாகுலம் எப்படிப்பட்டது!

The cause of Our Lord's sweating Blood

ஆ பிரியமானவர்களே, ஒரு அன்னியன் தானும்
வழி தெருவிலே தலைவிரிகோலனாய்த் துக்கசாகரத்
தில் அமிழ்ந்தியவனைக் கிடக்கக்கண்
டால், நீங்கள் அவனை அணுகி, அவனு
டைய துயரத்தின் காரணத்தை விசா
ரித்து அறிந்து, அவனுக்கு ஆறுதல்
சொல்லப் போகாமல் விடமாட்டீர்க
ளே. அப்படியிருக்க, உங்கள் ஆண்
டவர் இன்று பூங்காவனத்திலே இரத்த வெயர்வை
வெயர்த்து விழுந்துகிடக்கிறதைக்கண்டு, அவர் திருச்
சமுகத்தில் முடுகிப்போய் அவருடைய இந்த மகா
வியாகுலத்தின் காரணத்தை விசாரியாமல் விடுவீர்க
ளோ? ஆ! எங்கள் நாதரே, அமிர்தயேசுவே, தேவ
ரீரைப் பீடித்திருக்கிற மகா வியாகுலத்தின் காரணத்
தை எங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளும். அடி
யோர் தேவரீருக்குத் தேற்றரவு பண்ண எங்களால்
ஆனதெல்லாம் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்.

எங்கள் ஆண்டவரை இப்படிச் சொல்லமுடியாத மனோவேதனைக்கு உள்ளாக்கினது தாம் படப்போகிற பாடுகளின் நினைவாகக்கூடுமா? அந்த நிஷ்டூரப் பாடுகளை முன்னேறவே மனதின் கண் முன்பாகக் கண்டதினால் பயந்து, இப்படி இரத்தமிரத்தமாய் வெயர்த்தாரா? ஆம்; மெய்யான சருவேசுரனும் மெய்யான மனுஷனுமாயிருக்கிற எங்கள் ஆண்டவர், தமக்கு வரப்போகிற சகல கஸ்தி வாதைகளையும், நிந்தை அவமானங்களையும் முன்னேறவே தமது ஞான திருஷ்டியினாற் கண்டும் அறிந்துமிருந்தார். இந்த துரோகிச் சீஷன் தம்மை முத்தங்கொடுத்துக் காட்டிக் கொடுக்கப்போகிறதைக் காண்கிறார். சேவகர்களுடைய கத்திகள் கிறிசுகள், கயிறுகள் சங்கிலிகள், வல்லயங்கள், ஈட்டிகளையெல்லாம் மனதினாலே தரிசிக்கிறார். தம்முடைய பிரிய சீஷர்களெல்லாம் தம்மை விட்டு ஓடி விடுகிறதையும், தலைமைச் சீஷனை பேதுருவானவர் மும்முறையாக மறுதலிக்கிறதையும் காண்கிறார். தம்மிடம் எண்ணரிய சகாயங்களைப்பெற்றவர்களும் ஐந்துநாட்களின் முன்னேயே "தாவீது குமாரனுக்கு ஓசன்னா" என்று வாழ்த்தியவர்களுமான அந்தச் சனமெல்லாம், சில மணித்தியாலங்களுக்குள்ளே தம்மைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படியாகக் குரவையிடுகிற சத்தமும் அவர் திருச்செவிகளிலே இதோ விழுகிறது. தாம் துஷ்ட ஓனாய்களாற் சூழப்பட்ட செம்மறிப்புருவைபோலத் தம்மைக் கொலைப்படுத்தத் தேடுவோராற் சூழப்பட்டு, தெருநீளம் நீதிஸ்தலங்களுக்கு இழுத்துக்கொண்டு போகப்படுவதையும், காண்போரெல்லாம் தேவ பிதாவின் நித்திய மகிமையாகிய தம்மைக் கோரணி

1 Foresight of His sufferings



கொள்ளுவதையும் திரு நேத்திரங்களின்முன்னே காண்கிறார். தம்மை முற்றவெளியிலே கற்றாணிற் கட்டி அடிக்கப்போகிற ஐயாயிரத்துச்சில்வான சாட்டை அடிகளினால் மாங்கிஷம் மாங்கிஷமாயிராமல் தசைகள் தெறித்து சருவாங்கமும் ஏக காயமாய்ப் போவதையும், திருச்சிரசில் எழுபத்திரண்டு கூரிய முட்கள் பொருந்திய முள்முடி சூட்டப்பட்டுக் கண்கள் விழிக்கமாட்டாமல் திருமுகமுழுதும் இரத்த வாருவதையும், பரிகாச இராசாவாக வாழ்த்தப்பட்டு சரீரவேதனையோடு சொல்லிலடங்காத மானபங்கத்தையுமடைவதையும் பிரத்தியட்சமாகத் தரிசிக்கிறார். பின்னும், தாம் பதினைந்தடி நீளப் பாரக் குருசைச் சுமந்துகொண்டு பெலக்கேடாய்ப் பலமுறை விழுந்தெழுந்து, கல்வாரிமேட்டை நோக்கி நடப்பதையும், சிலுவைமரத்தில் திருப்பாதகரங்கள் அறையுண்டு இரு கள்வருக்கிடையில் உயர்த்தப்படுவதையும், தமது திரு இரத்தமெல்லாம் மனோவாக்குக்கெட்டாத வேதனையின் நடுவே துளிதுளியாய் வடிந்து சிந்தப்படுவதையும், சிலுவையின் கீழே வியாகுலமாதா ஆற்றொணாச் சோபசந்தாபத்தோடே அழுதுகொண்டு நிற்பதையும், பரம பிதாவினாலும் கைநெகிழப்பட்டுக் கடைசியாய்த் தமது திவ்விய பிராணனைவிடுவதையும் மனக்கண்முன்பாக உணருகிறார்.

பிரியமானவர்களே, பின்வரப்போகிற வேதனைகளைப்பற்றிய அறிவாலுண்டாகும் பயமானது, உள்ளபடியே மகா பெரிய ஒருவேதனை. பலமுறையும், வரப்போகிற வேதனையிலும் பார்க்க, அந்த வேதனையைப்பற்றிய பயமே அதிக வேதனையாய்ப்போகிறதையும் அறிவோம். ஆகையினாற்றான், ஆண்டவ

ரும் தாம் படப்போகிற சகல கஸ்திவாதைகளையும் தமது தேவஞானத்தினால் வரையறைவாயும் ஆதியோடந்தமாயும் அறிந்துகொள்ளத்தக்கவராயிருக்க, அந்த அறிவினால் மனத்துயர்கொண்டு, பயந்து, பதைத்து: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது என்று பிரார்த்தித்தார் என்போமா? வரப்போகிற தமது பாடுகளைப்பற்றித்தான் இரத்த வெயர்வை சிந்தினாரா? இது போதிய காரணமாகுமா? துன்பப்படுகிறவர்கள், வேதனைப்படுகிறவர்கள் பாக்கியவாளர் என்று ஆண்டவர்தாமே போதிக்கவில்லையா?* நம்மைச் சத்துருக்கள் வருத்தும்போது, நமக்கு எதிராய்ச் சன்னைசாசங்கள், அபாண்டங்கள் சொல்லும்போது நாம் சந்தோஷிக்கவேண்டும் என்று திருவுளம்பற்றவில்லையா?† தாம் பாடுபடுகிறதற்கு ஆசையாயிருக்கிறோமென்றும், ஒரு இரத்த ஞானஸ்நானத்தைப்பெற்றுக்கொள்ளத் தாம் மெத்தத் துரிதப்படுகிறோமென்றும் செப்பவில்லையா?‡ இப்படி எல்லாம் போதித்தவரான எங்கள்நாதர், இப்போது தாம் ஆசித்திருந்த பாடுகளைப்படச் சமயம்வாய்த்திருக்கும்போது, தம்மால் நல்லதென்று புகழப்பட்ட நிந்தை அவமானங்களென்னும் பாத்திரத்திலே நிறையக் குடிக்கத் தருணம் கிடைத்திருக்கும்போது—அஞ்சி, பின்வாங்குவதென்ன? இதற்குவேறு ஏதும் நியாயம் இருக்கக்கூடாதா? தமக்கு வரப்போகிற பாடுகளைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளத் திருச்சித்தமாயிருந்தாலும், அப்பாடுகளை அவருக்குப் பொறுக்க முடியாத கசப்புள்ளவைகளாக்கிக்கொண்டிருந்த வேறு ஏதோ ஒரு காரணம் இருந்ததாகக்கூடாதா?

* மத். 5; 5, 10 † ஷை 11, 12 ‡ லூக். 12; 50



ஆகையால், எங்கள் ஆண்டவர் பாடுபடப் பயந்து நடுங்கியது, உலகத்தின் சகல பாவங்களின் பழியும் தமதுமேலே சுமத்தப்பட்டிருந்ததினாலே என்போமா? ஆம்; சிருட்டிக்கப்படாத அத்தியந்த பரிசுத்தமான எங்கள் ஆண்டவரின் தோள்மேலேசுமந்து அழுத்திக்கொண்டிருந்த பாவப்பாரமே அவருக்கு இவ்வளவு வெறுப்பையும் கசப்பையும் கொடுத்ததென்று சொல்லக்கடவோம்.

2 His being charged with the sins of the world

பாவமென்றால், அது எவ்வளவு பெரிய ஒரு கேடென்று நாம் சரியாய் ஒருபோதும் அறிந்துகொள்ளவேமாட்டோம். சகல சம்மனசுகளும், சகல தூதாதிதூதர்களும்சேர்ந்தாலும், ஒரேயொரு சாவானபாவத்துக்கு ஈடான உத்தரிப்பைச் சருவேசுரனுக்குச் செலுத்தக் கூடியவர்களல்ல. பூமியிலே பிறக்கிற ஒவ்வொரு ஆத்துமமும், உலகத்திலுள்ள, உண்டாயிருக்கக்கூடிய சகல துன்பதுரிதங்களையும் முடிவில்லாத பல ஊழியுள்ளகாலங்களாகத்தான் பட்டுக்கொண்டுவந்தாலும் ஒரே ஒரு சாவானபாவத்துக்கேனும் போதிய பிராயச்சித்தமாகாது. சகல மனிதருமாவது, சகல சம்மனசுகளுமாவது, எத்தனை இலட்சாதிலட்ச கோடாகோடி ஊழிக்காலங்கள் சென்றாலும் ஒருசாவான பாவத்துக்குத்தானும் பிராயச்சித்தஞ்செய்து தீர்க்கமுடியாது என்றபடியாலேயே, சுதனாகிய சருவேசுரன் உலகத்தாருடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே பிராயச்சித்த பலியாக்கச் சித்தமானார். பிதாவாகியவரும் மனுஷனாய் அவதரித்த திருச்சுதன்பேரிலே "நம் எல்லாருடைய அக்கிரமத்தையும் சுமத்திவிட்டார்."* இத்திருச்சுதன்

* இசை. 53; 6.

பாவத்திற்கு இயல்பான தேவபங்கத்தையும் அவலட்சணத்தையும் சரியாய் அறிகிறார். அதின் சகல அக்கிரமமும், பழியும், வெட்கக்கேடும் அவர்மேல் பதிந்து உறுத்துகிறது. இருந்த, இருக்கிற, இருக்கப்போற சகல மனிதருடைய பாவங்களின் பாரமும் அவர் தோள்மேலிருக்கிறது. சிலசில பாவங்களைமட்டுமல்ல, சகல பாவங்களையும், பாவங்களைமாத்திரமல்ல அவைகள் கட்டிக்கொள்ளப்படுகிற இடங்களையும், கட்டிக்கொள்ளப்படுகிற இச்சைகெட்ட விதங்களையும் காண்கிறார். உலகத்திலே நடந்த, நடக்கிற, நடக்கப்போகிற சகல பழிபாதகங்கள், நம்பிக்கைத் துரோகங்கள், தேவதூஷணங்கள், விபசாரங்கள், அநியாயங்களும் அவர் ஞானதிருஷ்டியின்முன் இருக்கின்றன. இருளிலும் மறைவிலும் செய்த பாவங்களும், மனதின் அந்தரங்கத்தில் நினைத்த துர்ச்சிந்தனைகளும், இருதயத்திற்கொண்ட ஆகாத ஆசைகளும் ஆகிய இவையெல்லாம் அவருக்கு வெட்டவெளிச்சமாயிருக்கின்றன. இந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறவர்களே, உங்கள் பாவத துஷ்டாட்டங்களையும், நீங்கள் சிந்தனையால் வாக்கால் கிரியையால் கட்டிக்கொள்ளுகிற சகல அக்கிரமங்களையுமே எங்கள் பட்சமுள்ள ஆண்டவர் அந்தப் பூங்காவனத்திலேயிருந்துகொண்டு கண்டருளினார். சகல பாவக் குரோத அக்கிரமமும் என்கிற இந்தத் தாங்கொணாச் சுமையானது ஆண்டவர்மேற் பொறுத்திருந்தது. தேவபிதாவைப்பார்த்தால், அவர் நீதியிலே சற்றும் கோணாதவராய், தமது அளவறுக்கப்படாத பரிசுத்தத்துக்கேற்ற பாவப்பரிகாரத்தைக் கேட்கிறவராயிருக்கிறார். மட்டற்ற பரிசுத்தராகிய தம்மைநோக்கினால், தாமே சகல பாவ அசுத்தத்தின் அடைமானமும்,



சகல குற்றவாளிகளிலும் அதிக குற்றவாளியின் வேஷமுமாயிருக்கிறார். இந்தக் காட்சியானது எங்கள் ஆண்டவர் திரு ஆத்துமத்தைக் கசப்பாக்கி, தாம்படவேண்டியிருந்த பாடுகளையும் வெறுப்புள்ளதாக்கிற்று என்று அங்கீகரிக்கக்கடவோம்.

ஆ அளவற்ற இரக்கமுள்ள ஆண்டவரே, பாவமற்றவராகிய தேவரீர் பாவத்தின்பேரால் இவ்வளவு திகிலடைந்து வருந்த, நாங்களோ எவ்வளவோ பாவப்பாரத்தைச் சுமந்தவர்களாயிருந்தும் சற்றாவது பயமற்றவர்களாய்க் கலங்காதவர்களாய் இருக்கிறோமே. பாவத்தின்பின் மனதிலுண்டாகிற மனச்சாட்சிக்கண்டனத்தை இலேசாக அமர்த்திவிட்டு, உலக வீண சந்தோஷங்களில் மனஞ்செலுத்திக்கொண்டிருக்கிறோமே. ஐயோ இதென்ன அவநீதம்! என பாவங்களால் என் ஆண்டவர் இரத்தவெயர்வை சிந்துகிறார். நானோ ஒருதுளி கண்ணீர்தானும் சிந்தாமறபோகிறேனே! அவர் எனக்கு வரவேண்டிய தீர்வையை நினைந்து சருவாங்கமும் நடுநடுங்கிப் பயந்திருக்கிறார். நானோ தேவநடுத்தீர்வையை எண்ணிச் சலியாமல் அக்களிப்போடிருக்கிறேனே! இந்த அவநீதத்துக்கு இனியாவது ஒரு முடிவு வரமாட்டாதோ? என் இரட்சணியமாகிய யேசுவே, தேவரீர் அன்று தரைமேற குப்புறவிழுந்து உதிரமாக வெயர்த்தது என் மட்டுக்கடங்காத பாவங்களினாலேதானல்லவோ! எனது அளவுக்குமிஞ்சிய குரோதங்களினாலேதான் தேவரீர் மனுப்பெலனுக்கு மிஞ்சிய மனோவேதனை அடையலானீர்!

மனுக்குலம் முழுதினும் பாவப்பாரத்தைச் சுமந்தது என்பது ஆண்டவருடைய கொடிய படத்துக்கும் இரத்த வெயர்வைக்கும் பிரதானமான ஒரு

காரணமாகும். ஆனால், இன்னுமொருகாரணம், அதிக விசேஷமான காரணமிருக்கிறது அதென்னவென்றால், தாம் சிந்துகிற திருவிரத்தம் அநேகருக்கு வீணாய்ப்போம என்று நினைவாம்.

3 Ingratitude shown by His own

தமது திருப்பாடுகளால் மனுக்குலம் முழுதும் ஈடேறிக்கொள்ளுமானால், அந்தப் பாடுகளைக் கண்டு சகலரும் மனது உருகிச் சருவேசுரனை நேசிப்பதே தங்கள் கதியும் ஆசையுமாகக்கொள்ளுவார்களானால்,—அப்போது எங்கள் ஆண்டவர், இவ்வேளை தாம்படத்தொடங்கும் பாடுகளிலும் அதிகங் கொடிய பாடுகளைப்படவும் ஆவலோடு ஒருமித்திருப்பார். சகல பாவச்சுமையையும் தாங்கி, குற்றவாளி போலவும், சருவேசுரனாற் கைவிடப்பட்டவர்போலவும் எண்ணப்படவும் மனங்கொண்டிருப்பார். ஆனால், அளவில்லாத ஞானமுள்ள சருவேசுரனாகிய அவர் உலகத்தாருடைய உண்மையான நிலைபரத்தை அறிந்திருந்தார். எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்களுக்கு, லட்சக்கணக்கானவர்களுக்குத் தமது திருக்குருதி வியர்த்தமாய்ப் போமென்றதை அவ்வேளையிலே கண்டார். அக்கியானிகள், பதிதர், சோனகர், யூதர் ஆதிய அவிசுவாசிகள் மாத்திரமல்ல, தம்முடைய இரத்தப்பலனைப் பெற்று, அந்தத் திரு உதிரந் தெளிக்கப்பட்டு, அதினாற் கழுவப்பட்டவர்களிலும் அநேகர், தங்கள் நன்றிகெட்ட அக்கிரமங்களினால் நரக பாதாளத்திலே போய் விழுவார்களென்று உணர்ந்தார். தம்முடைய விலையேறப்பெற்ற அந்த இரத்தத்தைக் கள்ளப்பாவசங்கீர்த்தனத்தினாலே காலால் மிதிக்கிறவர்களையும், சாவான பாவத்தோடு மனம்பொருந்திச் சற்பிரசாதம்பெற்றுத் தம்மை அவமதிக்கிற நிர்ப்பாக்கியர்களை



யும் கண்டார். தமது பரிசுத்த வீடுகளாகிய தேவாலயங்களிலே, சன்னியாசமடங்களிலே, தமது ஊழியர்களும் விசேஷ சிநேகிதரும் என்றிருக்கிற குருமார், சன்னியாசிகள், கன்னியாஸ்திரிகளுக்குள்ளே, இதோ சற்றுக்குள்ளே தம்மைச் சதிமானமாய்க் காட்டிக்கொடுக்கப்போகிற யூதாஸ் இஸ்காரியோத்துவின் பின்னோடிகள்போல் ஆகிற அபாத்திரமான ஆத்துமாக்களால் தமக்கு வருகிற தாங்கொணாத நன்றியீனத்தையும் தரிசித்தார். ஆண்டவருடைய மிருதுவான திரு இருதயத்துக்குப் பொறுக்கக்கூடாத துயரத்தை வருவித்த இந்தக்காட்சியால் அவர் கலங்கி: பிதாவே, நான் யாருக்காகப் பாடுபடுவேன்? "என் இரத்தத்தால் வரும் லாபமென்ன?" * அதினால் எத்தனைபேர்தான் பிரயோசனம் அடையப்போகிறார்கள்! பாடுபட நான் பயப்படவில்லை உலகத்தின் சகல பாவ அக்கிரமங்களையும் சுமந்து தீர்க்கிறதற்கும் ஒருமிக்கிறேன் ஓ! சிலுவையே வாராய்; என் தோள்மேற்பதிந்து நசுக்கக்கடவாய்! என் உதிரமே மானுட ஈடேற்றத்துக்காக நீ வாரி இறைக்கப்படுவாயாக! சகல பாவச்சுமையும் என்மேல் அமரக்கடவது! ஆனால் என்பிதாவே, நான் இத்தனை பாடுபட்டு இரத்தஞ்சிந்தி, மரித்து மீட்கிற ஆத்துமாக்களாவது உம்மை நேசிப்பார்களோ? இவர்களுங்கூட உம்மைவெறுத்துப் புறக்கணித்துப் பாவத்தையே மேலும் மேலும் கட்டிக்கொள்ளப்போகிறதைக் காண்கிறேனே. என் இரத்தத்திற் றோய்ந்த இவர்கள்மேலும் பிசாசு வெற்றிகொள்ளுகிறதைத் தரிசிக்கிறேனே. ஆ! பிதாவே "உமக்குச சித்தமானால் இந்தப்பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது!" ...

* 29-ம் சங்கீதம் 10.

"ஆயினும்" ஒரு ஆத்துமம் மாத்திரமாவது என்னுடைய பாடுகளினால் ஈடேறுமானால், ஒரு நன்றியறிகிற ஆத்துமம் மாத்திரம் இருக்குமானாலும், "உமது சித்தப்படியே ஆகக்கடவது" * தான் மனதினால், வாக்கினால் உணா, சொல்லக்கூடாத சகல பாடுகளையும்படுகிறேன் கொலைக்கு ஏகுகிறேன். மனுஷருடைய நன்றியறியாமை என்கிற இந்தப் பாத்திரத்தைக் கடைசித் துளி பரியந்தம் குடிக்கிறேன்.

An apostrophe to habitual sinners

ஆ பாவிகளே, உங்கள் மனந்திரும்புதலை நாளைக்கு நாளைக்கு என்று பின்போட்டுவைத்துச் சாவான பாவத்தில் நிலைத்திருக்கிறவர்களே, சவக்குழியிலே இதோ ஒருகால்வைத்துக்கொண்டு, பின்னும்: எங்கள் பாவப் பழக்கங்களைத் திருத்தக் காலம் உண்டு, தவஞ்செய்யக் காலமுண்டு என்ற மாயமான நம்பிக்கையோடு நாட்போக்குகிறவர்களே, நீங்கள் தான் யேசுநாதருக்கு இந்தக் கசப்பான பாத்திரத்தைக் குடிக்கக் கொடுத்தீர்கள். உங்களுடைய கண்டுகேட்டறியாத, அதிசயமான நன்றிகேடுதான், சர்வவல்லப சருவேசுரனை எங்கள் ஆண்டவரையும் பயந்து நடுநடுங்கச்செய்தது. இதுவரையில் நீங்கள் அவருடைய திரு இரத்தத்தினால் அடைந்த பலன் என்ன? அவருடைய சக்கிறமேந்துகளை என்ன செய்துபோட்டீர்கள்? அவருடைய திரு ஏவுதல்களை, அவர் அனுப்பிய மனச்சாட்சிக் கண்டனங்களை, அவர் பொழிந்தருளிய ஞானவெளிச்சங்களைக்கொண்டு நீங்கள் பெற்ற லாபம் என்ன? உங்களுடைய நிஷ்டூரத்தைக் கண்டல்லவோ ஆண்டவர் இவ்வளவாக அஞ்சிப் பின்வாங்கினார்!

* லூக். 22; 42



யேசுநாதர் பிதாவைப்பார்த்து மும்முறை பிரார்த்தித்தும், ஆறுதலடையாமலிருக்கிற அவ்வேளையிலே, கிறீஸ்தவர்களே, நீங்கள் அவரண்டையிலே போய் நிற்கிறீர்களென்று எண்ணிக்கொள்ளுங்கள். தம்மை முடுகிப்போய் நிற்கிற உங்கள்பக்கமாய், ஆண்டவர், இரத்தத்திற் தோய்ந்து அக்கத்தினாற் குழுவி இருக்கிற தமது திருமுகத்தைத் திருப்பியருளி, கருணையும் இரக்கமும் தயாளமும் நிறைந்திருக்கிற தமது திருநேத்திரங்களால் உங்களைப்பார்த்து, தாம் வசக்கேடாய் விழுந்துகிடக்கிற இடத்தையும் அதிற் படிந்திருக்கிற இரத்தவெள்ளத்தையும் உங்களுக்குக் காண்பித்து: என்மகனே, என்மகளே, நீ இன்னும் என்னைத் துன்பப்படுத்துவாயோ? என் இருதயத்தை இன்னும் குரூரமாய்க் காயப்படுத்துவாயோ? நான் சிந்துகிற திரு இரத்தம் உனக்கும் பலனில்லாததாயிருக்கப்போகிறதோ? நான் இந்தப் பாடெல்லாம் பட்டபின்னும் உனக்கு மோட்ச இராச்சியத்தின் கதவு அடைபட்டதாய் இருக்கப்போகிறதோ? ஆ என்னால் அநாதிநித்தியகாலமாய் நேசிக்கப்பட்ட மகனே, மகளே, நான் அளவில்லாக் கருணையினால் ஒன்றுமின்மையிலிருந்து இழுத்தெடுத்து உண்டாக்கிய என் அன்புள்ள அருமைச் சிருட்டியே, இனியாவது நீ உன்மேலும் உன்னைப் படைத்தவர்மேலும் இரக்கங்கொள்ளமாட்டாயோ என்று திருவுளம்பற்றுவார்.

இதைக்கேட்டுக்கொண்டிருக்கிறவர்களே, உங்கள் நெஞ்சுகள் இன்னும் உருகவில்லையா? ஆண்டவர் சாஷ்டாங்கமாய் விழுந்து கிடந்த கல்லுத்தானும் இளகிப்போயிற்றென்றால், உங்கள் இருதயம்மாத்திரம் இளகாதிருக்குமோ? பிரியமுள்ளவர்களே, இன்று எங்கள் ஆண்டவர் இருக்கிற சோபசந்தாப கோலத்

ளைக் கண்டபின்னும் நீங்கள் கல்நெஞ்சராயிருக்கக் கடவீர்களல்ல, ஆகையால், இதோ தரையிற் கு பு றக்கிடக்கிற எங்கள் சருவேசுரனை நீங்களும் நானும் ஞானவிதமாய் முடுகிச் சாஷ்டாங்க தண்டனிட்டு மெய்யான மனஸ்தாபக் கண்ணீர்விட்டழுது சொல்லக்கடவோம்:

**Purpose of amendment**

என் அமிர்தமான யேசுவே, என்பாவமும் நன்றியறியாததனமுந்தானே தேவரீரை இந்தத் துயரம் நிறைந்த கோலமாக்கினது! என் இடைவிடாத துர்நடக்கையும் பாவத்தில நிலைகொண்ட மூர்க்கத்தனமுந்தானே தேவரீருடைய வேதனையுள்ள இரத்தவெயர்வைக்கும் மரணத்துக்குரியதான சிந்தாகுலத்துக்கும் காரணமானது! நான் பாவச்சகதியில் விழுந்துபுரண்டு கரையேற அறியாமற் கிடந்ததினாற்தானே, சகல லோகத்தையும் தாங்குகிறவரான தேவரீர் இந்த முரட்டுக்கற்களின்மேல் சாஷ்டாங்கமாய்விழுந்துகிடக்கலானீர். ஆகையால் என் ஆண்டவரே, சகல நேசத்துக்கும் உரிய என் மீட்பரே, தேவரீருடைய வரப்பிரசாதத்தின் உதவியோடு இன்றைக்கே என் பாவசீவியத்தை விட்டுவிடத் துணிகிறேன். இதோ, தேவரீருடைய வல்லமையுள்ள சகாயத்தோடு நான் புண்ணிய சீவியத்துக்கு எழுந்திருக்கிறவனாகத் தொடங்கிக்கொண்டேன். சந்திர சூரியர்களுக்கெல்லாம் ஒளிவு கொடுக்கிறதும் தேவதூதர்கள் பார்த்து மகிழ ஆசைப்படுகிறதுமான என் ஆண்டவரின் திருமுகமண்டலமே, நீர் இனித் தரைமேற் படிந்திருக்கக்கடவீரல்ல. ஆண்டவரே எழுந்திருந்தருளும். தேவரீர் எனக்காகப் படப்போகிற பாடுகள் வீணாகமாட்டாது. அடியேன் தேவரீர் எனக்காகச் சிந்தப்போகிற




திருக்குருதியில் என்பாவங்களைக்கழுவி, இனிமேல் என்மரணபரிந்தம் தேவரீருடைய திருக்கற்பனைகளையெல்லாம் சுமுத்திரையாய்க் கைக்கொண்டு, தேவரீருடைய திருமுகதரிசனத்தை அடையவரும்வரைக்கும் உம்முடைய நேசத்தை விடாதிருப்பேனாக!

ஆமென்

தபசுகாலபிரசங்கம் முற்றிற்று

PRINTED BY C. ANDREW.



005473

# "என்னுடையவும் உங்களுடையவும் பலி"

**How the Lay Catholic should offer the Mass**

திவ்விய பூசை ஒரு பரிசுத்தமான, பிரசித்தமான ஆராதனை. அதிலே குருவானவரும் சாதாரண கிறீஸ்தவர்களும் தத்தம் அந்தஸ்துக்குத் தக்கவிதமாய் பங்குபற்றுகிறார்கள். திவ்விய பூசை குருவானவருக்கு மாத்திரம் உரியதல்ல எங்களுக்கும் உரியது என்று விசுவாசிகள் மதித்துக்கொள்ளவேணும். அதாவது நீங்கள் பூசைகாண்கிற அளவிலே மாத்திரம் அது உங்களுக்கு உரிமையானது என்று சொல்லுவது போதாது. அந்த அகோசர பலிக்கிருத்தியத்தை நீங்களும் ஒருவிதத்திலே குருவானவரோடுகூட நடப்பிக்கிறீர்கள். அதினாலேதான் பூசைபண்ணுகிற குருவானவர் அதை "என்னுடையவும் உங்களுடையவும் பலி" என்று சொல்லுகிறார். பூசைப்பலியைச் சருவேசுரனைத் தோத்திரிப்பதற்காகவும், பாவத்துக்குப் பரிகாரஞ்செய்வதற்காகவும் நமக்குத் தேவையான எல்லாவற்றையும் கேட்டு மன்றாடுகிறதற்காகவும் நாம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றியறிதலாகவும் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

திவ்விய பூசை குருவானவருடையவும் உங்களுடையவும் காணிக்கை. குருவானவரோடு ஒன்றித்து நீங்களும் இந்தப் பரிசுத்த பலியை ஒப்புக்கொடுக்கிறீர்கள். முதன்முதற் பூசைப்பலி நடந்த பெரிய வியாழக்கிழமையன்றுதானே நீங்களும் அப்போஸ்தலர்களோடுகூட கர்த்தருடைய இராப் போசனத்தில் பங்குபற்றுகிறீர்கள் என்று ஒருவிதத்திலே சொல்லலாம். அதெப்படியெனில் எங்கள் ஆண்டவர்தாமே குருவானவருடைய வாயினால் தேவவசீகர வார்த்தைகளை உச்சரிக்கிறதைக் கேட்கிறீர்கள். அவரை நீங்கள் உட்கொள்ளுகிறீர்கள். அம்மட்டோ! நீங்கள் ஆண்டவர் உங்களுக்காகப் பாடுபட்டு மரிக்கிற கல்வாரி மலையிலே

நிற்கிறீர்கள் என்றும் சொல்லலாம். ஆ! எத்தனையோ பேர் திவ்விய பூசையைக் குருமார் மாத்திரம் தனியே நடப்பிக்கிறார்களென்று நினைக்கிறார்கள். தாங்கள் அதைப் பார்த்துக்கொண்டு மாத்திரம் இருக்கவேணுமென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். பூசை ஒப்புக்கொடுப்பதிலே தங்களுக்குப் பங்கில்லை, அதைக் காணுவதுதான் தாங்கள் செய்யவேண்டுவது என்று அவர்கள் நினைப்பது தவறு.

எந்தப் பலியிலும் உட்கருத்தும், அதைக் காண்பிக்கும் வெளிக்கிருத்தியமும் இருப்பது அவசியம். எவ்வித பலியிலும் பலிப்பொருளை அழிக்கிற அல்லது மாற்றுகிற கிருத்தியமும், அதைக் காணிக்கையாக்குகிற கிருத்தியமும் ஆகிய இந்த இரண்டும் சேர்ந்திருக்கவேண்டும். பலிப்பொருளைக் காணிக்கையாக்குகிறதுதான் முக்கியம். இதைத்தான் திவ்வியபூசை காணும் விசுவாசிகள் பிரதானமாய்க் கவனிக்கவேண்டியது. திவ்விய பூசை ஒரு மெய்யான பலி என்பது விசுவாச சத்தியம். தேவ பலிப்பொருளான யேசுநாதர் தம்மைத் தாமே காணிக்கை ஆக்கும்போது நாமும் அந்தக் காணிக்கையிற் சேரவேணும். பூசைப்பலியைக் காண்கிற ஒவ்வொருவரும் அந்தக் காணிக்கையோடு ஒன்றிக்கவேண்டியவர்கள். குருவானவர் மாத்திரமே தேவவசீகரம்பண்ணுகிறவராயிருந்தபோதிலும், கிறீஸ்துநாதருடைய ஞானச் சரீரத்தின் உறுப்புகளாயிருக்கிற கிறீஸ்தவர்கள் எல்லோரும் அவரோடு சேர்ந்து கிறீஸ்துநாதருடைய தேவ பலியை எங்கள் காணிக்கையாகப் பிதாவானவருக்கு ஒப்புக்கொடுக்கிறோம். திவ்விய பூசைப்பலி திருச்சபையின் மேலான பிரசித்த ஆராதனை முறை. அது திருச்சபைக்கு உரிமையானது. ஆனபடியால் திருச்சபையின் மக்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையானது. நாங்கள் ஒவ்வொருவரும் கிறீஸ்துநாதருடைய பலியில் பங்குபற்றும்படியாகவே இந்த ஆராதனை முறை உண்டாக்கப்பட்டது. கல்

005473



வாரி மலையில் சிலுவையிலே அறையுண்டநாதரோடு ஒன்றித்து அந்தப் பலியைப் பரம பிதாவுக்கு ஒப்புக்கொடுக்க இந்நாட்களிலிருக்கிற எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகையால்தான் அந்தச் சிலுவைப் பலியோடு ஒற்றுமையுள்ளதான பூசைப்பலியைக் கர்த்தர் எங்களுக்காக ஏற்படுத்தியருளினார். பூசைப்பலியிலே சமுகமாயிருப்பதும் சிலுவைப்பலியிற் சமுகமாயிருப்பதும் ஒன்றுதான்.

திவ்விய பூசைப்பலியைக் குருவானவர் நடத்தும்போது அதை நாங்கள் பார்த்துக்கொண்டிருப்பது போதும் என்றிராமல் நாங்களும் அந்தப் பரம காணிக்கையிலே சேர்ந்துகொள்வதுதான் உத்தமமான விதமாய்ப் பூசைகாணும் முறையாம். குருவானவர் பூசைப் பாத்திரத்தில் இரசம் வார்த்தபின் அதிலே சில துளி தண்ணீரும் விடுகின்றார். இதற்குக் கருத்தென்ன? பலிப்பொருளானவரோடு எங்களுக்கு ஐக்கியம் உண்டென்றும் நாங்களும் அவரோடு எங்களைப் பலியாக ஒப்புக்கொடுக்கவேணும் என்றுமே இது காட்டுகின்றது. குருவானவர் திருப்பூசை முறையை ஆரம்பிக்குமுன் சபையைப் பார்த்து "ஒருத்தெ விருத்றெஸ்" சகோதரரே! என்னுடையவும் உங்களுடையவும் பலியானது, சருவேசுரனுக்கு உவப்பாய் இருக்கத்தக்கதாக மன்றாடுங்கள்" என்று சொல்லுகிறார். என்னுடையவும் உங்களுடையவும் என்ற சொற்களைக் கவனியுங்கள். இப்படியே முகவுரை தொடங்கும்பொழுதும் குருவானவருக்கும் விசுவாசிகளின் இடமாய் நிற்கின்ற பூசைப்பரிசாரகனுக்குமிடையில் ஒரு பரிசுத்த சம்பாஷணை நடக்கின்றது. இதைவிட வேறு பல செபங்களிலேயும் குருவானவர் பூசைகாணுகிற விசுவாசிகளையும் தம்மோடுகூடச் சேர்த்து நாங்கள் என்று பன்மையிலே சொல்லுகிறதைக் கவனிக்கலாம்.

கடைசியாக, சற்பிரசாத அனுபவிப்பு வருகிறது. அதுதான் குருவானவரைப்போல சாதாரண கிறீஸ்தவர்களும் பலியிலே

பூரணமாய்ப் பங்கு அடைந்தார்கள் என்று காண்பிப்பது. ஆனபடியால் பூசைகாணும் ஒவ்வொருவரும் சக்கிறமேந்து வழியாக அல்லது அதற்கு ஆயத்தமில்லாவிடில் ஞானவிதமாயாவது தேவநற்கருணை உட்கொள்ளக்கடவார்கள்.

சுருக்கிச் சொல்லுகில் பூசைப்பலியாவது திருச்சபை என்னும் ஞானச் சரீரத்தின் சிரசான யேசுக்கிறீஸ்துநாதர், அந்த ஞானச் சரீரத்தின் அவயவங்களோடு தம்மைத்தாமே ஓயாமல் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தல்தான் எனலாம்.

திவ்வியபூசை காண்கிற கிறீஸ்தவர்கள் செய்யவேண்டியது வேறு ஒன்று உண்டு. கிறீஸ்துநாதரோடும் அவருடைய பதிலாளியான குருவானவரோடும் சேர்ந்து சருவேசுரனுக்குத் தேவபலியை ஒப்புக்கொடுக்கிற விசுவாசிகள் தங்களையும் சருவேசுரனுக்கு உவந்த ஞானப்பலிகளாக ஒப்புக்கொடுக்கவேண்டியது. அதாவது தங்கள் ஆசாபாசங்களை ஒறுத்து அடக்கி எதிரிடைகளைப் பொறுமையோடு சகித்து தங்கள சீவியம் கடைசிபரியந்தம் ஒரு ஞானப்பலியாக இருக்கச் செய்யவேண்டியது. இந்த ஞானப் பலியைச் செலுத்துகிறவர்களைத்தான் அர்ச். இராயப்பர் பரிசுத்தமான சனம் இராச ஆசாரியக் கூட்டம் என்று பெயர் கொடுத் தழைத்தார். (1 இராயப். 2, 5)

(ஸ்ரீ விக்ரர் தம்பிநாயகம் இங்கிலீஷில் எழுதியது.)

Nihil Obstat:

S. GNANAPRAKASAR, O.M.I.

*Imprimatur:*

✠ J. A. GUYOMAR, O. M. I.

13-6-45.

St. Joseph's Catholic Press, Jaffna. 353-45

005473